ISSN 1800-3699

# இருக்கிறம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 5 - இருக்கை 9 ஒரு பொல்லாப்புமில்லை 01-15 ஜூலை 2010



## கிடைக்குமா தீர்வு ?

## ராவணன் டிக்கெட்டுக்கள் இலவசம்..!


50/-

## 'பெற்றோருடன் சேர்ந்து வாழ விரும்புறம். எங்களை விடுதலை செய்யுங்கள்'

## குமுறும் ஜோடிகள்

வினைத்திறன் மிக்க சேவை நிர்வாகம் மற்றும் பிரஜைகளின் ஆலோசனை பெறல் என்பவற்றினூடாக பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை என்பவற்றுடன் இணைந்து செயற்படும் ஒரு உயரிய அமைப்பே “இலங்கை ஆசிய நிலையம்” உள்ளூராட்சி சபைகளின் வெளிப்படையான தன்மையை மேம்படுத்தி, சிறந்த பொருளாதார வளர்ச்சியை பொதுமக்கள் அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதே ஆசிய நிலையத்தின் முக்கிய நோக்கமாகும்.




நியாயமான, சுதந்திரமான நீடித்து நிலைத்திருக்கும் உலகம். இதற்குத்தான் அபிவிருத்திக் கூட்டுறவுக்கான மனிதநேய நிறுவனம் **HIVOS** பங்களிக்க விரும்புகிறது. சகல பிரஜைகளும் அதாவது ஆண்களும், பெண்களும் அபிவிருத்திக்கான வாய்ப்புக்களையும், வளங்களையும் சம அளவில் அடையக்கூடியதான ஒரு உலகிற்காக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலுள்ள உள்ளூர் அமைப்புகளுடன் இணைந்து **HIVOS** பாடுபடுகிறது.

மனிதநேயப் பெறுமானங்களினால் வழிநடத்தப்படும் **HIVOS**, நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த அரச சார்பற்ற அமைப்பாகும். இவ்வமைப்பு ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவிலுள்ள வறிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உழைக்கிறது. இம் மக்களது சூழ்நிலைகளின் நீண்டகால அபிவிருத்திக்காகவும், குறிப்பாக பெண்களை வலுப்படுத்தவும் இது பாடுபடுகிறது.

# இருப்பு



Free Issue
Irukkiram

"இளசும் பழசும்
இருப்பிறகாய்......"


காசுமேல காசு வந்து..! 08

'தெரிந்த ராமனைவிட தெரியாத ராவணன் எவ்வளவோ மேல்!' 20

பரிபூரணத்தின் தொலை 22

வேர்பாய்ந்த விழுதுகள் 38



ஒரு பொல்லாப்புமில்லை

# இருக்கிறம்

மாதம் இருமுறை

இதழ் 57

காத்திருப்பு 05 - இருக்கை 09



#3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 11 3150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
மின்னஞ்சல் irukiram@gmail.com



நிர்வாக ஆசிரியர் : சாந்தி சச்சிதானந்தம்

இணை ஆசிரியர் : அருளானந்தம் சஞ்ஜீத்

கார்ட்டூன் : சஞ்ஜீத்

வடிவமைப்பு : சோ.விபுலன்
செ. ஜெயதேவன்
சி.திவாகரன்

கணனி தட்டச்சு : எஸ். சதீஸ்



கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.

# பதிப்பகத்தார்

பிரபல அமெரிக்க எழுத்தாளரும் நாடகாசிரியரு மான ஆர்தர் மில்லர் "ஃபோக்கஸ்" என்றொரு நாவலை எழுதினார். யூதர்களுக்கெதிரான இன வாதத்தை மிகவும் நுண்ணுணர்வோடு காட்டிய படைப்பு இது எனலாம். இரண்டாம் உலக யுத்தத் திற்குப் பின்னர் நியூயோர்க்கில் வாழ்ந்த ஒரு கம்பனி எக்ஸெகெடிவ் நியூமானைப் பற்றிய கதைதான் ஃபோக்கஸ். தனது அயலில் வாழ்ந்த யூதர் சமூகத்திற் கெதிராக நிகழ்ந்த ஒடுக்குமுறைகளைப் பற்றி அக்கறைப்படாமல் இருந்த நியூமான் கண்பார்வை குறைவுக்கான கண்ணாடி ஒன்றை அணியத் தொடங்க அவனுடைய முகத்தில் யூதர் இனத்தவரின் சாயல் தென்படத் தொடங்குகின்றது. அந்த நாள் முதல் எவ்வாறு அவனுடைய வாழ்க்கையே மாறுகின்றது என்பதுதான் கதை. ஒரு யூதன் எப்படி உணரு கின்றானோ அந்த அனுபவங்களெல்லாம் முதன் முத லாக நியூமானுக்கு ஏற்படத் தொடங்குகின்றன. சென்ற இடமெல்லாம் ஒரு யூதனாகப் பார்க்கப்பட்டு சின்னச் சின்னப் பாகுபாடுகள் தொடக்கம் பாரிய விடயங்கள்வரை எண்ணற்ற ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகின்றான்.

எந்த நிலைமையும் நமக்கு ஏற்பட்டால்தான் அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணமும் விளங் கும் என்பதுதான் இந்தக் கதையின் அடிப்படையாகும். அத்துடன், ஒரு முழு வெள்ளை அமெரிக்கனானவன் சாதாரண மூக்குக் கண்ணாடி மூலமாகவே ஒரு யூதனாக்கப்படுவதிலிருந்து இந்தப் பாகுபாடுகளின் மேலோட்டமான (superficiality) தன்மை பற்றி வாசகர்களுக்கு உணர்த்துகின்றார். எங்கும் எப்பொழுதும் ஏதாவதொரு "வித்தியாசத்தை"த் தூக் கிப் பிடித்து அதற்காகவே பிரிவினைகளை உருவாக்கு வதும் அதை வைத்தே ஒரு ஒடுக்குமுறைக் கலாசாரத் தைப் பேணுவதும் எங்களது சமூகங்களுக்கு அத்தியாவசியமான நடத்தை போலும். ஏதாவது வித்தியாசத்தை மனிதர்கள் மத்தியில் முதலில் கற்பிக்க வேண்டும். பின்பு அதை வைத்து மனிதர்களை விலக்கி வைப்பதையும் பாகுபாடுகள் காட்டுவதையும் ஒடுக்கு வதையும் செயற்படுத்த வேண்டும். மதம், சாதி, இனம், மொழி இப்படி எத்தனையோ பிரிவினைகள் இப்படி விலக்கி வைப்பதற்காக உபயோகிக்கப்படுகின்றன. இவையெல்லாம் நாம் வெளிப்படையாகப் பேசும் "வித்தியாசங்கள்". நாம் பேசா "வித்தியாசங்களும்" உண்டே. அவற்றில் மிக முக்கியமானவைதான் மனிதர் களின் பால் நடத்தைகள்.

இயற்கை நடத்தை என்று நாம் கருதக்கூடிய ஆணும் பெண்ணும் கலவியில் ஈடுபடும் பால் நடத்தை ஒருபுறமிருக்க, தற்பாற்புணர்ச்சியில் ஈடுபடும் ஆண் களும் பெண்களும் மற்றும் அரவாணிகளும் ஏராள மாக எம்மத்தியில் இருக்கின்றனர் என்பது எமக் கெல்லோருக்கும் நன்றாகவே தெரியும். எங்களது புராணங்களில்கூட இந்த விதமான மனிதர்கள் பற்றிப் படிக்கின்றோம். மகாபாரதத்தில் அஞ்ஞாதவாசத்தின் போது அர்ச்சுனன் ஒரு அரவாணியாக வேடம் போடு கின்றான். காலந்தோறும் வாழ்ந்த மிக அருமையான கலைஞர்கள் அனேகமானோர் ஓவியர்கள், எழுத்தாளர்கள், நாடகாசிரியர்கள் தற்பாற் புணர்ச்சியில் ஈடுபட்டவர்களாக இருந்திருக்கின்றனர். அதைப்பற்றி ஆராய்ந்து கொண்டு போனால் ஏதோ புத்தாக்க இயல்பும் தற்பாற்புணர்வு நிலையும் சாடியும் மூடியும் போன்ற மனித நடத்தையோ என்று எண்ணத்தான் தோன்றும். இப்படி இவ்வகையான வித்தியாசமான பால் நடத்தைகள் நம்மத்தியில் ஆண்டாண்டு காலமாக இருந்திருந்தும்கூட அவற்றுக்கு சமூகம் அங்கிகாரம் வழங்காததால் அவற்றைக் கொண்டவர்களின் மனித உரிமைகளை நாம் அப்பட்டமாக மீறுபவர்களாக உருமாறியிருக் கின்றோம்.

முதலாவதாக, அவர்கள் தங்களைப் பகிரங்கப் படுத்த முடியாதவர்களாக ஒளித்து வாழ்கின்றனர். அவர்கள் எதற்காக அப்படி வாழவேண்டும்? யாருக் கும் எவருக்கும் அவர்கள் தீங்கிழைக்கவில்லையே. ஆக தமக்கு விருப்பமான பால் நடத்தையையும் வாழ்க்கை முறையையும் தெரிவு செய்திருக்கின்றனர். அவ்வளவுதான். இதற்கே சமூகம் அவர்களைப் பழி வாங்கப் பார்க்கின்றது. அடுத்ததாக எங்களது பொதுச் சட்டங்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரு ஆணும் ஆணும் அல்லது ஒரு பெண்ணும் பெண்ணும்



# சமூகம் ஏற்றுக்கொள்ளாத மானுட சகவாழ்வு!




தம்பதிகளாக இருக்கலாம் என்பது ஒப்புக்கொள்ளப் படவில்லை. இலங்கைக் குற்றவியல் சட்டம் பிரிவு 365ஏ ஓரினச்சேர்க்கையை ஒரு குற்றமாகக் கருதுகின்றது. இதில் ஈடுபடுவதற்காக இவர்கள் காவல் துறையினரால் தடுத்து வைக்கப்படலாம். இதனால் பல விளைவுகள். உதாரணமாக ஓரினச் சேர்க்கையில் வாழும் தம்பதியர் மத்தியில் குடும்ப வன்முறைப் பிரச்சினைகள் ஏதும் ஏற்பட்டால்கூட அவர்கள் சட்டத்தை நாடமுடியாத நிலைதான் உள்ளது. ஒருவர் இறந்தால் அவருடைய வாழ்க்கைத் துணைக்கு சொத்துரிமையில் முதலிடம் கொடுக்கும் சட்டம் ஓரினச் சேர்க்கைத் தம்பதிகளுக்கு மட்டும், அவர்கள் எத்தனை வருடங்கள் ஒன்றாக வாழ்ந்திருந்தும் அப்படி எந்த முன்னுரிமையையும் வழங்கவில்லை. அப்படியான சந்தர்ப்பங்களில் இறந்தவரின் பெற்றோர்கள் மற்றும் சகோதரர்கள் மனம் வைத்தால்தான் அவரது வாழ்க்கைத் துணைக்கு நீதி கிடைக்க முடியும்.

அது மட்டுமா? சாதாரணமாக கணவன் மனைவி இருவரும் வீட்டு லோனுக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால் ஓரினச் சேர்க்கைத் தம்பதிகள் வீட்டு லோனுக்கு விண்ணப்பிக்க இயலாது. ஒரு குடும்பம் என்றால் அப்பா, அம்மா, பிள்ளைகள், சகோதர சகோதரிகள் என்று மட்டும்தான் கருதப்படுவதால் ஓரினச் சேர்க்கைத் தம்பதிகளுக்கு உப கடன் அட்டைகளும் வங்கிகளினால் வழங்கப்பட மாட்டாது. இதில் வேடிக்கை என்னவென்றால் வேறு நாடுகளில் ஓரினச் சேர்க்கைத் தம்பதிகளை அங்கீகரிக்கும் கொள்கை உடைய எச்எஸ்பிசி போன்ற சர்வதேச வங்கிகள் இலங்கையில் வந்து வேறு கொள்கைகளைப் பின்பற்றுவதுதான். தனியாக வாழும் ஒரு ஆணோ பெண்ணோ பிள்ளைகளைத் தத்தெடுத்துக் கொள்ளலாம். ஆனால் ஓரினச் சேர்க்கைத் தம்பதியர்கள் பிள்ளைகளைத் தத்தெடுத்துக் கொள்ள முடியாது. இப்படி ஃபோக்கஸ்ஸில் வரும் நியூமானைப்போல நாமும் அவர்கள் நாற்காலியில் உட்கார்ந்தால்தான் அவர்களுடைய கஷ்டங்களை உண்மையாகவே உணரலாம்.

இதெல்லாம் மேற்குலகக் கலாசாரங்கள் என்றும் எங்கள் மத்தியில் வலுக்கட்டாயமாகப் புகுத்தப் படுகின்றன என்றும் அபிப்பிராயங்கள் நம்மவர்கள் மத்தியில் உண்டு. அப்படி எண்ணுபவர்களுக்கு இதையும் நாங்கள் காட்டலாம். 2009ம் வருடம் மாதம் இந்திய மேல்நீதிமன்றம், ஓரினச் சேர்க்கையை ஓர் குற்றமாகக் கருதும் இந்திய குற்றவியல் சட்டத்தின் பிரிவு 377ஐ மனித உரிமைகளை மீறுவதாகத் தீர்ப்பளித்தது. 2007ம் ஆண்டு நேபாலிய உயர் நீதிமன்றம் அப்பொழுது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட புதிய ஜனநாயக அரசு ஓரினச் சேர்க்கையாளர்களினதும் அரவாணிகளினதும் மனித உரிமைகளைப் பூரணமாகப் பாதுகாப்பதற்காக புதிய சட்டங்களை உருவாக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தது. 2009ல் கென்யாவில், அதன் புதிய அரசியல் யாப்பு வரையப்படுவதற்கு முன்னர் அதன் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது பாலின, பால் நடத்தை குறித்த பாகுபாடுகள் எதுவுமின்றி சகலரும் சம உரிமைகளுடனும் பூரண பிரஜா உரிமைகளுடனும் நடத்தப்படுவதற்கான அடிப்படைச் சட்டங்கள் உருவாக்கப்படவேண்டுமென்று பரிந்துரைத்தது. ஒரு பாரம்பரிய கத்தோலிக்க நாடான போர்த்துக்கல்லிலும்கூட, 2010ம் ஆண்டு ஓரினச் சேர்க்கைத் திருமணங்கள் சட்டபூர்வமாக்கப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவில் பல மாநிலங்களில் ஓரினச் சேர்க்கைத் திருமணங்கள் சட்டபூர்வமாக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. இவ்வாறு மேற்கு நாடுகளும் கிழக்கு நாடுகளும் மனித உரிமைகளை அங்கீகரிக்கத் தொடங்கியிருக்கின்றன. தென்னாபிரிக்காவின் அரசியலமைப்பு நீதிமன்றின் நீதியரசர் எட்வின் கமரூன் அவர்கள் ஒருமுறை சொன்னார் 'ஒரு சமூகம் மானுடத்தை அதன் பூரணத்துவத்துடன் எவ்வளவு நோக்குகின்றது. சமத்துவத்திற்கும் நீதிக்கும் நடுநிலைமைக்கும் மானுட சக வாழ்வுக்கும் எவ்வளவு அர்ப்பணிப்பு நல்கின்றது என்பதையெல்லாம் அது ஓரினச் சேர்க்கையாளர்களை அங்கீகரிக்கும் தரத்தை வைத்தே அளந்து விடலாம்' இப்படிப் பார்த்தால் இலங்கை எங்கோ பின்னோக்கி நிற்கின்றதே!

'Admittance of gays and lesbians is the ultimate measure of a society's capacity to view humanity in its fullness and of its commitment to equality, justice, secularism and humane co-existence' - Justice Edwin Cameron of South Africa's Constitutional Court.



# 'பெற்றோருடன் சேர்ந்து வாழ விரும்புறம். எங்களை விடுதலை செய்யுங்கள்'

## குமுறும் ஜோடிகள்



யாத்ரா

இறுதிக்கட்ட மீட்பு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் அநாதைகளாய் உறவுகளைப் பிரிந்து இன்னமும் அகதி முகாம்களிலும் மீள்குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களிலும் காலங்களைக் கழித்தவண்ணமிருக்கிறார்கள். இவர்களைப் போலவே யுத்தத்தில் சிறைப்பிடிக்கப்பட்ட சுமார் பத்தாயிரம் போராளிகள் நலன்புரி நிலையங்களில் தமது வாழ்க்கைக்கான உத்தரவாதத்துக்காகவும் நிரந்தரமான நிம்மதிக்காகவும் தினம் தினம் ஏக்கத்துடனேயே வாழ்ந்து வருகிறார்கள். சுற்றிவர போடப்பட்டுள்ள முட்கம்பி வேலிகளுக்கு மத்தியில் தமக்கும் ஒரு விடிவுகாலம் வராதா? தாமும் ஏனைய மக்களைப்போல் சுதந்திரமாக வாழ முடியாதா? என்ற எதிர்பார்ப்புடன் இவர்களது நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. இந்நிலையில் கடந்த மாதம் நடுப்பகுதியில் முன்னாள் போராளிகளில் 53 ஜோடிகளுக்கு நடைபெற்ற திருமண நிகழ்வுபற்றி ஊடகங்கள் வாயிலாக அறிந்திருப்பீர்கள். ஐஃபா திரைப்பட விழா தோல்வியடைந்ததன் பின்னர் அவசர அவசரமாக சர்வதேசத்தில் நற்பெயரொன்றைப் பெறும் நோக்கில் அரசாங்கம் இந்த திருமண நிகழ்வை நடத்தியிருப்பதாகவே அவதானிகள் தெரிவிக்கின்றனர். அந்நிகழ்வுக்கு சென்றிருந்தபொழுது பல ஆச்சரியமான தகவல்களை எம்மால் திரட்ட முடிந்தது. பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அந்த ஜோடிகளுடன் உரையாடும் சந்தர்ப்பம் எமக்கு கிடைத்தது. ஆனாலும் எவருமே தமது பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. மிகவும் பயந்த நிலையிலே எங்களுடன் உரையாடினர்.

வவுனியாவில் பம்பைமடு என்னும் பிரதேசத்தில் அமைந்துள்ள நலன்புரி முகாம் ஒன்றின் பரந்த மைதானத்திலே புனர்வாழ்வுக்குப் பொறுப்பாக இருக்கும் படைத்துறை அதிகாரியான பிரிகேடியர் சுதந்த ரணசிங்கவின் தலைமையிலே இந்நிகழ்வு நடைபெற்றது. இந்த பம்பைமடு நலன்புரி முகாமில் கிட்டத்தட்ட 500க்கும் மேற்பட்ட முன்னாள் பெண்போராளிகள் புனர்வாழ்வளிக்கப்பட்டு வருகின்றார்கள். இந்த மைதானத்தில் ஒருபக்கம் மணப்பந்தல் அமைக்கப்பட்டு மேடைபோடப்பட்டிருந்தது. அதிலிருந்து சுமார் 100 மீற்றர் முன்பாகவுள்ள மறுபக்கத்தில் முன்னாள் போராளிகள், மணமக்களின் பெற்றோர் அமர்ந்திருந்தனர். இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் திருமணம் முடியும்வரை பெற்றோர் எவரும் தமது பிள்ளைகளை பார்க்க அனுமதிக்கப்படவில்லை. திருமணம் முடிந்தபின்னரே பெற்றோர்களை மணமக்கள் சென்று பார்வையிட அனுமதி வழங்கப்பட்டது.

திருமண பந்தத்தில் இணைந்துகொண்ட ஜோடி ஒன்றிடம் நைசாக பேச்சுக் கொடுத்தோம். ஆரம்பத்தில் அவர்கள் எதுவுமே பேச மறுத்து விட்டனர். நாங்கள் வற்புறுத்தவே 'நாங்கள் இதை கொஞ்சமும் எதிர்பார்க்கேல்ல. எங்களுக்கு இந்தத்




திருமணத்தைவிட பெற்றோருடன் சேர்ந்து வாழவிரும்புறம். எங்களை விடுதலை செய்யுங்கள். கல்யாணம் நடந்தது சந்தோசம். ஆனால் முகாமிலிருந்து எங்களை விடுதலை செய்யோணும்' என்று சுற்றும் முற்றும் பார்த்தவாறே கூறினர்.

நாமல் ராஜபக்ஸ, இந்தி நடிகர் விவேக் ஒபராய், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ரிசார்ட் பதுர்தீன் ஆகியோருடன் பல அரசாங்க அமைச்சர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தியதுடன் சாட்சிக் கையெழுத்தும் இட்டனர். சாய்பாபா அமைப்பு, அம்மா பகவான் அமைப்பு, இந்துமத குருமார் ஒன்றியம் ஆகியன ஒன்று சேர்ந்து திருமணங்களை நடத்தி வைத்திருக்கின்றன. 42 இந்து மணமக்களுக்கும் 11 கிறிஸ்தவ மணமக்களுக்கும் அவரவர் மத முறைப்படி திருமணம் செய்து வைக்கப்பட்டது. நாமல் ராஜபக்ஸ ஒவ்வொரு ஜோடிக்கும் புதிதாக வங்கிக்கணக்கு ஆரம்பித்து தலா 10,000 ரூபா வழங்கியிருந்தார்.

இன்னுமொரு ஜோடியிடம் உரையாடிய பொழுது 'எங்களுக்கு இந்த முகாமைவிட்டு வெளிய போகத்தான் விருப்பம். 2 வருசம் அமைப்பில இருந்தம். இப்ப ஒரு வருசமா முகாமில இருக்கம். நாங்கள் லவ் பண்ணித்தான் இருந்தம். ஆனா எங்கட கலியாணம் எங்கட பெற்றோரோட, சொந்தங்களோட வீட்டில நடக்குமெண்டு நினைச்சம். ஆனா இப்படி நடந்திட்டுது' என்றனர். அவர்கள் முகத்தில் காதலித்தவரை கைப்பிடித்த சந்தோசத்தைவிட எதிர்பாராத ஒரு அதிர்ச்சியை உணர்ந்த பயத்தையே காணக்கூடியவாறு இருந்தது.

வன்னிப் போர் முடிவடைவதற்கு முன்னரே இவர்களுக்கிடையிலான உறவுகள் ஏற்பட்டிருந்ததாகவும், அத்துடன் அவர்கள் வாய் மூல உறுதிமொழி மூலம் திருமணம் செய்திருந்ததாகவும், ஆனால் சட்டபூர்வமாக திருமணம் செய்திருக்கவில்லை என்றும் இராணுவத்தரப்பினர் சிலர் எங்களிடம் தெரிவித்தனர்.

அங்கிருந்த எல்லா ஜோடிகளும் இதே நிலையில் தான் இருந்தனர். புதிதாக மக்கள் கூட்டத்தினரை பார்ப்பதுபோல அவர்களின் பார்வை வெறித்துப் போய் இருந்தது. காதல் திருமணம் என்று அரச அதிகாரிகள் கூறினாலும் அவர்களுடைய இருப்பு, நடத்தைகள் வித்தியாசமாகவே இருந்தன. அருகிலிருந்த தனது ஜோடியுடன்கூட உரையாடாமல் பிதாமகன் ரேஞ்சுக்கு இருந்தது மனதை நெருடியது.

'நான் இடம்பெயர்ந்து வரேக்க என்னோட கூட ஒடிவந்தவ இவ. இராணுவ முகாமில பதியேக்க பாதுகாப்புக்காக ரெண்டு பேரும் திருமணம் செய்திட்டதா பதிஞ்சனாங்கள். பிறகு ஒருத்தரையொருத்தர் பிரிஞ்சிட்டம். அவ வேற முகாமில நான் வேற முகாமில. அந்த பதிவை வைச்சுதான் இப்ப எங்களுக்கு நடத்தி வைச்சவங்க. எங்களுக்கு இப்ப விடுதலைதான் தேவை' என்றார் ஒரு மணமகன்.

அங்கிருந்த முன்னாள் பெண்போராளி ஒருவருடன் பேசினோம் 'இங்கு 1 வருடம், 2 வருடம் இயக்கத்திலிருந்தவர்களும் 5 நாட்கள் இயக்கத்தில் இருந்தவர்களும் இருக்கின்றார்கள். கணனி மற்றும் தையல் படிப்பிக்க வசதி செய்து தந்திருக்கின்றனர். ஒவ்வொரு சனி ஞாயிறும் 2 மணிக்கு மேல் பெற்றோர் வந்து பார்க்க அனுமதியிருக்கின்றது. எங்களுக்கு எங்களுடைய பெற்றோருடன் சேர்ந்து வாழ விருப்பமாகவிருக்கின்றது' என்றார்.

திருமணம் முடிந்தபின் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்றை நடாத்தினார்கள். அதில் 'இவர்களுக்கு தனித்தனியாக வேறு முகாம்கள் வழங்கப்படும். கல்வி, தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு காலப்போக்கில் இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். ஆனால் கிட்டத்தட்ட 3 வருடகாலம் செல்லும்' என்றார் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க. திருமண நிகழ்வு முடிய ஆடல், பாடல், கேளிக்கை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. விடுதலைப்புலிகளின் ஆஸ்த்தான பாடகர்களில் ஒருவராக இருந்த எஸ்.பி. சாந்தன் பக்திப்



பாடலொன்றைப் பாடினார். இங்கு இருந்த அனைவரது கேள்வியுமே எப்பொழுது எம்மை விடுதலை செய்வார்கள்? என்பதுதான். ஆனால் அரசாங்கத்தரப்பினரோ சரியான முடிவைக் கூறாமல் வெறும் உறுதிமொழிகளையே கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கு வந்திருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மணமக்களும் சக பெண்போராளிகளும் கண்ணீர் மல்க தங்களை விடுதலை செய்யும்படியும் அப்படியில்லாவிட்டால் தங்களை சொந்த ஊரிலாவது முகாம்களில் விடுமாறும் கேட்டனர். ஆனால் அவரோ வெகு கூலாக 'வடக்கில் 4 ஆடைத் தொழிற்சாலை திறக்க இருக்கிறம். 10, 15 ஆயிரம் சம்பளம் கிடைக்கும். அதுக்கு உங்கள எடுத்து பயிற்சி குடுப்பம். ஜனாதிபதி இந்தியாவுடன் பேசியிருக்கிறார். அங்கு சொன்னதைவிட அதிகமாகவே உங்களுக்கு உதவும்' என்றார்.

திருமண சந்தோசத்தைவிட விடுதலையே இவர்களுடைய எதிர்பார்ப்பாக இருக்கும்போது இன்னும் இடம்பெயர்ந்தவர்களையும் கைது செய்யப்பட்டவர்களையும் முகாம்களில் வைத்துக் கொண்டு புரோக்கர் வேலை பார்த்து என்ன பிரயோசனம்? இன்னும் முழுமையாக மீள்குடியேற்றம் செய்யப்படாத நிலையிலும், மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களுக்குக்கூட ஒழுங்கான வசதி செய்து தரப்படாத நிலையிலும் இவ்வாறான திருமண நிகழ்வு தேவைதானா?

திருமணம் செய்துவைத்து அவர்களுடைய வாழ்க்கையை அர்த்தப்படுத்தியிருப்பது உண்மையிலேயே நல்லவிடயம்தான். இருந்தாலும் இவர்கள் விடுதலை செய்யப்பட்டு அவர்களுடைய பெற்றோருடன் சேர்ந்து வாழவேண்டும். அவர்களுக்கு நல்ல தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். திருமணத்தை மட்டும் முடித்து வைத்து விட்டு மீண்டும் முகாம்களுக்குள் தள்ளிவிடுவதென்றால் அது என்ன வகையில் நியாயம்?

இது இதய சுத்தியுடன் நடத்தப்பட்ட நிகழ்வாகத் தெரியவில்லை. சர்வதேசத்திற்கு நல்லபிள்ளை வேசம் போடும் அரச நாடகத்தின் மற்றுமொரு அங்கமே இது. இங்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளும் நல்லெண்ண வெளிப்பாடுகளும் தொடர்ந்து அவரவர் மனங்களில் நிலைத்திருக்குமா? தொடர்ந்து அவை புதிய செயல் வடிவம் பெறுமா? பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.





## விடுதலை வேண்டியவர்களுக்காய்....

வணக்கம் வாசகர்களே!

கடந்து போன தசாப்தங்களின் வலிமிகுந்த நினைவுகள் மீண்டும் மீண்டும் எமது மனங்களின் மையப்புள்ளியில் தோன்றி மறைந்த வண்ணமேயிருக்கின்றன. நம்பிக்கைகள், நயவஞ்சகங்களால் நாசமாக்கப்பட்ட தருணங்களால் நாதியற்று நிற்கும் எம்மவர்களின் நிலை வேதனைமிகுந்த நாட்களை எண்ணியவாறே கரைகின்றது.

போர்க்குற்றங்கள் தொடர்பான அழுத்தம் அரசின் கழுத்தை இறுக்கிக் கொண்டு நிற்கின்ற இவ்வேளையில் கழுத்தை வெட்டினாலும் சிக்கல், கயிற்றை வெட்டினாலும் சிக்கல். ஆனால் கயிற்றை தளர்த்தும் முயற்சிதான் அரசாங்கம் செய்துவைத்த திருமண விழா. ஒரு வருடத்திற்கும் மேலாக எந்தவொரு நிலையான தீர்வுமின்றி இன்னமும் முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கின்ற பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகளில் 53 ஜோடிகளுக்கு திருமணம் செய்து அதை உலகளவில் பிரச்சாரம் செய்து, சாட்சியங்களைத் தேடும் சர்வதேசங்களுக்கு சாட்டையடி கொடுத்திருக்கின்றது அதிகாரத்தரப்பு.

நிலையான வாழ்விடமோ, நிச்சயமான தொழில்வாய்ப்போ, நிம்மதியான வாழ்க்கையோ வழங்கப்படாமல் திருமணத்தைக் கட்டிக்கொடுத்துவிட்டு மீண்டும் முகாம்களுக்குள் அடைத்துவிடுவதென்றால் அப்படியொரு திருமணத்தில் அர்த்தப்பட எதுவுமேயில்லை.

இருமனங்களும் ஒன்றுசேர, உற்றவர் கைபிடித்து, பெற்றோர் உறவினர் ஆசிர்வாதத்துடன் மங்களகரமாக நடைபெற வேண்டிய திருமணத்தை வந்திருந்த பெற்றோர்கூட அருகில் சென்று பார்க்க முடியாமல் சுற்றிவர சப்பாத்துக் கால்களுக்கும் இரும்புகளைத் தாங்கிய கரங்களுக்கும் மத்தியில் அமைச்சர்களும் அரசதரப்பினர்களும் தத்தம் 'மாசற்ற' கரங்களால் ஆசீர்வதித்து நடத்தி வைத்திருக்கின்றனர்.

நிச்சயமற்றுப்போன இவர்களது வாழ்க்கை இந்த இணைப்பால் அர்த்தம் பெற்றிருக்கின்றதென்னவோ உண்மைதான். இருந்தாலும் இதை வெறும் பிரச்சாரமாக கொள்ளாமல் மனித உணர்வுள்ளவர்களாய் இவர்களின் விடுதலையை துரிதப்படுத்துவது அரசின் கடமையல்லவா?

காலங்காலமாக வாக்குறுதிகளின் பல பரிமாணங்களையும் கண்டு நம்பிக்கையென்னும் தொடக்கப் புள்ளியில் நடைபிணங்களாய் வாழும் எம்மவர்களின் இருப்பு முடிவில்லாப் பயணமாக பயணித்துக்கொண்டேயிருக்கின்றது.

விரும்பியோ விரும்பாமலோ திருமண பந்தத்துக்குள் இணைந்துகொண்ட இந்த ஜோடிகளின் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகவேண்டும். மனித சமுதாயத்தில் இவர்களும் ஒரு அங்கமாக இணைக்கப்படவேண்டும். பகடைக்காய்களாக்கப்பட்டு பழிவாங்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்ற நிலை மாற வேண்டும். உணர்வுகளையும் உறவுகளையும் இழந்து நிற்கின்ற இவர்களுக்கு இந்தத் திருமணம், இனிவருங்காலங்களையாவது எமது இருப்புக்கான காத்திருப்பாக மாற்ற வேண்டும்.


விடுதலைக்காய் வாழ்ந்தவர்களுக்கு விடுதலையும் சகவாழ்வும் விரைவில் கிடைக்குமென்ற நம்பிக்கையுடன்...

ஆசிரியர்



இருக்கிறம்
01 - 07 - 2010

“சனங்களை அகதிகளாக்கினதும்
ஒரு வெற்றி தானே!”



வீடே அல்லோலகல்லோலப்பட்டுட்டுது. சுவீப் விழுந்தமாதிரி பதினெட்டு லட்சம் சுளையா வரப்போகுது. சொத்தைப் பல்லென்று பல்லு டாக்குத்தர் தோண்டி எடுத்த மூண்டு பல்லு நீங்கலா(நீங்கலா எண்டு வைச்சுக் கொள்ளலாம்) மிச்சப் பல்லெல்லாம் தெரிய, கனநாளுக்குப் பிறகு தங்கச்சி அமலாடா முகத்தில சிரிப்பு'டிஸ்கோ' ஆடுது.

விஷயம் வேறொன்றுமில்லை. அறுவான், அழிஞ்சு போவான், குரங்கன், குழுமாடு, பாழ்படுவான், பறப்பான், பரதேசி, தடிமாடு, தறுதலை, காவாலி, கழிசடை, நாசமறுப்பான், நட்டாமுட்டி, மூதேவி எண்டின்ன பிற அகராதி காணாத பட்டப் பெயர்களை ஊர்ப்பெரிசுகளின், பெண்புரசுகளின் வாயிலாக தனதாக்கிக் கொண்ட 'சுழி' எண்ட காரணப் பெயர் கொண்ட தங்கச்சி அமலாட குலக்கொழுந்து - குடும்ப விலக்கு(லகர ளகர பிழையில்லை) சீமந்தபுத்திரன் ஒரு பெரிய சாதனை செய்துபோட்டான்.

இந்த இடத்தில எங்கிட 'சுழி' யைப்பற்றி கொஞ்சம் பொழிப்பா சொல்லக்கிடக்கு. பின்னால பிறந்த இரண்டு தங்கச்சிமாரை குட்டியிருத்தி கிடிகலங்க வைக்கவெண்டு முன்னாலையே முள்முருக்கம் கண்டு போல (அக்காட பாஷையில கருவேப்பிலை கண்டுபோல ) பிறந்து துலைச்ச பிசாசுதான் சுழி. வீட்டுக்கு ஒரேபொடி.




நகைச்சுவை கதை

# காசுமேல காசு வந்து..!

G.P. வேதநாயகம்

தேப்பனில்லா பெடியளை தாய்மார் செல்லம் குடுத்து சீரழிக்குமாப்போல களவு, பொய், குடி, சூது எண்டு அவன் ஆயகலைகள் அறுபத்துநாலையும் படிச்சுத் தேறி சுழியப் பக்கு வப்பட வைச்ச பெருமை தங்கச்சி அமலாவைத்தான் சேரும். செய்யாத அட்டாதுட்டியெல்லாம் செய்து நாளுக்கொரு வம்பும் ஆளுக்கொரு வழக்குமா தாயை படாதபாடு படுத்தி அவளை பாயும் படுக்கையுமாக் கிடத்தின பெருமை சுழியைத் தான் சேரும்.

கடுக்கண்டாப் புறகு உள்ள கள்ளுக் கொட்டில்களை எல்லாம் கலக்கியடிச்சு, வீட்டிலையும் பீங்கான் கோப்பையளப் பறக் கடிச்சு அட்டகாசம் பண்ணி ஒரு ஆம் பிளை இல்லாத குறையை தீர்த்து வைச்சதிரன் சுழி. 'நான் வெளி நாடு போற துக்கு காணி அடகுவச்சி

இப்ப காசைத் தர வேணும். அல்லாட்டி நஞ்சுக் குளிசையைப் போட்டு இந்தா சாகப் போறன்' எண்டு விற்றமின் குளிசையைக் காட்டி வெருட்டி, நாண்டு கொண்டு நிண்டு தாயை 'சறண்டர்' ஆக வச்ச தீரன் அவன்.

எப்பிடியோ எமனை பச்சடி போடுற ஏசண்டுக் காறரிட்டையும் ஏமாறாமல் எயார்போட்காறனுக்கும் 'பெப்பே' காட்டிப்போட்டு பொடி பிரான்சுக்கு போய்ப் பறிஞ்சது ஆறுமாசத்துக்கு முந்தி நடந்த கதை. ஆறுமாசமா நசுக்கிடாம இருந்திட்டு இப்ப இருந்த வாக்கில முள்ளங்கி வத்தையைப் போல முழுசா பதினெட்டு இலட்சமும் சொச்சமுமா 'பொறுக்கி' அனுப்பிவச்சிருக்கிறானெண்டால் நம்பத்தான் ஏலுதில்லை. எந்தப் புத்தில எந்தப் பாம்போ? ஆற்ற ATM காட்ட சுத்தி வறுகினதோ.

அண்ணன் எண்டிருந்தாலும் எனக்கும் ஆயிரம் அல்லை தொல்லையள். வீட்டுக்கு வீடு வாசல் படிதானே. என்ர வீட்டிலயும் ஒரு தேவாங்கு ரியூட்டறி வழிய போய் பெஞ்சுகளைச் சூடாக்கி என்ர சூட்டைக் கிளப்புறதுக்கெண்டு வந்து பிறந்திருக்கு.

'உள்ளூரில உழாத மாடு வெளியூரில போய் என்னத்தை வெட்டிமுறிக்கப் போகுதாம்' எண்டுதான் நானும் நினைச்சுக்கொண்டிருந்தனான். ஆனால் இப்ப விஷயம் வேறமாதிரி போயிற்றுது. போனவன் என்னவோ வெட்டி புடுங்கிற்றான். 'அவரும் இல்லாத வீட்டில உங்களை விட்டால் எங்களுக்கு ஆர் அண்ணை?' எண்டு தங்கச்சி வந்து நிண்டு கண்ணை கசக்கேக்க 'பாசமலர்' றேஞ்சுக்குப் பாயாட்டிக்கும் கொஞ்சமெண்டாலும் சதை ஆடத்தானே செய்யும். பெடி வெளிநாடு போனாப்புறகு கொழும்போட வந்து எண்ணாயிரம் ரூபா வாடகை குடுத்து ஒரு எலிப் பொந்தில கட்டுமட்டாச் சீவிக்கிற தங்கச்சிக்கு பதி னெட்டு லட்சம் வருகுதெண்டவுடன் stroke வராத குறை (கேட்டிருந்தால் பெடி அதையும் அனுப்பி வைச்சிருக்கும்) ரா முழுக்கத் தானும் நித்திரை கொள் ளாமல் என்னையும் கொள்ளவிடாமல் அலட்டின படி, வாற காசில காணியை அடவு மீட்க பத்துலட்சம் தேவை, மிச்சம் எட்டு லட்சத்தையும் என்ன செய்யிற தாம் எண்டதுதான் அவேன்ர கவலை (இங்க கோடிக் கணக்கில சுறுட்டிறவை எல்லாரும் இப்பிடிக் கவலைப்படுறதாத் தெரியேல்லை.

இனி அடுத்தது Bankகால காசை எடுத்து எப்பிடிக் கொண்டு வாறதெண்ட கவலை. பதினெட்டு லட்ச மெண்டால் பருமட்டாப் பாத்தாலும் பிறீவ்கேஸில அடக்கேலாது. எப்பிடியும் சூட்கேஸ் ஒண்டுதான் தேவைப்படும். நல்லதாக் கிடந்த ஒண்டையும் நாச மறுப்பான் கிளப்பிக்கொண்டு சேந்திட்டான். ஊரியான், கொம்படி, கிளாலி எண்டு முற்பிறப்பில இழுபட்டுக் கந்தறுந்து போய் சீவன் போன பழங் கிடையன் ஒண்டுதான் தங்கச்சி வீட்டில மிச்சமாக் கிடக்குது. புதுசாத்தான் ஒண்டு வாங்க வேணும். ஆனால் அதுக்கொரு அஞ்சாறாயிரம் எண்டாலும் தேவை. காசைப் பார்த்தால் வேலைக்காகாது. பதி னெட்டு லட்சம் வரப்போகுதாம். இதில ஆறாயிரம் ஒரு காசே. மசிர்க்காசு. மனிசி சீட்டு பிடிச்சு சேர்த்து வச்சிருந்ததில (சாரி சல்வாறோ தோடு தொங்கட் டானோ வாங்க எண்டு) ஆறாயிரத்தை விறாண்டிக் கொண்டு விசிக்கி எறிஞ்சு சூட்கேசோட வெற்றி வீரனா வீட்டை வந்து சேந்தன். ராகு காலம் கழிய விட்டு, றோட்டில ஆமிக்காரன், பொலிசுக்காரன் எண்டாரும் குறுக்க வாறானோ எண்டு சகுனம் பாத்து, பாதுகாப்புக்கெண்டு எண்ட மூத்த களிசடையையும் மனிசீன்ர ஒண்டுவிட்ட வெருளிக்கட்டையையும் கூட்டியண்டு Bankக்கு வெளிக்கிட்டம்.

Bank வாசலில வெள்ளை வான் ஒண்டு விறுமத் தடியனப்போல நிண்டுகொண்டிருந்தது. நெஞ்சில திக் கெண்டிருந்தாலும் முகத்தில ஒண்டையும் நான் காட்டிக் கொள்ளேல்ல. பாவம் தங்கச்சி. அவள் ஒரு அப்பிராணி. வெள்ளை வானையும் வெள்ளைச் சிரிப் போடு பாத்து மினக்கெடுது. வாசலில நிண்ட செக் குறுட்டி சூட்கேஸின்ர அளவைப் பாத்துக் கொஞ்சம் வெருண்ட மாதிரிக் கிடந்தது. கையில வச்சிருந்த (Metalic Detector) தடியால அவன் சூட்கேஸ சுத்தி ஆலாத்தி எடுத்ததுதான் எடுத்தான். அது கீக்கெண்டு குளறத் தொடங்கிற்றுது.

கிட்ட நிண்டவை எல்லாரும் கொஞ்சம் எட்ட விலகிச்சினம். இதென்னடா நாசமறுப்பு. எனக்குத் தெரியாமல் குண்டக்கிண்டக் கொண்டந்து உள்ளை வச்சிட்டாங்களோ எண்டு நினைச்சு மண்டை கலங்கிப் போச்சுது. செக்குறுட்டி சம்சயத்தோட என்னைப் பாக்க நான் சங்கடத்தோட பேய் முழி முழிக்க, டிக்கு டிக்கெண்டு நெஞ்சிடிக்குமாப்போல உள்ளையிருந்து ஏதோ சனியன் சத்தம் போடுது. செக்குறுட்டி வேற zipஐக் கெதில துறக்கச் சொல்லி அந்தரப்படுத்துறான். நடுக்கக் கையோடு நானும் சிப்பை பிடிச்சு இழுத்தால் அது வேற சிக்குப்பட்டு சண்டித்தனம் பண்ணுது. எங்கட பாதுகாப்பு அமைச்சரைப்போல. கடைசில



ஒருமாதிரி அறுந்த சூட்கேஸ் ஆவெண்டு வாயைப் பிளந்தது. துறந்த கையோட 'கிரீங்' எண்டு மணியடிக்க எனக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போச்சுது.

இனி சொல்ல வேணுமே? செக்குறுட்டி முழியப் பிரட்டியண்டு துவக்கத் தூக்க, வந்தவை நிண்டவை யெல்லாம் ஓடிப்பதுங்க, நான் முத்திரை குத்தப்பட்ட 'ட்ரஸ்ரவாதி'யா முழிசாட்டத்தோட சூட்கேசுக்குள்ள பார்வைய ஓட்டிறன். உள்ளப் பார்த்தால் ஒரு எலார்ம் மணிக்கூடு. அது மணியடிச்சு முடிஞ்சு பழையபடி முக்கத் துவங்க மோசமா ஒண்டும் நடக்கேல்லை எண்டு விளங்கி ஆசுவாசப்பட்டு எல்லாரும் மூச்சு விடத் தாயாரான பிறகுதான் எனக்கும் போன உயிர் திரும்பி வந்தது.

மூளையைக் கொஞ்சம் கசக்கி பிசக்கி ஓடவிட்டுப் பாக்க விசயம் வெளிச்சுது. காலமை ஐந்து மணிக்கு எலார்ம் வைக்கச் சொல்லிக்குடுத்த மணிக்கூட்டை பதினொரு மணிக்கு எலார்ம் வச்சு பக்குவமா பெட்டீக்க கொண்டுபோய் பொதிஞ்சு வச்சிருக்குது. என்ர மனிசீன்ர ஒண்டுவிட்ட அலுகோசு. பின்ன, 'உருளோசை ஏன் Bankக்குக்குக் கொண்டந்தனி' எண்டு செக்குறுட்டி என்னைப் போட்டு உருட்ட, தெரிஞ்ச சிங்களத்தில நான் முக்கித்தக்கி சப்பித்துப்ப, நல்ல வேளை அவனுக்கது விளங்காமல் போன புண்ணியத்தில ஒருமாதிரி நான் தப்பினன். (உருளோசுக்கு ஒரு மணிநேரக் கடுங்காவல் தண்டனை கிடைச்சுது)

இனிக் காசெடுத்த கூத்தைக் கழலுறன் (உது நல்ல தமிழ் பாருங்கோ) கேளுங்கோ. Fast Cash எண்டேதோ பணியாரத்திலதான் பெடி காசை அனுப்பியிருந்தான். Fast Cash எண்டால் என்ன ஏதெண்டு ஒரு கோதாரியும் தெரியாது. வெளீல சொன்னால் வெக்கக்கேடு. அதால எல்லாம் தெரிஞ்சமாதிரித் தலையாட்டிப் போட்டன்.


"நம்பரையும் எமவுண்டையும் sms பண்ணி விடுறன். Bankஇல போய்க் கேட்டால் காசைத் தருவான்கள்" எண்டு short and sweetற்றா கதைய முடிச்சிட்டான் கசவாரப் பெடி. ஒரு மாதிரி மனேஜரைக் கண்டு பல்லைக்காட்டி தெரிஞ்ச இங்கிலீசில தட்டுத் தடுமாறி இளக்கிவிட்டன். அவருக்கும் இங்கிலீஸ் அரைகுறைதான் எண்டதால குறை விளங்காமல் பேரையும் நம்பரையும் மாத்திரம் எழுதிக்குடுங்கோ காணும் எண்டார். வசதியாப் போச்சுது.

கவுண்டரில இருந்த கண்ணாடிக்காரத் தம்பி கண்ணாடிக்கால சூட்கேஸையும் என்னையும் ஒரு மாதிரிப் பார்த்தார். பதினெட்டு லட்சத்தை வைக்க உது காணாதெண்டு நினைக்கிறேரோ? தலகாணிக்க பஞ்சடையிறமாதிரியெண்டாலும் அடைஞ்சு போடமாட்டனே எண்டு அனுபவப்பட்ட உள்மனம் கேள்வியையும் கேட்டு பதிலையும் சொல்லிப்போட்டுது.

ஆயிரம் ரூபாத் தாள் பதினெட்டு, நூறு ரூபாத் தாள் அஞ்சு, பத்து ரூபாத் தாள் மூண்டு எண்டு கிடுகிடெண்டு எண்ணி ஆள் மேசேல வச்சேர். மிச்சக்காசை கட்டுகளாத் தரப்போறோராக்குமெண்டு நான் எட்டிப் பார்த்து ஏமாந்தினதுதான் மிச்சம். மொத்தமா அவ்வளவுதான். ஒப்பம் வைக்கவெண்டு நீட்டின துண்டில 18,532.00. பஸ் கொண்டக்டர்மாரைப் போல 2 ரூபாவை அமுக்கீராமல் அதையும் எடுத்துத் தந்திட்டுது - நாணயமான மனிசன்.

பெடி smsஇல போட்டிருந்த தொகை 1853200 எண்டது சரிதான். ஆனால் களிசடை விட்ட பிழை தேவையான இடத்தில குத்துப்போட மறந்ததுதான். (முன்னால நிண்டால் போட்டுக் காட்டியிருப்பன் நானும்) நான் விட்ட பிழை, உடன் பிறப்பின்ர ஊத்தை வாளியப்பற்றி ஆதியோடந்தமா தெரிஞ்சிருந்தும், ஆராய்ந்து பார்க்காமல் அடிச்சான் பிறைஸ் எண்டு நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு அவளுக்குப் பின்னால இழுபட்டு வந்தது.

புண்ணில புளிப்பத்தினவென்ற திருமுகம் எப்பிடி இருக்குமெண்டு தெரியாதவை ஒருக்கா என்னை வந்து பாருங்கோ.





# பிள்ளைகளை நடத்தும் விதங்கள்

**கமலா** – என்ன கங்கா நீர் நேற்று எங்கடை கூட்டத்துக்கு வர இல்லை. அதுதான் ஏனெண்டு பாக்க வந்தனான். உடம்பு சரியில்லையோ?

**கங்கா** – அப்பிடி ஒண்டும் இல்லை மாமி. மனம்தான் சரியில்லை. வர வர என்டை பிள்ளையளை கொண்டு நடத்திறது கஷ்டமாயிருக்கு. எதுக்கெடுத்தாலும் வாக்குவாதம்தான். நேற்று அதுகளோடை சண்டை வந்திட்டுது. அதுதான் ஒரு இடமும் வெளிக்கிட மனம் வர இல்லை.

**கமலா** – வளருற பிள்ளையளோடை பிரச்சனைகள் வரத்தான் செய்யும். அதுகளின்டை மனப்போக்கை நாங்கள் கொஞ்சம் விளங்கி நடக்கவேணும். பொறுமையா அதுகளோடை கதைக்க வேணும்.

**கங்கா** – நாங்கள் அந்த நாளிலை அம்மா அப்பாவுக்கு முன்னாலை வாய் துறக்க மாட்டம். எங்களுக்கு அவையளிலை எவ்வளவு பயமும் மரியாதையும்..!

**கமலா** – பிள்ளையள் எங்களிலை பயத்தோடை.. மரியாதையோடை இருக்கவேணும். நாங்கள் சொல்லுறதெல்லாம் அவையள் கேக்கத்தானே வேணும் எண்ட மனப்பான்மை கூடாது கங்கா. அதுகளை உம்மடை பிரண்ட்ஸ் மாதிரி நடத்தி சம அந்தஸ்து குடுத்துப்பாரும். புரிந்துணர்வோடை அதுகளை நடத்திப் பாரும். அரைவாசிப் பிரச்சனை தீரும்.

**கங்கா** – அப்ப.. நாங்கள் அவையளுக்கு மரியாதை குடுக்கிறது ஆனால் அவையள் எங்களை எப்பிடியும் நடத்தலாமோ?

**கமலா** – அப்பிடி இல்லை கங்கா. மரியாதை எண்டது குடுத்து வாங்கிற விஷயம். அதை குடுக்காவிட்டால் அது எங்களுக்குக் கிடைக்கும் எண்டு எதிர்பாக்க ஏலாது. அதோடை விரும்பித்தாற மரியாதைக்கும் பயத்தாலை தாற மரியாதைக்கும் நிறைய வித்தியாசம் இருக்கெல்லே?

**கங்கா** – உண்மைதான் மாமி. மரியாதை எண்டது திணிக்கப்படாமல் தானா வரவேணும்.

**கமலா** – அதோடை அதுகளின்டை அபிப்பிராயங்களுக்கு மதிப்புக் குடுத்து அது எதுவாயிருந்தாலும் காது குடுத்துக் கேக்க வேணும். எங்கட விருப்பங்களை அதுகளிலை திணிக்கக்கூடாது.

**கங்கா** – அப்ப இப்பிடிச் செய்யிறதுதான் நல்லது எண்டு புத்திமதி சொல்லக்கூடாதோ?

**கமலா** – கங்கா புத்திமதி எண்ட பேரிலை தங்கட விருப்பங்களைத்தான் பல பெற்றார், பிள்ளையளிலை திணிக்கினம். உதாரணத்துக்கு ஒரு தகப்பன் தனக்கு டொக்டராய் வர ஆசை இருந்து அது முடியாமல் போயிருந்தால் தன்ட பிள்ளையளை டொக்டர் படிப்புக்கு கட்டாயப்படுத்துவார். இப்பிடிச் செய்யிறது கூடாது. அதுகளின்டை விருப்பங்களுக்கு, திறமைகளுக்கு, அபிலாஷைகளுக்கு நாங்கள் மதிப்புக் குடுக்க வேணும்.


**கங்கா** – ஓம் மாமி. அப்பிடியும் தாய் தகப்பன்மார் செய்யிறதை கவனிச்சிருக்கிறன்.

**கமலா** – இதுகள் எல்லாத்தையும் விட மிக மிக முக்கியமான விஷயம். Unconditional love. அதாவது நிபந்தனை இல்லாத அன்பை அதுகளுக்குக் குடுக்கிறது. அம்மா அப்பாவின்டை அன்பு எந்த சூழ்நிலையிலும், எப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் எங்களுக்கு அணுவளவும் குறையாமல் இருக்கும் எண்ட நம்பிக்கை பிள்ளையளுக்கு இருக்க வேணும்.

**கங்கா** – அப்ப தங்கட விருப்பத்துக்கு அவையள் நடக்கத் துவங்கிவிடுவினமெல்லே மாமி.

**கமலா** – இல்லை. அப்பிடி நடக்காது. இப்ப பாரும். நல்லாப் படிக்காட்டிலோ இல்லாட்டில் பெற்றாருக்கு விருப்பமானதுகளை செய்யாட்டிலோ பெற்றாரின்டை அன்பை இழந்திடுவம் எண்ட பயம் பிள்ளையளுக்கு வரவே கூடாது. அப்பிடிப்பட்ட நம்பிக்கை பெற்றாரிலை பிள்ளையளுக்கு இருந்தால் அது அதுகளுக்கு அசைக்க முடியாத பலத்தை சீவியம் முழுக்கக் குடுக்கும். அது ஒரு கட்டிடத்துக்குப் போடுற பலமான அத்திவாரம் போலை கண்டீரோ. அப்பிடி வளந்த பிள்ளையள் ஒருநாளும் பெற்றார் மனம் நோக நடக்க மாட்டினம்.

**கங்கா** – உங்களோடை கதைச்சதாலை விஷயங்களை விளங்கிக் கொண்டன் மாமி. இனி நான் பிள்ளையளை நடத்திற விதங்களிலை, அதுகளோடை பழகிற விதங்களிலை கவனம் செலுத்தத்தான் வேணும்.



அதற்குத் தக

அஷ்ர:ஃப் சிஹாப்தீன்
ashroffshihabdeen@gmail.com

# கரையற்ற கற்பனைகள்

சம்பந்தா சம்பந்தமற்ற இரண்டு அம்சங்களை இணைப்பதன்மூலம் அட்டகாசமான கதைகளை உருவாக்கலாம் என்ற உலகப் பிரபலமிக்க எழுத்தாளரான மைக்கல் மெரினுடைய கருத்தை நீண்ட நாட்களுக்கு முன்னர் நான் படித்திருந்தேன்.

இந்தக் கருத்தை ஆண்டன் செக்காவ் சொன்னாரென்றோ ஃபியோதர் தஸ்தயேவ்ஸ்கி சொன்னாரென்றோ என் புதுமைப்பித்தன் சொன்னார் என்றோ நான் சொன்னால் 'இருக்கலாம்' என்று வாளாதிருந்து விடுவீர்கள் என்பது எனது நம்பிக்கை. நிற்க

கொலன்னாவயிலிருந்து தெமட்டகொடைக்கு வருவதற்கும் போவதற்கும் வெவ்வேறு ஒருவழிப் பாதைகள் இருக்கின்றன என்பது நமக்குத் தெரியும். தெமட்டகொடை சந்தைக்கு எதிர்ப்பக்கம் உள்ள கடையொன்றில் மாதாந்தம் வீட்டுக்குத் தேவையான பொருட்களை மொத்தமாக நாங்கள் வாங்குவது வழக்கம். நாங்கள் என்றால் நானும் மனைவியும். இம்மாதப் பொருட்களை வாங்க வந்தபோது கடும் மழை. மழையென்றால் மழை அப்படியொரு மழை. மனைவி பொருட்கள் விபரம் எழுதப்பட்ட பட்டியலோடு கடைக்குள் நுழைய, நான் தெருவோரமாக நிறுத்திய வாகனத்தில் அமர்ந்திருந்தேன்.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு எனது வாகனத்துக்கு இருபதடி முன்னால் ஒரு ஆட்டா (முச்சக்கர வண்டி) வந்து நிறுத்தப்பட்டது. அது வாடகை வண்டியல்ல. சாரதி ஆசனம் தவிர ஏனைய பகுதி பொருட்களைக் கொண்டுசெல்வதற்காக பெட்டி வடிவில் உருவாக்கப்பட்ட கொள்கலன். நீலநிற வர்ணம் பூசப்பட்டிருந்த அதில் Eukanuba என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது. அது என்னவெனில் நாய்களுக்காக அமெரிக்காவிலிருந்து தருவிக்கப்படும் ஆரம்ப உணவு. இந்த விளக்கமும்கூட ஆங்கிலத்தில் உப தலைப்பாக எழுதப்பட்டிருந்தது. இலங்கையின் மிகப் பெரும் வர்த்தகக் கம்பனியொன்றின் பெயரும் அதன் வியாபார முத்திரையும் அந்த முச்சக்கர வண்டியின் சிறு கொள்கலனில் குறிக்கப்பட்டிருந்தது.

அந்த முச்சக்கர வண்டி நிறுத்தப்பட்டதும் அதிலிருந்து வெள்ளை அரைக்கை ஷேர்ட், கறுப்பு நீள் காற்சட்டை, சப்பாத்து அணிந்த இருபத்தேழு வயது மதிக்கத்தக்க இளைஞன் இறங்கிச் சென்றான். கம்பனி இவனுக்கு வியாபாரப் பிரதிநிதி என்ற 'டை' அணிந்தவாறு எடுக்கப்பட்ட கலர் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை வழங்கியிருக்கும். புத்திசாலித்தனமான கம்பனி நிர்வாகம் அது. வியாபாரப் பிரதிநிதி, ஆட்டா சாரதி ஆகிய இரண்டு வேலைகளைக் கொடுத்து ஒருவருக்குரிய சம்பளத்தை மட்டுமே வழங்கும் என்பது எனது அனுமானமாக இருந்தது. தெரியாதவர்களிடம் தன்னை வியாபாரப் பிரதிநிதி என்று சொல்லி, தன்னை அறிமுகப்படுத்திக் கொள்வான் அந்த இளைஞன். ஆனால் அவனுடைய நண்பர்கள் அவனை என்ன பாடுபடுத்துவார்கள் என்று நினைத்துப் பார்த்தேன். 'நீ நாய்ச் சாப்பாடு விக்கிற பயல் தானேடா!'

சரி. அது போகட்டும். இப்போதுதான் முதலாவது பந்திக்கு நான் தொடர்புபடுகிறேன். இந்த நாய் உணவு வண்டியும் நடிகர் விஜய்யும்தான் நான் இணைக்க எடுத்துக்கொண்ட சம்பந்தா சம்பந்தமற்ற அம்சங்கள். இப்போது நீங்களும் இந்த இரண்டு அம்சங்களையும் வைத்து உங்களது கற்பனைக் கழுதையை (எத்தனை





நாளைக்குத்தான் குதிரையை மட்டும் சொல்லிக் கொண்டிருப்பது?) தட்டிவிடுங்கள்.

நடிகர் விஜய் நாய் உணவுக் கொள்கலன் ஆட்டாவை எடுத்துக் கொண்டு ஏழைகளுக்கு உணவு ஏற்றிச் செல்கிறார். வழியில் வில்லன்கள் வருகிறார்கள். உடனே விஜய் கொள்கலனின் கதவைச் சைகை மூலம் திறந்து அதற்குள்ளிருந்து இதுவரை கண்டு பிடிக்கப்படாத வடிவில் உள்ள துப்பாக்கியை எடுத்துச் சுட்டுத் தள்ளுகிறார். அந்த வண்டியைச் சுழற்றிச் சுழற்றி கனரக வாகனங்களை உடைக்கிறார். பிறகு எதிரியின் ஒரேயொரு டாட்டா சுமோ துரத்த முச்சக்கர வண்டியில் தப்பிச் சென்று விடுகிறார். இந்தப்படத்தைப் பார்க்க நெரிசல்பட்டு இரண்டு பேர் இறந்ததாகச் செய்தி வருகிறது. இது சுருக்கமான எனது கற்பனைக் கழுதை. உங்களது கழுதைகள் வித்தியாசமாக இன்னும் சுவாரஸ்யமாக இருக்க வாய்ப்பிருக்கிறது.

இந்த ஆக்கமானது கட்டற்ற ஒரு சிறு நேரச் சிந்தனை மட்டுமே. மனிதனின் சிந்தனை ஒரு கணத்தில் எங்கெங்கோவெல்லாம் பயணிக்கிறது என்பதைச் சொல்லவே இதை எழுதினேன். மற்றப்படி மைக்கல் மெரின் என்று ஒரு எழுத்தாளர் இன்னும் பிறக்கவில்லை!


# பாரிசு...!

கண்ணன் ஒரு தபால்காரன். அன்றாடம் வரும் எல்லா தபால்களையும் அவன் பிரித்து உரியவர்களிடம் சேரத்துவிடுவான். அன்றும் அவனது மேசையில் பல கடிதங்கள் வந்து குவிந்திருந்தன. அதில் ஒன்று 'கடவுளுக்கு' என விலாசமிடப்பட்டிருந்தது. கண்ணனுக்கோ ஆச்சரியம். சரி அதில் அப்படி என்ன இருக்கின்றது என பார்த்துவிடுவோம் என கடிதத்தைப் பிரித்தான்.

அதில் 'அன்புள்ள கடவுளுக்கு, நான் 83 வயதான வயோதிபப் பெண். சிறியதோர் வீட்டில் சிறு பென்ஷன் தொகை பெற்று வாழும் விதவையும்கூட. நேற்று யாரோ என் பர்சை திருடிவிட்டார்கள். அதில் 100 டொலர்கள் இருந்தன. எனக்கு அடுத்த பென்ஷன் தொகை கிடைக்கும்வரை அதுதான் எனக்கு எல்லாமே. அத்தோடு அடுத்த ஞாயிற்றுக்கிழ என் அம்மாவின் நினைவு தினம். ஆகவே என் வீட்டுக்கு இரு நண்பர்களை அழைத்துள்ளேன். காசு போய்விட்டதே நான் எப்படி சாப்பாடு கொடுப்பேன். எனக்கு யாரும் இல்லை உதவுவதற்கு. எனக்கு இருக்கும் ஒரே ஆள் நீங்கள்தான்தான். தயவு செய்து உதவி செய்வீர்களா' என இருந்தது. அந்தக் கடிதம் கண்ணனின் மனதைத் தொட்டது. தபால் நிலைய ஊழியர்கள் எல்லோரிடமும் காட்டினான். எல்லோரும் சேர்ந்து 96 டொலர்களை சேகரித்து குறிப்பிட்ட பெண்மணிக்கு அனுப்பினர்.



அன்று திங்கட்கிழமை. தபாலக ஊழியர்கள் அனைவரும் தாங்கள் செய்த உதவியை நினைத்து ஒரு மேசையில் அமர்ந்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தனர். மீண்டும் ஒரு கடிதம் 'கடவுளுக்கு' என வந்தது. எல்லோரும் விழுந்தடித்து ஆச்சரியத்துடனும் ஆவலுடனும் கடிதத்தைப் பிரித்தனர். 'அன்புள்ள கடவுளே, உங்கள் தயவால் அன்று அவர்களுக்கு நான் உணவு வழங்க சந்தர்ப்பம் கிடைத்தது. உங்கள் பெருந்தன்மையை என்ன என்று சொல்வேன். உங்கள் கொடை பற்றி நான் என் நண்பர்களுக்கும் சொன்னேன். உங்களுக்கு ஒன்று தெரியுமா? அதில் 4 டொலர்களை காணவில்லை. எனக்கு சந்தேகமே இல்லை. தபால் நிலையத்தில் உள்ள திருட்டுப்பயல்கள் தான் திருடியிருப்பான்கள்...!!!'





டொக்டர்.எம்.கே. முருகானந்தன்.

# தாய்ப்பால் நீர்த்தன்மையானதா?

குழந்தைக்கு தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும் என்பதை அறியாதவர் எவரும் இன்றைய காலத்தில் இருக்க முடியாது. ஆனால் சில அம்மாக்களும், அம்மம்மாக்களும் "தாய் சாப்பிடுகிறாள் இல்லை, களைச்சுப் போனாள். மாவைக் கரைச்சுக் கொடு" என்று தூண்டாமலும் இல்லை. தன் அழகு கெட்டுவிடும் என பால் கொடுப்பதில்லை என்று சிலர் தாய்மாரை நக்கல் அடிப்பதும் உண்டு. எவ்வாறாயினும் இவை யாவும் தவறான கருத்துக்களாகும். குழந்தைக்கு ஏற்றது தாய்ப்பால் என்பதில் மாற்றுக் கருத்து ஏதும் இருக்க முடியாது. தாயின் பிற்கால ஆரோக்கியத்திற்கும் பாலூட்டுதல் அவசியமானதே.

எல்லாத் தாய்மாரைப் போலவே நீங்களும். உங்கள் குழந்தை பிறந்த உடனேயே அதற்கான உணவு உங்களிடம் தயாராக இருக்கிறது. தாய்ப்பால் இயற்கை தந்த வரம். அதைக் குழந்தைக்குக் கொடுக்கத் தவறாதீர்கள்.

**நீடித்த உறவு**

தாய்ப்பால் ஊட்டுவதன் முழு வெற்றியும் பலனும் உடனடியாக எல்லோருக்கும் இயல்பாகக் கிட்டிவிடுவதில்லை. முதல் சில தினங்களில் நீங்களும் உங்கள் குழந்தையும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதிலேயே பெரிதும் தங்கியுள்ளது எனலாம். எல்லா முயற்சிகளும் போலவே பயிற்சிக்கப் பயிற்சிக்க பாலூட்டும் உங்கள் வினைத்திறனும் பெருகும். தொடுகையும் அணைத்தலும் அற்புதங்களை நிகழ்த்தும். சருமத்துடன் சருமம் படுவதினால் உறவு நெருக்கமடையும். குழந்தையுடன் நீங்கள் செலவழிக்கும் நேரம் முக்கியமானது. உறவுறும் நேரம் அதிகரிக்க உறவின் நெருக்கமும் அதிகரிக்கும். பாலும் சொரியும்.

**கடும்புப் பால்**

முதற்பால் அல்லது கடும்புப் பால் பற்றி நீங்கள் அறிவீர்கள். நிறம் சற்று மஞ்சளாக இருப்பதுடன் சற்று தடிப்பாகவும் இருக்கிறது. குறைந்த அளவிற்குள் நிறைய போஷாக்குகள் செறிந்துள்ளன. எனவே குறைந்தளவு பாலை குழந்தை குடித்தாலும் அதுவே குழந்தைக்குப் போதுமானதாக இருக்கும். நோய்களுக்கு எதிரான பிறபொருள் எதிரிகள் (Antibodies) இக் கடும்புப் பாலில் செறிந்திருந்து குழந்தை தொற்று நோய்களுக்கு ஆளாகாமல் பாதுகாக்கின்றது. இவை உங்கள் வாழ்நாள் முழுவதுமாக நீங்கள் நோய்களுக்கு எதிராகப் போராடிப் பெற்ற நோய் எதிர்ப்புக் கவசமாகும். உங்களுக்குக் கிடைத்த கவசம் இப்பொழுது உங்கள் குழந்தையையும் பாதுகாக்கிறது. உடனடியாக பாலூட்ட ஆரம்பிக்கும்போது இந்த நோயெதிர்ப்புப் பொருட்கள் முக்கியமாக உங்கள் குழந்தையின் உணவுக் கால்வாயில் படர்ந்து பரவி கிருமிகள் தொற்றாமல் பாதுகாக்கின்றன. அத்துடன் ஒவ்வாமைகள் (Allergies) ஏற்படாமலும் தடுப்பதாக நம்பப்படுகிறது.

அது என்ன ஒவ்வாமை எனக் கேட்கிறீர்களா? எமது பாரம்பரியத்தில் கிரந்தி என்று சொல்வோம். தோற் தடிப்பு, அரிப்பு, தலை அவிச்சல், சளி, மூக்கடைப்பு, தும்மல் போன்ற பலவும் இவற்றில் அடங்கும். உடனடியாகத் தாய்ப்பால் அதாவது கடும்புப் பால் கொடுக்காது புட்டிப்பால் கொடுக்க ஆரம்பித்தால் மேற்கூறிய பாதுகாப்பு குழந்தைக்குக் கிட்டாமல் கிரந்தி நோய்கள் தோன்றலாம். அத்துடன் வயிற்றோட்டம், சளி, காய்ச்சல் போன்ற தொற்று நோய்களுக்கும் ஆளாகலாம். எனவே பிறந்த உங்கள் குழந்தைக்கு தாய்ப்பாலைத் தவிர வேறெதுவும் கொடுக்காதீர்கள்.



**நீங்கள் நோயுற்றால்...**

பாலூட்டும்போது உங்களுக்கு தடிமன், சளி போன்ற தொற்று நோய்கள் வந்தால் நீங்கள் தொடர்ந்து பாலூட்டலாமா? நிச்சயம் ஊட்ட வேண்டும். தொற்று நோய்கள் உங்களுக்கு வரும்போது உங்கள் உடல் அதை எதிர்த்துப் போராடுவதால் அதற்கு எதிரான பிறபொருள் எதிரிகள் உங்கள் உடலில் தோன்றும். இவை உங்களது நோயைத் தணிப்பது மட்டுமன்றி குழந்தைக்கும் அதனை தாய்ப்பால் ஊடாக கடத்துகின்றன. அவர்களும் நோயெதிர்ப்பைப் பெறுவார்கள்.

**குழந்தை பிறந்தவுடன்...**

குழந்தைக்கும் உங்களுக்கும் இரத்த உறவு என்றும் இருக்கவே இருக்கிறது. ஆனால் பிறந்தவுடன் குழந்தையுடனான சரும உறவும் நெருக்கமும் அதன் நீட்சிக்கு மிகவும் முக்கியமாகும். பிறந்தவுடன் உங்கள் குழந்தையை உங்கள் சருமத்தில் பட வைப்பதால் குழந்தைக்கு உங்கள் சரும வெப்பம் கிட்டும். அமைதிப்படுத்தும். அதன் சுவாசத்தையும் ஒழுங்காக்கும். பெரும்பாலான குழந்தைகள் பிறந்த உடனேயே விழிப்புணர்வுடன் இருக்கும். தாய்ப்பாலை நாடவும் கூடும். மருத்துவத் தாதியின் உதவியுடன் பாலூட்டலாம். குழந்தை தாய்ப்பால் அருந்தியதும் உங்கள் உடலானது குழந்தையின் தேவைக்கு ஏற்ப சுரக்கத் தயாராகும். எனவே விரைவாகவே பாலூட்டலை ஆரம்பியுங்கள்.

**ஊட்டுவது அல்ல தானே குடிப்பது**

இரண்டு மூன்று நாட்கள் கழிய உங்கள் மார்புகள் கூடுதலாக பருத்து வெப்பமடைவதை உணர்வீர்கள். கடும்புப் பால் கழிந்து அதிகம் சுரக்கத் தொடங்குவதை இது குறிக்கும். எனவே குழந்தை வேண்டுமளவிற்கு அதிகம் பாலூட்ட முயலுங்கள். குழந்தையின் தேவைக்கு ஏற்பவே உங்களுக்குப் பால் சுரக்கும். குழந்தை தனக்குத் தேவையான அளவு தானே உறிஞ்சட்டும். அதிகம் ஊட்ட வேண்டும் என நீங்கள் தெண்டிப்பது அவசியமற்றது. முதல் ஓரிரு நாட்களுக்கு நீங்கள் குழந்தைக்கு ஊட்டுவதாக இருக்கும். அதன் பின்னர் குழந்தைக்கு பழக்கமாகிவிடும். அது தானே தனது தேவைக்கு ஏற்ப குடிக்க ஆரம்பிக்கும்.

**பாலின் தரம்**

உங்கள் பாலின் தடிப்பு ஆரம்பத்தில் கடும்புப் பாலாக இருந்தது போலன்றி பின் நீர்த்தன்மையாக மாறும். உங்கள் குழந்தையின் தேவைகளுக்கு ஏற்ப உங்கள் பாலின் அடர்த்தியும் உள்ளடக்கமும் மாறும். முதல் ஓரிரு நாட்கள் போலன்றி அதன் நீர்த்தேவை அதிகரிப்பதால் அவ்வாறு இருந்தாலும் அதற்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் யாவும் அதில் அடங்கியிருக்கும். எந்த விலையுயர்ந்த மாப்பாலிலும் இல்லாத அளவு போஷணைப் பொருட்களும் நோய்த் தடுப்புக் கூறுகளும் தாய்ப்பாலில் மட்டுமே இருக்கிறது.

குழந்தை பசித்து அழும்போது உங்கள் மார்பைக் கொடுங்கள். தனது தேவைக்கு ஏற்ப அருந்த அது பழகிக் கொள்ளும். மாறாக உங்கள் மற்ற வேலைகள் காரணமாக அதற்கேற்ப பாலூட்டும் நேரங்களைத் தீர்மானிப்பது நல்ல முறையல்ல.



**அதிர்ஷ்டசாலிகளுக்கு ஒரு வாய்ப்பு!**
**வெல்லுங்கள் இலவச ராவணன் டிக்கெட்டுகளை!**

கீழ்க்காணும் பரிசுக் கூப்பனை நிரப்பி எங்களுக்கு அனுப்பி வைப்பதன் மூலம் ராவணன் திரைப்பட டிக்கெட்டுக்களை வெல்லுங்கள். **குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படும் அதிர்ஷ்டசாலிகள் 10 பேருக்கு ராவணன் திரைப்படம் பார்க்க இலவச டிக்கெட்டுக்கள் காத்திருக்கின்றன.**

கீழ்வரும் கூப்பனை நிரப்பி தபால் மூலம் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

பெயர் :.............................................
முகவரி :...........................................
தொடர்பிலக்கம் : ..................................

ஒருவர் எத்தனை கூப்பனும் நிரப்பி அனுப்பலாம். ஆனால் கூப்பனை பிரதி செய்து அனுப்புதல் கூடாது. பரிசுக்கூப்பன் எங்களுக்குக் கிடைக்கவேண்டிய கடைசித் திகதி 08-07-2010.

நீங்கள் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:
'பரிசுப்போட்டி'
இருக்கிறம்
03, டொரிங்டன் அவனியூ,
கொழும்பு-07
மேலதிக விபரங்களுக்கு - 011-3150836, 011 - 2506272

**இந்தியாவில்** உள்ள பிரபல நடனப் பாடசாலைகளில் ஒன்றான கலாசேஷ்த்ரா பற்றி சொல்லித் தெரியவேண்டியதில்லை. இலங்கையைச் சேர்ந்த பல மாணவர்கள் அங்கு கல்வி கற்று வருகின்றார்கள். அவ்வாறு கல்விகற்று வெவ்வேறு வருடங்களில் சித்தியடைந்து வெளியேறிய இலங்கை மாணவர்கள் இணைந்து இன்று ஆரம்பித்திருப்பதே 'ஓம்காரா' என்ற நடனக்குழு.

ஒப்பனை அலங்காரம், ஆடை நிறம் மற்றும் வடிவமைப்பு என இவர்களின் பாணி முற்றிலும் வித்தியாசமானது. இந்த நடனக் குழுவைச் சேர்ந்த மயூரி, சிவாந்தினி, துஷானி, அஞ்சனா மற்றும் விஜேந்திரன் ஆகியோர் இணைந்து பல்வேறு நிகழ்வுகளை திறம்பட நடாத்தி வருகின்றனர். துஷானியும் அஞ்சனாவும் சிங்கள சகோதரர்கள். கலாசேஷ்த்ராவில் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் Art Festival என ஒரு நிகழ்வு நடக்கும். இதில் அங்கு பயின்று வெளியேறியவர்கள் எல்லோரும் கலந்துகொள்வதுண்டு. அப்படி ஒரு நிகழ்வில் சந்தித்த ஐந்து கலைஞர்கள்தான் இன்று இந்த 'ஓம்காரா' என்ற நடனக்குழுவை ஆரம்பித்து பல நடனக் கலைஞர்களை உருவாக்கி வருகின்றார்கள். அண்மையில் இவர்கள் எமது அலுவலகத்திற்கு வந்திருந்தபொழுது இளமை புதுமைக்காக கலாட்டா ஒன்றை செய்திருந்தனர்.

'இந்த பொண்ணு இந்தியாவுல இருக்கும்போது ஸ்ரீலங்காவில போய் நாங்க தொடர்ந்து ஒன்றாக சேர்ந்து நடனம் படிப்பிப்பம் எண்டு சொன்னிச்சி. ஆனால் இங்க வந்து பார்த்தா.. ஆளே இல்ல. எங்க போனிச்சி என்ன பண்ணுதுனு ஒண்டுமே தெரியல!' என்று கூறி அஞ்சனாவை பார்த்துச் சிரித்தார் விஜேந்திரன். இவர்கள் இருவரும் ஒரே வருடத்தில் வெளியேறியவர்கள். அத்தோடு மற்றவர்களைவிட சீனியரும் இவர்களே. 'இப்ப நான் ஸ்ரீலங்கா வந்தபோது விஜேந்திரன் இங்க தனியா இந்த Dance school வச்சிருந்தாரு. இப்படி ஒவ்வொருத்தரும் தனித்தனியாக பண்ணிட்டு இருந்தாங்க. இருந்தாலும் எல்லோரும் சேர்ந்து பண்ணுவம் என்ற ஐடியா எல்லார்கிட்டயும் இருந்தது' என்றார் மயூரி.

அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த ஓம்காரா நடனக் குழுவினர் இதுவரை ஐந்து மேடை நிகழ்வுகளை நடாத்தி இருக் கின்றனர். ஒவ்வொரு வரும் வெவ் வேறான இடங்களில் இருக்கின்றனர் அத்தோடு தனித்தனியாக நடன பள்ளிகள் வைத் திருப்பதா சேர்ந்து பிரக்டீஸ் பண்றது சற் சிரமம்தான். ஒருவாறு புரோகிராம்க்கு கடைசி மூன்று நாட்கள் இருக்கும் போதுதான் ஒன்றுசேர்வார்களாம். இதில் விஜேந்திரன் 'on the spot ஆடும் boy நானாகத்தான் இருப்பன்' என்று பெருமையாக சொன்னார். (ஓ உங்களுக்கு அவ்வளவு திறமையோ...)

'எப்படியும் கடைசியாக மேடையில ஏறினபிறகு எல்லோரும் சரியாக ஆடிடுவம்' என்றார் சிவாந்தினி. 'சிலநேரம் பிழையாகவும் போய்டும். சமாளிச்சு ஆடிடுவம்' என்றார் மயூரி. (எப்படிங்க உங்களால மட்டும் இப்படியெல்லாம் முடியுது...!)

இருந்ததிலேயே குழப்படிப் பையனான விஜேந்திரன் ஆடும்போது ஏற்பட்ட மறக்கமுடியாத அனுபவத்தைப் பற்றிச் சொன்னார். 'ஒருக்கா நாங்க காலியில ஒரு புரோகிராம் பண்ணும்போது மேடையில ஆடிக்கொண்டிருந்த துஷானி ஸ்லிப் ஆகி கீழ விழுந்துட்டாள். ஒவ்வொருத்தரும் அதிர்ச்சியில் எல்லா steps ஐயும் விட்டுட்டம். ஒவ்வொருத்தரும் மற்றவங்க செய்வாங்க எண்டு எதிர்பார்த்துட்டு இருந்தோம். பிறகு கடைசியாக ஒருமாதிரி சுதாரிச்சுக் கொண்டு எல்லோரும் ஒண்டா எடுத்துட்டம். எனக்கு எல்லாம் Dark ஆகிட்டு' என்று சிரியோ சிரி என சிரித்தார். (உங்களைவிடவா Dark..?)

'பிரக்டீஸ் பண்றப்போ ஒரு ஆள் ஒரு கைய எடுத்தால் இல்லை அந்த கைய எடுண்ணு சொல்வாங்க. நிற்கிறதுலேயே நீ அப்படி நில்லு இப்படி நில்லுனு சொல்வாங்க. இதுக்கே டைம் போய்டும்' என்றார் மயூரி. அஞ்சனா ஏன் சைலண்ட் ஆக இருக்கீங்க என்றேன். 'அஞ்சனாவுக்கு கதைக்க சொல்லியே கொடுக்க தேவையில்லை. அவங்க தமிழ் விளங்காததால சும்மா இருக்காங்க' என கடித்தார் விஜேந்திரன். (ஓ ரொம்ப ஓவரா பேசுவாங்களோ..?)

புரோகிராம் பண்ணும்போது முன்னுக்கு இருக்கவங்கள பார்த்து டீஸ் பண்றதுதான் இவங்கட வேலையாம். அது மட்டுமல்ல. மற்றவங்க ஆடும்போது முன்னுக்கு இருந்து நக்கலடித்து கேலி செய்வார்களாம். 'விஜேந்திரன்னா கொஞ்சம் குழப்படினு கலாசேஷ்த்திராவில ஒரு பெயரே இருக்குது' என்றார் அஞ்சனா.

'எங்க டீம்ல உள்ள ஒரே பையன் இவர்தான். இந்த சிவன் ரோல் எல்லாம் பண்றதுக்குதான் இவர வச்சிருக்கிறம்' என்று மயூரி சொல்ல 'இல்ல இவர்தான் கிருஷ்ணன். இவர சுத்தி எப்போதும் பொண்ணுங்க கூட்டம் இருக்கும். தெலுங்குல, கன்னடத்துல, மலையாளத்துல எண்டு அவருக்கு எல்லா Language லயும் இருக்காங்க' என்றாள் சிவாந்தினி. (எப்படி விஜேந்திரன் maintain பண்றீங்க



"கலாசேஷ்த்ரா ஆலமரம் போன்றது அதன் விழுதாகவாவது நாங்கள் இருக்கணும்"

'ஐயோ ஐயோ அதெல்லாம் சொல்லாதீங்கப்பா' என்று வெட்கத்தில் முகத்தை மூடிக்கொண்டார் விஜேந்திரன். இந்த ஐந்து பேருக்குமே இசை தெரியாதாம். அங்க போய்த்தான் இசை படித்தார்களாம். 'music classல எந்த நேரமும் திட்டு விழும். ஒழுங்கா பாடுப்பா. ஒழுங்கா பாடு. இல்லாட்டி ஸ்ரீலங்காவுக்கே திரும்பி போயிடுனு திட்டுவாங்க. இந்த அஞ்சனா சரிகமபதநிச பாடும்போது தனியா கேட்கும். சா.. ப.. சா... ச்சா போட்டு சொல்வாங்க. அந்த சேர் ஏசுவாரு. பாஷையெல்லாம் சுத்தமா தெரியாது. தெலுங்கு class க்கு எல்லாம் பேருக்குதான் போவம். அந்த டீச்சரைப் பார்த்து சிரிச்சிக்கிட்டே இருந்துட்டு வந்துடுவம்' என்றார் விஜேந்திரன். (சுத்..தம்)

'தெலுங்கு டீச்சர் வந்து அச்சலு அல்லலு என்டு சம்மனம் கால் போட்டு உட்கார்ந்து அப்பிடியே தூங்கிடுவாங்க' என்றாள் மயூரி. 'அவங்க தூங்கிட்டு இருக்கப்போ Exam paper அப்படியே போகும். எல்லோரும் பார்த்து எழுதி மார்க்ஸ் வாங்கிடுவம்' என்றாள் சிவாந்தினி. (வெளியில சொல்லாதீங்க சிவாந்தினி. கொடுத்த Certificate ஐ திரும்ப வாங்கிட்டு போயிட போறாங்க)

'கீழ இருந்துதான் சாப்டணும். Class லயும் கீழ தான் இருக்கணும். தலைபின்னி பூ வைத்து பொட்டு வைக்கணும். சுடிதார் போட்டு துப்பட்டா போடணும். ஒருக்கா பொட்டு வைக்கலனு என்ன திருப்பி அனுப்பிட்டாங்க' என கலாசேஷ்த்ராவில் தனது அனுபவத்தை பகிர்ந்து கொண்டார் மயூரி. இவர் ஒரு வருடத்தில் மூன்று முறை விடுமுறையில் இலங்கைக்கு வருவாராம். வந்து போகும்போது பெட்டி நிறைய சாப்பாட்டுச் சாமான்கள்தான் இருக்குமாம். (உடம்ப பார்க்கும்போதே நினச்சன்...)

'நாங்க ஸ்ரீலங்கா போய்ட்டு வந்தா food items இருக்கும்னு Indian friends எல்லாம் வந்துடுவாங்க. எங்கட சாப்பாடு முடியமட்டும் எங்களோடதான் இருப்பாங்க. அப்புறம் கண்டுக்கவே மாட்டாங்க' என்று விஜேந்திரன் சொல்ல 'இல்ல இல்ல அவங்க வர முதல் விஜேந்திரனே எல்லாத்தயும் சாப்பிட்டு முடித்துடுவார்' என துஷ்லானி உண்மையை போட்டு உடைக்க பாவம் நம்ம விஜேந்திரன் அசடு வழிய என்னைப் பார்த்தார்.

'ஒரு நாளைக்கு மூன்று சாரி மாற்றணும். எங்கட சாரிய பிழிஞ்சா வியர்வை தண்ணி ஊற்றும். அந்தளவுக்கு பிரக்டீஸ் இருக்கும்' என்று துஷ்லானி சொல்ல, 'உண்மைதான். ஆனா துஷ்லானி அதிகமா கிளாஸ்க்கு டிமிக்கி கொடுக்கிறதால அவங்களுக்கு அந்தத் தேவை இருக்காது' என்று கடித்தார் அஞ்சனா. 'நாங்க எல்லாம் தமிழ் பொண்ணா ரொம்ப traditional ஆகத்தான் இருப்பம்' என்று சிவாந்தினி சொல்ல உடனே விஜேந்திரன் 'அப்படினு உருவத்துல தான் இருப்பாங்க. வாயத் திறந்தால் முடிஞ்சுது....' என்று நக்கலடித்தார்.

'சிலநேரம் கிளாஸ்க்கு கட் அடிச்சிட்டு நாங்க தூங்குவம். எங்களுக்கு பதிலா வேற யாராவது போய் குரல மாற்றி attendance கொடுப்பாங்க. ஒருக்கா அப்படித்தான் விஜேந்திரன் என்டதும் present mam என்று யாரோ குரலை மாற்றிச் சொல்ல, எங்கப்பா விஜேந்திரன் எழும்பு எழும்பு என்டு இருக்காங்க. இப்பதானே பேசினான். அதுக்குள்ள காணோமே என்டு எல்லோரும் தேடினம்' என்று மயூரி சொல்ல 'வெளியில வா மயூரி உன்ன கவனிச்சுக்கிறேன்' என்றார் விஜேந்திரன். 'யோகா கிளாஸ் இருக்கு. அதுல சயன ஸ்டெப்ஸ்ல எல்லோரையும் தூங்கவிட்டுவாங்க. ஒருக்கா அப்படித்தான் விஜேந்திரன் உண்மையாவே நல்லா தூங்கிட்டாரு. நாங்கதான் தட்டி எழுப்பினம்' என அஞ்சனா கூற 'ஆமா எழும்பிப் பார்த்தன். என்ன சுத்தி 1st, 2nd, 3rd year students நிண்டாங்க. எனக்கு ஒரே வெட்கமா போய்ட்டுது' (நல்லா குறட்டைவிட்டு தூங்கிட்டீங்க போல) என்றார் விஜேந்திரன்.

இப்படி நேரம் போனதே தெரியாமல் தங்களுடைய கல்லூரிக் கால நினைவுகளை எங்களுடன் இந்த துடிப்புள்ள இளைஞர்கள் பகிர்ந்து கொண்டனர். காதலைப் பற்றி கேட்க எல்லோரும் கப்சிப் ஆகிட்டார்கள்.

இங்கு காதலிக்க ஆரம்பித்தவுடன் இந்தியாவுக்கு போய்விட்டாராம் அஞ்சனா. இப்போது காதலித்த பையனையே கரம்பிடித்துள்ளார். தற்போது கணவரின் ஆசையுடன் இரத்தினபுரியில் நாட்டியபள்ளி நடத்துகிறார். துஷ்லானிக்கு காதலிக்கும் ஆர்வம் இல்லையாம். மயூரி அவுஸ்திரேலிய மாப்பிள்ளையை கைப்பிடிக்க போறாறாம். விஜேந்திரனைப் பற்றி சொல்லவே தேவையில்லை. மன்மதக்குஞ்சு. சிவாந்தினி சின்னப் பொண்ணாம். காதலிக்கிற ஐடியா இல்லையாம். (பார்த்தா அப்படி ஒன்டும் தெரியலயே.. கவனம் யாராவது அப்ளிக்கேசன் போட்டுடப் போறாங்கள்)

'கலாசேஷ்த்ரா இந்தியாவில் ஆலமரம் போன்றது. அதன் ஒரு விழுதாகவாவது நாங்கள் இருக்கணும். ஒவ்வொரு வருடமும் அங்கிருந்து சித்தியடைந்து வரும் மாணவர்களை எங்களோடு இணைத்துக்கொள்ள ஆவலாக இருக்கின்றோம். இந்தியாவில் நடனம் என்டால் கலாசேஷ்த்ரா. அதுபோல இலங்கையில் நடனம் என்டா ஓம்காரா என்று பெயர் வாங்கணும். இதுதான் எங்கள் இலட்சியம்' என்றனர் அந்த துடிப்புள்ள இளைஞர் அணி. இவர்களது முயற்சி வெற்றிபெற நாமும் வாழ்த்துவோம்.

வர்ஷினி





செவே.விவேகானந்தன்
சட்டத்தரணி

சட்டம் பேசுகிறது

# திருமண பந்தத்திலும் சட்டம் பேசும்!



மனித இனம் தொடங்கிய காலம் தொட்டு நாகரீகம் மெல்ல மெல்ல வளரத் தொடங்கியது. சமுதாயம் உருவாகியது. ஆண் பெண் சேர்க்கை, திருமண சடங்கு என மலர்ந்தது. திருமண பந்தமும் சட்டவரம்பெல்லைக்குள் நடைபெற வேண்டும். சட்ட வழிமுறைகளுக்கு புறம்பாக நடைபெற முடியாது. மாறாக நடைபெற்றால், சட்டம் ஏற்றுக் கொள்ளாது. சமுதாயமும் ஏற்றுக்கொள்ளாது. பின்விளைவுகள் பலபல. பிரச்சினைகள் பல உருவாகும். பாதகமான முடிவுகள் ஏற்படும்.

இலங்கையைப் பொறுத்தமட்டில், இலங்கையின் பொதுச்சட்டம் றோமன் - டச் சட்டமாகும். அத்தோடு, திருமணத்தின் தாட்பரியம், நியதிகள், நிபந்தனைகள் யாவற்றையும் விபரிப்பது திருமணப்பதிவு கட்டளைச் சட்டமாகும். (MARRIAGE REGISTRATION) இக்கட்டளைச் சட்டத்தைவிட, கண்டிய பிரதேச மக்களுக்கு திருமண விவாகரத்துச் சட்டம் இருக்கின்றது. முஸ்லிம்களுக்கு முஸ்லிம் திருமண விவாகரத்துச் சட்டம் இருக்கின்றது. இச்சட்டங்கள் இரண்டும் திருமணங்கள் யாவும் பதிவு செய்யப்படவேண்டுமென கட்டாயப்படுத்துகின்றன. அவ்வாறு பதிவு செய்யப்படாவிட்டால் அது திருமணமாக கணிக்கப்படமாட்டாது.

வடமாகாண தமிழர்களுக்கு தேசவழமைச் சட்டம் திருமணத்தைப் பற்றி விபரிக்கின்றது. தேசவழமையின் பிரகாரம் திருமணம் பதிவு செய்யப்பட வேண்டியதில்லை. தேச வழமையின் பிரகாரம் சில நியதிகள் உண்டு. அவற்றின் பிரகாரம் திருமணம் நடைபெற்றால் சட்டம் ஏற்றுக் கொள்கின்றது. பொதுவாக சைவமுறைப்படி திருமணம் நடைபெறும். முக்கியமாக ஓமம் வளர்த்து, புரோகிதர் மந்திரம் ஓதி, தாலிகட்டி, அருந்ததி காட்டி, சபை நடத்தி, தம்பதிகள் உணவருந்தி, உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் உணவருந்தி திருமணம் முடிவடைகின்றது. இந்த வழமையை சட்டம் ஏற்கின்றது. அத்தோடு கத்தோலிக்க, கிறிஸ்தவ சமய சடங்குகள் மூலமும் திருமணங்கள் நடைபெறுகின்றன.

இவ்வாறான சமயச் சடங்குகள் மூலம் நடைபெறும் திருமணங்களையும் றோமன் - டச் சட்டமும் திருமணப்பதிவு கட்டளைச் சட்டமும் ஏற்றுக்கொள்கின்றன. விவாகப்பதிவையும் ஏற்றுக் கொள்கின்றது. இவ்வகையான திருமணங்களுடன் ஒரு ஆணும் பெண்ணும் கணவன் மனைவியாக கூடி வாழ்ந்தாலும் அத்தாம்பத்திய வாழ்வை மேற்கூறிய சட்டம் ஏற்றுக் கொள்கின்றது. திருமணப்பதிவு இருக்காது. சமயசடங்குகள் எவையுமின்றி தாம்பத்திய வாழ்வு வாழ்வதாகும். உற்றார், உறவினர், சமுதாயம் அவ்வாறானதாம்பத்திய வாழ்வை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திருமணம் நடைபெறவில்லையென்று யாரும் பிரச்சினை கொடுத்தால் விவாகப்பதிவு இருந்தால் பிரச்சினை இலகுவில் தீர்ந்துவிடும். மற்றைய திருமணங்களுக்கு நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளும். ஆதாரங்களை முன்வைத்து திருமணம் சட்டமுறைப்படி நடைபெற்றதை நிரூபிக்க வேண்டும். திருமணப்பதிவு கட்டளைச் சட்டம் திருமணத்திற்கான தகுதிகளை, நிபந்தனைகளை விதிக்கின்றது. அவை யாவும் எல்லாவகை திருமணங்களுக்கும் ஏற்புடையவை. அவற்றிற்கு மாறாக திருமணம் நடைபெற்றிருந்தால், விவாகப்பதிவு நடைபெற்றிருந்தாலும் அத்திருமணம் சட்டத்தின்முன் வெற்றும் விருதாக நிற்கும். சட்டவலு அற்றதாகி விடும். அதனால், திருமணம் செய்தவர்களும் அவர்களது வழித்தோன்றல்களுக்கும் மிக பாதகமான பாதிப்புக்கள் ஏற்படும்.

**வயதுக் கட்டுப்பாடு**

தற்பொழுது, ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமண வயது 18 ஆகும். பதினெட்டு வயதிற்குட்பட்டவர் எவரும் திருமணம் செய்ய முடியாது. அவ்வாறு செய்யின் அத்திருமணம் செல்லுபடியாகாது.

உதாரணமாக பெண்ணிற்கு 15 வயது. ஆணிற்கு 20 வயது. இருவரும் சமய ஆசாரப்படி திருமணம் செய்து கூடி வாழ்கின்றார்கள். பெண்ணிற்கு 18 வயது என பொய்யான விபரம் கொடுத்து திருமணத்தைப்பதிவு செய்து கொள்கின்றார்கள். வயதைக் கூட்டி பொய் யான விபரம் கொடுத்து விவாகப்பதிவு செய்தமை குற்றமாகும். பெண் 18 வயது வரையும் திருமணம் செய்ய முடியாது. மனைவியாக தாம்பத்திய வாழ்வில் ஈடுபடமுடியாது. குற்றம் புரிபவராகவும் கணிக்கப் படுவார். உடலுறவு செய்த கணவர் மீதும் குற்றம் சுமத்தப்படும். 18 வயதிற்குட்பட்டவர் எவரும் திரு மணம் செய்யப்படாது.

**ஒரு தாரம்**

முதல் திருமணத்தில் கணவனோ, மனைவியோ உயிருடன் இருக்கும்பொழுது, முதல் விவாகத்தை விவாகரத்துச் செய்யாமல் இரண்டாம் திருமணம் செய்யப்படாது. சமய ஆசாரப்படி திருமணம் செய் தாலும், கூடி வாழ்ந்தாலும் சட்டப்படி விவாகரத்துச் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாமல் இரண்டாம் திருமணம் செய்ய முடியாது. அவ்வாறு செய்யின் இரண்டாம் திருமணம் வெற்றும் விருதுமாகிவிடும். அவ்வாறு திருமணம் செய்பவர் இருதாரக் குற்றத்தை புரிகின்றார். ஆகக்கூடிய மறியல் தண்டனை 7 1/2 வருடங்களாகும்.


**தடைசெய்யப்பட்ட உறவு**

நினைத்த மாத்திரத்தில் ஓர் ஆணோ பெண்ணோ உறவு முறை பார்க்காது திருமணம் செய்ய முடியாது. நேரடி வழித்தோன்றல்களாக இருக்கும் ஆணும் பெண்ணும் திருமணம் செய்துகொள்ள முடியாது. ஒரே பெற்றோரின் பிள்ளைகள், சகோதர சகோதரிகள் திருமணம் செய்ய முடியாது. ஒருவரின் முதல் தாரத் தின் பிள்ளையையும் இரண்டாம் தாரத்தின் பிள்ளை யும் திருமணம் செய்ய முடியாது. தனது சகோதரனு டைய அல்லது சகோதரியினுடைய பிள்ளையை திருமணம் செய்ய முடியாது. தனது மனைவியின் அல்லது கணவனின் மூத்த தாரத்து பிள்ளையை திரு மணம் செய்ய முடியாது. தனது மகனின், மகளின் பிள்ளைகளை திருமணம் செய்ய முடியாது. இவ்வாறு தடைசெய்யப்பட்ட உறவுகள் விரிந்து கொண்டே போகின்றன. சட்டத்தினால் தடை செய்யப்பட்ட உறவுகளை திருமணம் செய்யவே முடியாது. கணவன் மனைவியாக கூடிவாழவும் முடியாது. உடலுறவும் வைக்கப்படாது. அவ்வாறு உடலுறவு வைப்பதும் குற்றமாகும்.

திருமணம் செய்யும்படி யாரையும் கட்டாயப் படுத்த முடியாது. அவ்வாறு கட்டாயப்படுத்தி செய்யப்படும் திருமணம் சட்டப்படி செல்லுபடி ஆகாது. விவாகப்பதிவிற்கு எவ்வாறு அறிவித்தல் கொடுப்பது என்பவற்றை சட்டம் விபரமாக விளக்கு கின்றது. இவற்றையெல்லாம் சிறிதளவாவது அறிந் திருக்க வேண்டும். சட்ட வரையறைக்குள்தான் சகல விடயங்களும் நடைபெறுகின்றன. இவற்றை அறிந்து கொள்ள வேண்டும். வெள்ளம் வரும் முன்னே அணை கட்டுவது போல பாதகமான பிரச்சினைகள் தோன்றும் முன்பே சரியான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். மகிழ்ச்சி தரும் வாழ்வு மலர்வதற்கு இது ஒரு சிறந்த வழியாகும்.



**'சட்டம் பேசுகின்றது' எனும் இப் பகுதிக்கு வாசகர்கள் சட்டம் தொடர்பான கேள்வி களையும், ஆலோசனைகளையும் எழுதி அனுப்பலாம். பிரபல சட்டத்தரணிகள் பதிலளிக்க காத்திருக்கிறார்கள்.**




பலத்த எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் ஐந்து ஆண்டு கால இடைவெளிக்குப் பின் தமிழில் மணிரத்னம் தந்திருக்கும் படம்தான் ராவணன். நாயகன், பம்பாய், உயிரே போன்ற வித்தியாசமான கதைக்களங்களுடன் வெளிவந்த வெற்றிப்படங்களின் வரிசையில் சற்று மாறுபட்ட கதைக்களத்துடன் இராவணன் வெளிவந்திருக்கிறது. வழமையாகவே கதைக்கருவுக்கு முக்கியத்துவம் கொடுக்காத மணிரத்னம் இம்முறை இராவணனின் கதைக்கருவுக்காக அதிக சிரத்தையெடுத்திருப்பது படத்தைப் பார்த்தாலே புரிகிறது.

மெட்ராஸ் டாக்கீஸ் - பிக் பிக்சர்ஸின் தயாரிப்பில் ஒரே நேரத்தில் தமிழ், ஹிந்தியில் வெளிவந்திருக்கும் இப்படத்தில் விக்ரம், ஐஸ்வர்யா ராய், பிருத்வி ராஜ், கார்த்திக், பிரபு, ப்ரியாமணி, ரஞ்சிதா ஆகியோர் நடித்திருக்கின்றனர். வசனம்-சுஹாசினி, ஒளிப்பதிவு-சந்தோஷ்சிவன், மணிகண்டன், இசை-ஏ.ஆர். ரஹ்மான், இயக்கம்-மணிரத்னம், தயாரிப்பு-சாரதா த்ரிலோக் மற்றும் மணிரத்னம்.

தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்கள் கூட்டத்தினருக்கும் மேட்டுக்குடி அதிகார வர்க்கத்தினருக்குமிடையிலான உரிமைப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கும் ஒரு அவலைப்பெண்ணின் உணர்வுகளில் வலிசுமந்த போராட்டமே இரண்டேகால் மணித்தியாலம் நகரும் இராவணன் படத்தின் கதைக்கரு. புராண இதிகாசமான ராமாயணத்தின் சில காட்சிகளையும் இணைத்து புதிய கதைக்களத்துடன் இயக்குனர் நவீன ராமாயணமொன்றையே படைத்திருக்கிறார்.

வனப்பகுதி பழங்குடி மக்களின் தலைவன் வீரா என்கிற வீரய்யா (விக்ரம்). அந்தப் பகுதியிலும் சுற்றியுள்ள இடங்களிலும் மக்களின் காவலனாக இருக்கின்றான். ஊரே அவனுக்காக உயிர்விடவும் தயாராக உள்ளது. ஆனால் சட்டத்தின் பார்வையில் அவன் மோசமானவன். பொலிஸால் தேடப்படும் குற்றவாளி. இவனைப் பிடிக்க அல்லது கொல்ல முயலும் தேவ் (பிருத்விராஜ்) தலைமையிலான பொலிஸ் இவனது தங்கையை (பிரியாமணி) சூறையாடுகிறது. ஆத்திரம் கொண்ட வீரா, தேவின் மனைவி ராகினியை (ஐஸ்வர்யாராய்) கடத்துகிறான். ராகினியை மீட்கவும் வீராவைக் கொல்லவும் தேவ் பெரிய படையுடன் களம் இறங்குகிறான். காட்டில் ராஜாங்கம் நடத்தும் வீராவை அவனால் நெருங்க முடிந்ததா என்பது படத்தின் ஆதாரமான கேள்வி. கடத்தப்பட்ட ராகினிக்கும் கடத்திய வீராவுக்கும் இடையே நடைபெறும் ரசாயன மாற்றங்கள் கதையின் திருப்பம். ஆபத்திலிருந்து மீண்டு வரும் மனைவியை தேவ் முழு மனதுடன் ஏற்றுக்கொண்டானா? வீரா - தேவ் மோதலில் வெல்வது யார்? ராகினியின் நிலை என்ன? போன்றன கிளைமாக்ஸ்.

ராமாயணத்தின்படி விக்ரம் ராவணனாகவும், அண்ணனாக வரும் பிரபு கும்பகர்ணனாகவும், தம்பியாக வரும் முன்னா விபீஷணனாகவும், தங்கையாக வரும் ப்ரியாமணி சூர்ப்பனகையாகவும், சிறப்பு அதிரடிப்படை அதிகாரியாக வரும் பிருத்விராஜ் ராமனாகவும், இந்த ராமனின் காதல் மனைவி ஐஸ்வர்யா ராய் சீதாவாகவும், ராம சேனையில் அனுமானாக கார்த்திக்கும் சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை உணர்த்துவது போல ஆங்காங்கே ராமாயணத்தில் வரும் சில காட்சிகளையும் இயக்குனர் இணைத்திருக்கிறார்.

படத்தின் தொடக்கத்திலேயே நெருப்பு, கொலை, கடத்தல், சட்டென்று சலனம் கொள்ளும் வீராவின் மனம் என தொடராக வரும் அதிரடிக்காட்சிகள் அருவியின் சுழல்போலக் கதையை உருமாற்றுகின்றன. தேடுதல் வேட்டையும் காதல் ஏக்கமுமாக நகரும் படம் தொய்வின்றி நகர்கின்றது. சுஹாசினியின் வசனங்கள் கூர்மையாக இருக்கின்றன. ஆனால் மணிரத்னம் முக்கியமான பல காட்சிகளை வசனத்தின் உதவியின்றிக் காட்சிப்படுத்தலிலேயே வலுவாகக் கொண்டுவந்திருக்கிறார். ஆனாலும் இறுதிவரை மாற்றான் மனைவியை மனதில் நினைத்திருந்தாலும் அவள்மீது தனது நகம்கூட படாமல், டூயட் பாடாமல் ரொமான்ஸ் பண்ணாமல் கதையை நகர்த்தியிருக்கும் விதம் அருமை. முதல் பாதி விறுவிறுப்பில் நேரம்போனதே தெரியவில்லை. இரண்டாவது பாதி முன்பாதியை போல வேகம் அதிகமில்லாவிட்டாலும் எந்த இடத்திலும் சோர்வைத் தரவில்லை. மணிரத்தினம் இம்முறை ஆயுத எழுத்தில் விட்ட தவறை விடவில்லை. பாமரனுக்கும் புரியக்கூடியவாறு திரைக்கதையை அமைத்துள்ளார். வசனங்கள் ஏனைய மணிரத்தினம் படங்களை போலல்லாது அதிகமாகவே பேசப்படுகின்றன. விக்ரம், பிரபு பேசும் வசன உச்சரிப்பு வழமையான மணிரத்னம் படங்களில் இருந்து வேறுபட்டாலும் ரசிக்க வைக்கிறது.

முரட்டு உடம்போடு மிரட்டுகிறார் விக்ரம். கோபம், அமைதி, சிரிப்பு, தவிப்பு, தாபம், வெறி, சோகம் என நடிப்பின் அத்தனை பரிமாணத்திலும் கலக்குகிறார். உடல்மொழி, வசன உச்சரிப்பு என்பவற்றில் படத்துக்கு படம் வித்தியாசம் காட்டும் விக்ரம்



ராவணனிலும் விட்டு வைக்கவில்லை. ஆவேசமாக சீறுவது. தங்கை சீரழிக்கப்படும்போது குமுறுவது. கடத்தி வந்த பெண்ணின் மீது ஈர்ப்பு ஏற்படும்போது அதைக் கையாளத் தெரியாமல் குழம்புவது. உணர்வுகளைக் கொட்டிப் பேசுவது என்று ராவணனாகவே வாழ்ந்திருக்கிறார். பொலிஸ். அரசாங்கம் ஆகியவற்றைப் பற்றிய கோபம். தங்கை குறித்த துக்கம். தான் விரும்பாமலேயே தனக்குள் வந்து ஒட்டிக்கொண்ட காதல் ஆகியவற்றை முக பாவங்களாலும் உடல் மொழியாலும் வெளிப்படுத்தும் நுட்பம் குறிப்பிடத்தகுந்தது. அதிகமான ரிஸ்க் எடுக்கும் காட்சிகளிலும் சர்வசாதாரணமாக சாகசம் புரிந்திருக்கிறார். நடிப்பு. அக்ஷன். பாடல்கள் என ராவணனில் விக்ரம் தனது வேலையை நூறு சதவிகிதம் சிறப்பாக செய்துள்ளார்.



ஐஸ்வர்யாராய் சொல்லவே தேவையில்லை. அழகில் ஜொலிக்கிறார். படம் முழுக்க ஒரு காவியமாகவே வாழ்ந்து காட்டியிருக்கிறார். வீராவின் தங்கை வெண்ணிலாவுக்கு நேர்ந்த கொடுமையை அறிந்து கண்களில் நீர்வழிய அழும் போது நம்மையும் சோகத்தில் ஆழ்த்துகிறார். விக்ரமிற்கு போட்டியாக நடிப்பிலும் ரிஸ்க் காட்சிகளிலும் விக்ரமைவிட அதிகமாக ஐஸ்வர்யா ராய் சிறப்பாக நடித்துள்ளார். இறுதிக் காட்சியில் விக்ரம் மீது அவருக்கு காதல் வரும் உணர்வைக் காட்டியுள்ள விதம் வர்ணிக்க வார்த்தைகளில்லை. பிரித்விராஜுடன் ''கள்வரே.....'' பாடலில் நெருக்கமாக நடிக்கும் காட்சிகளில் மட்டும் கொஞ்சம் நெருடலாக இருக்கிறது. பாவம் அபிஷேக்.

வேட்டையாடும் பொலிஸ் வேடத்துக்கேற்ற முக பாவங்களுடனும் உடல் மொழியுடனும் பிருத்விராஜ் தன் வேலையை ஒழுங்காகச் செய்கிறார். ஐஸ்வர்யாவுடனான ரொமான்ஸ் காட்சிகளில் ஜோடிப்பொருத்தம் பொருந்தாதது போல் இருக்கின்றது. பிரித்திவிராஜ் கதாபத்திரத்திற்கு வேறுயாராவது நடித்திருந்தால் இன்னும் நன்றாக வந்திருக்குமோ என்று எண்ணத்தோன்றுகிறது.

அரவாணியாக வரும் வையாபுரி. விக்ரமின் தம்பியாக வரும் முன்னா தவிர ஏனைய யாரும் மனதில் நிற்கவில்லை. இன்று திரையரங்குகளில் அதிக கைதட்டும் விசிலும் வாங்குமளவிற்கு செல்வாக்கான ஒரே ஒருவர் ''கதவைத்திற..'' புகழ் ரஞ்சிதாதான். இவர் ஓரிரு காட்சிகளில் வந்தாலும் விசில் வானைப் பிளக்கிறது. அறிமுகக் காட்சியிலேயே தன்னுடைய குரங்கு சேஷ்டைகளைக் காட்டும் கார்த்திக்கும் ரசிக்க வைக்கிறார். காட்சிகள் குறைவென்றாலும் மனதில் நிற்கிறார் ப்ரியாமணி. தனக்கு நேர்ந்த கொடுமையை அவர் சொல்லும் காட்சி மனதைத் தொடுகிறது. பிரபுவின் நடிப்பு மிகவும் ரசிக்கும்படியாகவே உள்ளது. கார்த்திக்கிற்கு சொல்லிக்கொள்ளும் படியாக காட்சிகள் இல்லாவிட்டாலும் தன்னால் முடிந்தளவிற்கு பங்களித்திருக்கிறார்.

முதலில் நிற்பது சந்தோஷ் சிவனின் அசாதாரண ஒளிப்பதிவு. தமிழில் வேறு எந்தப் படத்திலும் இத்தனை அழகான இயற்கைக் காட்சிகளைப் பார்த்திருக்க முடியாது எனும் அளவுக்கு அருமை. ஆரம்பத்தில் ஐஸ்வர்யா ராய் அருவியில் விழும் காட்சி என அனைத்தையுமே கண்முன்னே நிறுத்தியிருக்கிறார். மலைகள். அருவிகள். காட்டு வழிகள், எரியும் பாலம் ஆகியவற்றைக் கச்சிதமாகப் படம்பிடித்துத் தந்திருக்கிறது சந்தோஷ் சிவனின் கமரா. 'கள்வரே.... காட்டுச் சிறுக்கி.... உசிரே போகுதே...' பாடல்களில் வைரமுத்துவின் வரிகளில் இளமை பொங்குகிறது. ரஹ்மானின் இசையில் பாடல்கள் அனைத்தும் ஏற்கனவே பிரபலமடைந்திருந்தாலும் படத்தில் அவை தேவைக்கேற்ப பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. பாடல்கள் போலவே ரஹ்மானின் பின்னணி இசையும் படத்திற்கு பக்கபலமாக இருக்கின்றது. இசைபோலவே எடிட்டிங்கில் சேகர் பிரசாத்தும் காட்சிகளை அருமையாக கோர்த்திருக்கிறார். தொங்குபாலமும். காட்டுக்குள் போடப்பட்ட குடில்களும் கலையின் உச்சக்கட்ட சிறப்பு. கலை சமீர் சந்தாவிற்கு வாழ்த்துக்கள்.

வீராவின் போராட்டத்தையும் அவன் மக்கள் தலைவனாக வளர்ந்த விதத்தையும் வலுவாகச் சித்தரித்துக் காட்டியிருக்கலாம். வீராவின் பின்னணி தேவின் குரலில் சொல்லப்பட்டு கவன ஈர்ப்பின்றி கடந்து போகிறது. கிளைமாக்ஸ் பார்வையாளர்களை நிமிர்ந்து உட்கார வைத்திருக்கின்றது. ஆனாலும் எத்தனையோ ஆயிரம் அடி உயரத்திலுள்ள மலை மேலிருந்து தொங்குபாலத்திலிருந்து கீழே விழுந்தபோது சிறிய உராய்வுக் காயத்துடன் மீண்டும் எழும்பி வரும் வழமையான சினிமாவின் பாணிதான் மனதுக்கு நெருடலாக இருக்கின்றது.

தமிழ் உணர்வோ. தமிழருக்கான குறியீடுகளோ. தமிழ் இட அமைப்பு பின்னணியோ இல்லாமல் இருப்பதால் ஏதோ வேறு உலகத்தில் நடக்கும் நிகழ்வுகளைப் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படத்தான் செய்கின்றது. ஆனாலும் மணிரத்னத்தின் வித்தியாசமான முயற்சியை பாராட்டாமலும் இருக்க முடியாது.

ஆக மொத்தத்தில் ராவணன் - ராமன்

**விக்ரமாதித்தன்**



விவேக்-ஆனந்தன்

# கொழும்பை உலுக்கிய பரிபூரணத்தின் கொலை




கொலைசெய்யப்பட்டுக் கிடக்கும் பரிபூரணம்



**1951ம்** ஆண்டில் ஒரு நாள். ஒக்டோபர் மாதம் 9ந் திகதி. வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி மற்றும் கறுவாத்தோட்ட பிரதேசங்கள் பரபரப்பில் ஆழ்ந்திருந்தன. தமிழ் மக்கள் ஆவேசத்தில் கொந்தளித்தனர். அடிதடி கைகலப்பும் ஏற்பட்டது. பம்பலப்பிட்டியில் பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப் பட்டது. பம்பலப்பிட்டி வீதி அதனை அண்டிய காலி வீதி பிரதேச மக்கள் செல்வதற்கு தடைசெய்யப்பட்டது. என்றாலும் மக்கள் கூட்டம் அலை அலையாக வந்து கொண்டே இருந்தது.

ஆம். இலக்கம் 7, சென்ற் அல்பெனஸ் பிளேஸில் தான் அந்தக் கொலை நடைபெற்றது. "மனைவியின் கழுத்தை கணவர் நெரித்துக் கொன்றார்" என்ற செய்தி எங்கும் பரவியது.

சேர்.பொன். இராமநாதன், அவரின் தம்பி சேர். பொன்.அருணாசலம் இருவரும் புகழ்பூத்த தலைவர்கள். 50 வருடங்களுக்கு மேலான ஏகோபித்த அரசியல் தலைமை அவர்கள் கையில் இருந்தது. இலங்கை முழுவதுமுள்ள படித்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே தலைவர் சேர். பொன். இராமநாதன் அவரின் மகன் இராஜேந்திராவின் மகள் பரிபூரணம் அவரது வீட்டில் கொலை செய்யப்பட்டார். சேர். பொன். இராமநாதனுக்கு இவர் பேத்தி முறை.

பரிபூரணத்தின் கணவர் புகழ்பெற்ற கிரிக்கெட் கப்டன் சதாசிவம். மகாதேவா சதாசிவம் 15 வயதில் வெஸ்லி கல்லூரிக்காக கிரிக்கெட் விளையாடியவர். இந்தியாவிற்கு எதிராக முதல் முதலில் 1945ல் விளையாடி 111 ஓட்டங்களை எடுத்தார். அவுஸ்திரேலியாவின் டொன் பிரட்மன்னிற்கு எதிராக இலங்கை அணிக்கு தலைமை தாங்கியவர். இலங்கை மலேசியா ஆகிய இரு நாடுகளுக்கும் கிரிக்கெட் விளையாடியவர். இரு நாடுகளுக்கு கிரிக்கெட் கப்டனாகவும் இருந்தவர்.

1940ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 9ந் திகதி சதாசிவத்திற்கும் பரிபூரணத்திற்கும் திருமணம் நடந்தது. அவர்களுக்கு நான்கு பெண் பிள்ளைகள். யோவென் ரிவென்சன் எனும் பறங்கிப் பெண் அவர்களுடைய மண வாழ்க்கையில் குறுக்கிட்டாள். 1951ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ந் திகதி சதாசிவம் லண்டனில் இருந்த வேளை அவரது மனைவி பரிபூரணம் விவாகரத்து வழக்கை கொழும்பில் தாக்கல் செய்தார். அதில் செப்டெம்பர் 22ந் திகதி கொழும்பிற்கு வந்த சதாசிவத்தை வரவேற்பதற்கு பரிபூரணம் கொழும்புத் துறைமுகத்துக்குச் செல்லவில்லை. சதாசிவம் நிலமையை அறிந்துகொண்டார். கொழும்பு வந்த அவர் தனது நண்பர் ஹனிபா வீட்டில் தங்கிக்கொண்டார். இரண்டொரு நாட்களின் பின் மனைவி பரிபூரணத்தின் தங்கை வீட்டுக்குச் சென்றார். அங்கிருந்து மனைவி பரிபூரணத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டதையடுத்து பரிபூரணம் தனது பெண் குழந்தைகளுடன் தங்கை வீட்டிற்கு வந்து கணவர் சதாசிவத்தை தனது வீட்டிற்கு கூட்டிச்சென்றார். விவாகரத்து வழக்கை கேள்விப்பட்ட சதாசிவம் வழக்கை வாபஸ் பெறும்படி கேட்டார். பரிபூரணம் மறுத்துவிட்டார். சதாசிவம் மனவருத்தத்துடன் நண்பர் ஹனிபா வீட்டிற்குத் திரும்பினார்.

அதன் பின்பும் மனைவி பரிபூரணத்தின் வீட்டிற்கு இரண்டு மூன்று முறை சதாசிவம் சென்று வந்தார். பிள்ளைகளுடனும் மகிழ்ச்சியாக கதைத்து வந்தார். சதாசிவத்தின் நண்பர் ஹனிபா இருவரின் மணமுறிவை சீர்படுத்த முயற்சித்தார். சதாசிவம் யோவென் ரிவென்சனை கைவிட தயாராகவில்லை. பரிபூரணமும் விவாகரத்து வழக்கை கைவிடத் தயாராகவில்லை.



கொலைசெய்யப்பட்ட இடம்

பொடிஹாமி எனும் 77 வயதைத் தாண்டிய வேலைக்காரி பல வருடங்களாக பரிபூரணத்தின் வீட்டில் வேலை செய்பவர். சதாசிவத்திற்கும் பரிபூரணத்திற்கும் மிக மிக விசுவாசமானவர். அவர்களின் குடும்பத்திலொருவராகவே இருந்தார். பதினொரு நாட்களுக்கு முன்பு வில்லியம் எனும் 18 வயது இளைஞன் தொட்டாட்ட வேலை செய்வதற்காக சேர்க்கப்பட்டிருந்தான். சதாசிவமோ வில்லியமோ ஒருவரோடு ஒருவர் கதைத்ததில்லை.

ஒக்டோபர் மாதம் 8ந் திகதி இரவு 1 மணிக்கு ஹனிபாவும் சதாசிவத்தின் வழக்கறிஞரும் சதாசிவத்தை பரிபூரணத்தின் வீட்டு வாசலில் விட்டுச்சென்றனர். பரிபூரணம் கதவைத்திறந்து சதாசிவத்தை மேல் வீட்டிற்குக் கூட்டிச் சென்றதை பொடிஹாமி பார்த்துக்கொண்டிருந்தார்.

1951ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9ந் திகதி காலை 8.30 மணிக்கு பொடிஹாமி மூத்த இரு பெண் குழந்தைகளையும் பாடசாலைக்கு கூட்டிச்செல்வதற்கு பணத்தைப் பெறுவதற்காக பரிபூரணத்தின் அறைக்குச் சென்றார். பரிபூரணத்தின் படுக்கை அறை மேல் மாடியில் இருந்தது. அங்கு சதாசிவம் நித்திரையில் ஆழ்ந்திருந்தார். பரிபூரணம் மகிழ்ச்சியாக பொடிஹாமியுடன் கதைத்தார். பொடிஹாமி இரு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு பாடசாலை சென்றுவிட்டார். அவர் திரும்ப வரும் முன்பே எஜமானி பரிபூரணம் கொலை செய்யப்பட்டார்.

பொலிஸார் சதாசிவம் இருந்த இடத்திற்குச் சென்றனர். அவரின் மனைவி பரிபூரணம் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதனை தெரிவித்தனர். சதாசிவம் அதிர்ச்சியடைந்தார். தான் காலை 10.30 மணிக்கு வீட்டை விட்டு வரும்பொழுது வாசல் வரையும் வந்து ருக்ஷோவில் ஏற்றிவிட்டார் என பொலிஸாரிற்கு கூறினார். உடனடியாக இறந்த மனைவியையும் பிள்ளைகளையும் பார்க்க வேண்டுமென சதாசிவம் பொலிஸாரிடம் கேட்டார். சதாசிவம் பார்க்கச் சென்றால் மக்கள் அடித்து நொறுக்கி விடுவார்கள் என்று பொலிஸார் கூறினர்.

18 வயது வேலைக்காரனான வில்லியம் அப்பொழுது வீட்டில் இல்லை. அவனை பொலிஸார் தேடத் தொடங்கினர். பொலிஸாரின் வலை வீச்சில் அகப்படாமல் வில்லியம் நழுவிக்கொண்டே வந்தான். வில்லியம் பரிபூரணத்தின் தாலிக்கொடியை நூறு ரூபாவிற்கு விற்ற கடையை பொலிஸார் கண்டுபிடித்தனர். அதன் பின் பொலிஸார் வில்லியத்தை ஒக்டோபர் மாதம் 20ந் திகதி கைது செய்தனர்.

வில்லியம் தனது முதல் வாக்குமூலத்தில் தானே கொலையைச் செய்ததாக ஒத்துக்கொண்டான். ஆனால் விதி விளையாடியது. பரிபூரணத்தின் தந்தை ராஜேந்திராவோ சதாசிவமே கொலையைச் செய்ததாக நம்பினார். அதன்பின் இரண்டாவது வாக்குமூலத்தை வில்லியம் கொடுத்தான். தான் குசினியில் தேங்காய் திருவிக்கொண்டிருந்தபொழுது சதாசிவம் திடீரென வந்ததாகவும், அன்றுதான் தன்னுடன் முதல்முதலாக கதைத்ததாகவும், தனது கையைப் பிடித்து தனது மனைவியைக் கொலை செய்வதற்கு உதவி செய்யும்படி அழைத்ததாகவும், அதற்கான காசு தருவதாகவும் கூறியதாக வாக்குமூலம் கொடுத்தான்.

இருவரும் மேல் மாடிக்குச் சென்றபொழுது பரிபூரணம் கட்டிலில் இருந்து படித்துக்கொண்டிருந்ததாகவும், அப்பொழுது சதாசிவம் திடீரெனப் பாய்ந்து கழுத்தை நெரித்ததாகவும், அப்பொழுது பரிபூரணம் சத்தம் போட்டுக்கொண்டு கழுத்துப்பிடியிலிருந்து தப்புவதற்காக முயற்சித்ததாகவும், தான் பரிபூரணத்தின் அரையைப் பிடித்து அழுத்தியதாகவும், அப்பொழுது பரிபூரணம் தனது முகத்திலும் கைகளிலும் விறாண்டியதாகவும் வாக்குமூலத்தில் வில்லியம் தெரிவித்திருந்தான். அதன்பின் தான் பரிபூரணத்தின் பாதங்களைப் பிடித்து அழுத்தியதாகவும், சதாசிவம் பரிபூரணத்தின் குரல்வளையை நெரித்ததாகவும், குரல்வளை முடறு உடைந்த சத்தம் தனக்கு கேட்டதாகவும், அதன் பின் பரிபூரணத்தின் கைகால்கள் அசையவில்லையென்றும், சதாசிவம் பரிபூரணத்தை கட்டிலிலிருந்து வீழ்த்தி சப்பாத்துக் காலால் கழுத்தில் உதைத்தாரென்றும், அதன்பின் பரிபூரணத்தின் அலுமாரியைத் திறந்து அங்கிருந்த ரூபா 3 ஆயிரத்தை எடுத்து தனக்கு கொடுத்ததாகவும், கழுத்திலிருந்த தாலிக்கொடி மற்றும் சங்கிலி, காப்புகளை கழற்றி சதாசிவம் தனக்குத் தந்து விற்று காசு எடுக்கும்படி கூறியதாகவும், சதாசிவமும் தானும் பிரேதத்தை கராஜ்ஜில் கொண்டுவந்து போட்டதாகவும் வில்லியம் இரண்டாவது வாக்குமூலத்தில் கூறினான். ஒக்டோபர் 20ந் திகதி வில்லியமும் சதாசிவமும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.



கொலையாளி வில்லியம்

நீதிவான் நீதிமன்றத்தில் பூர்வாங்க விசாரணை நடைபெற்றது. உயர் நீதிமன்றத்தில் சதாசிவத்திற்கெதிராக மட்டும்தான் வழக்கு நடைபெற்றது. வில்லியத்திற்கு மன்னிப்புக் கொடுக்கப்பட்டு அரசதரப்பு சாட்சியாக மாற்றப்பட்டார். அவரது சாட்சியத்தில் பல முரண்பாடுகள் தென்பட்டன. சதாசிவத்திற்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை. வில்லியத்திற்கு எட்டுக்கு மேற்பட்ட காயங்கள் கழுத்திலும் கைகளிலும் ஏற்பட்டிருந்தன. சதாசிவம் கழுத்தை நெரித்தபொழுது அவரை பரிபூரணம் தனது கைகளால் விறாண்டியிருக்க வேண்டுமென்பதை வில்லியம் தனது சாட்சியத்தில் ஏற்றுக்கொண்டான். காயம் ஏற்படுத்தாமல் கழுத்தை சதாசிவம் நெரித்தபொழுது கால்மாட்டில் நின்ற வில்லியத்திற்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்பதற்கு வில்லியம் தனது சாட்சியத்தில் எவ்வித விளக்கமும் கொடுக்கவில்லை. வில்லியம் தனது சாட்சியத்தில் பிரேதத்தின் தலைப்பாகத்தை சதாசிவம் தூக்கியதாகவும், தான் கால் பக்கத்தை தூக்கியதாகவும் கூறினான். ஆனால் இறந்தவரின் பாதங்கள், சட்டையில், கழுத்தில் தேங்காய்த் தும்புகளும் குசினிக்கரியும் எப்படி வந்தது என்பதற்கு வில்லியத்தால் பதில் எதுவும் கொடுக்க முடியவில்லை.

சதாசிவத்தின் சட்டத்தரணியான புகழ்படைத்த அரசியல்வாதியும் தலைசிறந்த சட்ட வல்லுனருமான கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா, புகழ்பூத்த சட்ட வைத்திய கலாநிதி சேர். சிட்னி சிமித்தை நாடினார். பிரேதத்தின் பலவிதமான படங்கள் அனுப்பப்பட்டன. சேர். சிட்னி சிமித் ஆய்வுகூடத்தில் பிரேதத்தின் படங்களை ஆய்வு செய்தார். பரிபூரணத்தின் முதுகில் 3 1 2 அடி உயரத்தில் ஆணி குத்தி உரசப்பட்ட காயம் ஏற்பட்டிருந்ததை கண்டுபிடித்தார். அந்த ஆணி எவ்விடத்தில் இருக்கின்றது என்பதனைக் கண்டுபிடித்தால் கொலை எவ்விடத்தில் நடந்தது என்பதை இலகுவில் கண்டுபிடிக்க முடியும் என சிமித் எண்ணினார்.

சேர். சிட்னி சிமித் வழக்கில் இவ்வாறு சாட்சியம் கொடுத்தார். சதாசிவம் கழுத்தை நெரித்திருந்தால் சதாசிவத்தின் முகத்தில், கைகளில் விறாண்டல் காயங்கள் ஏற்பட்டிருக்கும். காலைப் பிடித்துக் கொண்டிருந்த வில்லியத்திற்கு காயங்கள் ஏற்பட்டிருக்க முடியாது. குரல்வளை உடையும்பொழுது ஒரு அடி தூரத்தில் நிற்பவருக்கு கேட்காது. அவரது காது குரல்வளைக்கு மிக அருகாமையில் இருந்தால் மட்டும்தான் முடறு உடையும் சத்தம் கேட்க முடியும். முடறு உடையும் பொழுது குரல்வளையின் நெரிக்கும் கையின் பரிசத்தின் மூலம் அதனை உணர்ந்துகொள்ளலாம். நடந்தது இதுதான். பரிபூரணம் குசினிக்குள் சென்றபொழுது அங்கு நின்ற வில்லியம் பரிபூரணத்தின் மீது பலாத்காரம் செய்ய முயன்றுள்ளான். பரிபூரணத்தை சுவரிற்கு எதிராக நிறுத்தியதால் சுவருடன் அழுத்தி உரஞ்சப்பட்டுள்ளார். அவரது முதுகில் 3 1/2 அடி உயரத்தில் ஆணி குத்தி இரத்தக் காயத்தை உண்டாக்கியுள்ளது. அந்த ஆணியை நானே கண்டுபிடித்தேன். குசினியின் உள் சுவரில் நிலத்திலிருந்து 3 1/2 அடி உயரத்தில் ஆணி இருந்தது. பழைய சிறிய ஆணி. மனித இரத்தம் அதில் காணப்பட்டது. அத்தோடு பரிபூரணம் இறந்ததும் கீழே விழுந்துவிட்டார். அவரது குரல்வளையில் வெறுங்காலால் உதைக்கப்பட்டு காயம் ஏற்பட்டுள்ளது. அந்தக் காயத்திலிருந்து தேங்காய் தும்பின் தூசு எடுக்கப்பட்டுள்ளது. அந்தத் தூசு வில்லியத்தின் காலின் தூசு. இந்த இழுபறியில் பரிபூரணத்தின் உள் பாதங்களில் குசினிக் கரியும் தேங்காய்த் தும்பு தூசும் ஒட்டிக்கொண்டன. வில்லியம் தனது சாட்சியத்தின்படி தேங்காய் திருவிக் கொண்டிருந்ததை ஒத்துக்கொண்டுள்ளான். வில்லியம் தேங்காய் திருவிக்கொண்டிருந்த பொழுதுதான் பரிபூரணம் குசினிக்குள் சென்றுள்ளார். பரிபூரணத்தின் பிரேதம் தூக்கிச் செல்லப்படவில்லை. பக்கத்திலிருந்த கராஜ்ஜிக்கு இழுத்துக்கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதனால்தான் குதிக்காலில் கறுப்புத்தன்மை கொண்ட ஊத்தைகள் ஒட்டிகொண்டன. பல இடங்களில் பாவாடை கிழிக்கப்பட்டுள்ளது. பாவாடை முழுவதும் குசினியின் ஊத்தை தெளிவாக தெரிகின்றது. பாவாடையில் விந்து ஓடிய அடையாளம் தெரிகின்றது. நின்ற நிலையில் புணருகின்ற பொழுது வெளிப்பட்ட விந்து ஓடிய விதம் அவ்வாறே தெரிகின்றது. தலைக்காயம் விறகு, கட்டை போன்ற மரத்துண்டால் ஓங்கி அடித்த காயமாகும். மேல்மாடியிலுள்ள பரிபூரணத்தின் படுக்கையறையை கவனமாக பரிசோதித்துப் பார்த்தேன். அங்கு இக்கொலை நடந்ததற்கான தடயம் ஒன்றையும் நான் காணவில்லை. வில்லியமே இக்கொலையை செய்ததற்கான தடயங்கள் பலவுண்டு. வில்லியத்தின் பலாத்காரத்திற்கு பரிபூரணம் இடம் கொடுக்கவில்லை. சத்தம் போட்டது மட்டுமல்லாமல் வில்லியத்தின் முகத்திலும் கைகளிலும் பரிபூரணம் தனது கைகளால் விறாண்டி காயங்களை உண்டாக்கியிருக்கிறார். அவரை உயிருடன் விட்டால் தனக்கு ஆபத்து எனக் கருதி முதுகு பக்கத்தால் கழுத்தை நெரித்துள்ளான். பரிபூரணம் எவ்வாறு நெரிக்கப்பட்டார் என்பதை சேர். சிட்னி சிமித் நீதிமன்றத்தில் செய்து காட்டினார்.

பொடிஹாமியும் அவரது சாட்சியத்தில் சதாசிவத்தின் மீது கொலைப்பழியை சுமத்தவில்லை. வேறு பல சாட்சியங்கள், நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட்ட தடயப் பொருட்கள் யாவும் சதாசிவம் குற்றமற்றவர் என்று காட்டின. சதாசிவம் குற்றமற்றவர் எனக் கூறி யூறர்கள் தீர்ப்பளித்தனர். சதாசிவம் விடுதலை பெற்றார். உண்மையான குற்றவாளி வில்லியமும் நிம்மதியாக வீடு சென்றான்.



வைத்திய கலாநிதி சேர். சிட்னி சிமித்துடன்
சட்டத்தரணி K.C. நடராஜா

# புரிந்துகொள்ள வேண்டிய 'புரிதல்'

றொஷானி செந்தில் செல்வன்

எங்களில் எத்தனையோ பேர் தங்களின் வாழ்க்கை 'நரகமாகிவிட்டது', 'சொர்க்கமாகிவிட்டது' என்றெல்லாம் அலட்டிக்கொண்டே இருக்கிறார்கள். மறந்து தற்செயலாக ஏன் என்று கேட்டால் போதும். பக்கத்து வீட்டுக்காரன்ல இருந்து பின்னால திரிஞ்சு காதலித்த காதலிவரை காரணம் சொல்ல கூப்பிடுவினம். இவற்றை எல்லாம் தீர்மானிக்கப்போவது நான்கெழுத்து மந்திரம்தான். அது வேறொன்றும் இல்லை. 'புரிதல்'. ஒரு சமூகக் கட்டமைப்பில் வாழத்தொடங்கிய பிறகு புரிதல் இல்லாத வாழ்க்கை வாழ்வது என்பது சாத்தியமற்றது.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலயும் பலவிதமான உறவுகள் இருக்கின்றன. அந்த உறவுகளுக்கு நிகராக சிக்கல்களும் இருக்கத்தான் செய்யும். உங்களது செயற்பாடுகள் அதிகமாகும் போது உறவுகளின் எண்ணிக்கையும் அதிகமாகும். சிக்கல்களும் அதிகரிக்கத்தான் செய்யும். அந்த சிக்கல்களுக்குப் பயந்து நாம் உறவுகளை வெட்டிவிட முடியாது. உறவுகள் அதிகரிக்க அதிகரிக்க புரிதலை அதிகரித்துக்கொண்டே போவதில்தான் பிரச்சினையே இருக்கிறது. நீங்கள் ரூமில் இருப்பவராக இருந்தால்கூட இருப்பவரைப் புரிந்து கொண்டால் போதும். அதே நேரம் பலரை நிர்வகிக்கும் நிலையில் இருந்தால் நீங்கள் அத்தனை பேரையும் புரிந்து கொள்ளுதல் அவசியம். உங்களை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என நினைப்பது தவறானது.

அப்போதுதான் சூழ்நிலைக்கேற்ற மாதிரி அவர்களை இயக்க முடியும். அனைவரும் என்னைப் புரிந்துகொள்ள வேண்டும் என நினைத்தால் அது பகல் கனவுதான். அதற்காக எல்லோரையும் புரிந்துகொள்ள முடியாது. நல்ல நண்பர்கள்போல் பழகிக்கொண்டு பிறருடன் சேர்ந்து சதித் திட்டம் தீட்டுபவர்களை ஒன்றும் செய்ய இயலாது. இயலுமானவரை எவ்வளவு முயற்சிக்கிறீர்களோ அவ்வளவும் போதும். மனிதனால் குறிப்பிட்டளவுதான் ஊகிக்க முடியும். குறிப்பிட்ட எல்லைவரைதான் எதையும் பொறுத்துக் கொள்ள முடியும். புரிந்துகொள்ளும் போதுதான் உறவுகள் நெருக்கமாகும் வாய்ப்புள்ளது. அடுத்தவர் உங்களை புரிந்துகொள்ளவே மறுப்பதாக நினைக்கக் கூடாது. பிறர் உங்களை நன்றாக புரிந்துகொள்வதற்கான சூழலை உருவாக்க வேண்டும். (விதண்டாவாதம் செய்பவர்கள் இந்த விதிமுறைக்குள் உள்ளடங்கமாட்டார்கள்). துரதிஷ்டவசமாக மிக நெருக்கமான இருவர் மத்தியில் ஏற்படும் மோதலானது எதிரிகளுக்கிடையில் ஏற்படும் மோதல்களைவிட மோசமாகவே இருக்கும். இதற்குக் காரணம் இருவருடைய புரிதலும் அந்த நேரத்தில் (சற்று) வேறுபட்டிருக்கலாம். அவர்கள் சிலவேளை எல்லைக் கோட்டினைக் கடந்தால் வெறிபிடித்தவர்கள் போல் மாறிவிடுவார்கள். அடுத்தவரின் புரிந்துகொள்ளும் தன்மையை நீங்கள் உணர்ந்துகொள்ளும் பட்சத்தில் அவர்களுடைய குறைபாடுகளையும் திறமைகளையும் இயல்பாகவே ஏற்றுக்கொள்கிறீர்கள்.

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு குணாம்சங்கள் இருக்கும். இவை அனைத்தையும் உங்கள் புரிதலுக்கு கொண்டுவந்து விட்டால் உங்கள் விருப்பம்போல் உறவுகளை அமைத்துக் கொள்ளலாம். உங்களுடைய வாழ்வில் ஒவ்வொருவருடைய உறவும் எப்படி இருக்கவேண்டும் என முடிவு செய்பவர் நீங்களாக இருக்க வேண்டுமானால் உங்கள் புரிதலுக்குள் அனைத்தையும், அனைவரையும் கொண்டுவாருங்கள். மனிதர்களின் பைத்தியக்காரத்தனத்தையும் தாண்டி அவர்களைப் புரிந்துகொள்ளும் மனப்பக்குவத்தை உங்களுக்குள் ஏற்படுத்த வேண்டும். உங்களைச் சுற்றி அருமையான மனிதர்கள் இருக்கிறார்கள். அவ்வப்போது சில சமயம் சில நிமிடங்களுக்கு அவர்கள் பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்வார்கள். இதனைப் புரிந்துகொள்ளாவிட்டால் நீங்கள் அவர்களை இழக்க நேரிடும். புரிந்து கொண்டால் அவர்களைக் கையாளும் விதம் உங்களுக்குத் தெரிந்துவிடும். வாழ்க்கை ஒருபோதும் நேரான கோடு அல்ல. புரிந்துகொள்ளும் தன்மையை நீங்கள் இழந்தால் உங்கள் செயல் திறனையும் இழக்க நேரிடும். சுற்றியுள்ளவர்களை இயலுமானவரை புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். புரிதல் என்பது சாலச்சிறந்த மருந்து.

(மேற்கூறியது இவர்களுக்கு பொருத்தமாகாது - புரிந்துகொள்ளும் தன்மை இல்லாதவர்களுக்கு எடுத்தெறிந்து நடப்பவர்களுக்கு, நண்பனாகப் பழகிக்கொண்டு தீயவர்களுடன் சேர்ந்து துரோகமிழைக்க நினைப்பவர்களுக்கு, தாங்கள் சொன்னதே சரியென்று விடாப்பிடியாக இருப்பவர்களுக்கு)



நேரடி ரிப்போர்ட்

# கிடைக்குமா தீர்வு?

**சு. சத்தியா**

வடக்கில் தற்போது மக்கள் மீள்குடியேற்றப்பட்டு வரும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் காணிகள் தொடர்பிலான பிரச்சினை எழுந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. 30 வருடகால யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட பின்னர் வன்னிப்பகுதியிலிருந்து இறுதி யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த மக்கள், தத்தமது சொந்த இடங்களில் மீளவும் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் கடந்த ஆண்டுகளில் யுத்தம் மிகவும் இறுக்கமாக நடைபெற்ற காலப்பகுதியில் வன்னியிலிருந்து வெளியேறி உள்ளூர் மற்றும் வெளிநாடுகளுக்குச் சென்று வசித்த மக்கள் மீண்டும் தமது பிறந்த மண்ணிற்கு திரும்புவதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இதனால் மீள்குடியேற்ற கிராமங்களில் வசித்துவரும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கும் வன்னிப் பகுதியைச் சொந்த இடமாகக் கொண்டவர்களுக்கும் இடையில் காணிப்பிரச்சினை தோன்றியுள்ளது. இக் காணிப்பிரச்சினையினால் வன்னிமாவட்டம் அல்லாத வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதிகமாக பாதிக்கப்பட்டு வருகின்றனர். இது தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக வன்னி மாவட்டத்திற்குச் சென்று அங்குள்ள மக்களின் காணிப் பிரச்சனைகள் தொடர்பாக ஆராய்ந்தோம்.

வவுனியா வடக்குப் பகுதியில் அமைந்துள்ள நெடுங்கேணி பிரதேசத்தில் வசித்து வருபவரான சுப்ரமணியம் முருகேசன் காலி மாவட்டத்தை சொந்த இடமாகக் கொண்டவர். இவர் கடந்த 1977 ஆம் ஆண்டு இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக சொந்த இடத்திலிருந்து இடம்பெயர்ந்து வன்னிப்பகுதியில் வாழ்ந்து வந்துள்ளார். அதன் பின்னரும் பல தடவைகள் இடப்பெயர்வுக்குட்பட்ட இவர், 2009 ஆம் ஆண்டு இறுதி வன்னி யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு பாதிக்கப்பட்டு வவுனியா நலன்புரி நிலையமொன்றில் வசித்து பின்னர் அங்கிருந்து நெடுங்கேணியில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளார். இவ்வாறு மீள்குடியேற்றப்பட்டுள்ள இவருக்கு சொந்தக் காணி இல்லாமை முக்கிய பிரச்சினையாக காணப்படுகின்றது. 'எமக்கு சொந்தக் காணி இல்லை. தற்காலிகமாக எங்களுக்கு வழங்கப்பட்ட காணிகளை பறிப்பதற்கான நடவடிக்கைகளும் ஏனையோர்களால் மேற்கொள்ளப்படுகின்றது. முன்னர் இக்காணிகளை கைவிட்டுப் போனவர்கள் மீளவும் காணிகளை பெறுவதற்காக தற்போது வருகின்றனர். அதனால் இப்பிரச்சினை தொடர்பாக அரசாங்க அதிபர் மற்றும் அமைச்சர் பசில் ராஜபக்ஸ ஆகியோர்களுக்கு அறிவிக்க எண்ணியுள்ளோம்' என சுப்ரமணியம் முருகேசன் குறிப்பிட்டார்.

1980 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தெற்கில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக இடம் பெயர்ந்து வன்னிப்பகுதியில் வாழ்ந்து வந்த மக்கள் அநேகமானோரின் நிலை சுப்ரமணியம் முருகேசனை போன்றதாகவே காணப்படுகின்றது. முக்கியமாக மலையகப் பகுதியிலிருந்து வடக்கிற்கு சென்ற மக்களே இதனால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மக்கள் நீண்டகாலமாக வன்னிப்பகுதியில் வாழ்ந்து வருவதன் காரணமாக சொந்த இடத்தில் இருந்த வளங்களையும் இழந்துள்ளனர். சொந்தக் காணிகள் இல்லாமையினால் இம்மக்கள் வீட்டுத் திட்டங்களை பெற முடியாமல் தவிக்கின்றனர்.



காணிகளின்றி உள்ள மக்கள் தொடர்பாக தாம் கவனம் செலுத்தி வருவதாகவும், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு எவ்வாறான வீடுகளை அமைத்து கொடுப்பது என்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவிக்கின்றார்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் காணிப்பிரச்சினை பெரியளவில் இல்லை என தெரிவித்த அம்மாவட்ட அரசாங்க அதிபர் இமில்டா சுகுமார், இவ்விடயம் அரச கொள்கைக்கு உட்பட்டதனால் தன்னாலோ அல்லது உதவி அரசாங்க அதிபரினாலோ எவ்வித தீர்வினையும் முன்வைக்க முடியாதெனவும் முக்கியமாக மலையகத்தவர்கள் வன்னியிலுள்ள தென்னந்தோட்டங்கள் போன்றவற்றில் தொழில் செய்வதற்காக வந்தவர்கள். அதனால் காணி உரிமையாளர்கள் ஒரு சிறிய பகுதியையாவது இவர்களுக்கு வழங்கி அவர்களுடைய பிரச்சினையை சுமூகமாகத் தீர்க்கவேண்டுமெனவும், அவ்வாறு நடைபெறாத பட்சத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாற்று காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை தாம் முன்னெடுக்கவுள்ளதாகவும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் காணிகளை பெறுவதற்காக தற்போது விண்ணப்பித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை இடப்பெயர்வுகள் காரணமாக தனியார் மற்றும் அரச காணிகளுக்கான உறுதிப்பத்திரங்களை இழந்த மக்களும் உள்ளனர். தனியார் காணிகளுக்கான நடைமுறைகள் குறித்து வவுனியா மாவட்ட காணிப்பதிவாளரும் மேலதிக மாவட்ட பதிவாளருமான ஆனந்தி ஜெயரட்ணம் விளக்கமளிக்கையில் 'தனியார் காணிகளுக்கான உறுதிகளை தொலைத்தவர்கள் உறுதிப்பத்திரத்தின் இலக்கம் அல்லது அத்தாட்சிப்படுத்தப்பட்ட திகதி தெரிந்திருப்பார்களானால் அவற்றை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறு அல்லாத பட்சத்தில் காணிப்பதிவாளர் அலுவலகத்தில் தேடுதல் செய்வதன் ஊடாக உறுதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும்' என தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காணிகள் தொடர்பில் அனுமதிப்பத்திரத்தின் பிரதி பெற்றுக்கொள்ளுதல் அல்லது தேடுதல் போன்ற விடயங்களுக்கு தங்களுக்கு உரித்த பிரதேச செயலகங்களை நாட வேண்டுமெனவும் அரச கொடைகளாக வழங்கப்பட்ட காணிகளை பெற்றுக்கொண்டவர்கள் காணிப்பதிவாளர் அலுவலகத்தினை அணுக வேண்டுமெனவும் ஆனந்தி ஜெயரட்ணம் மேலும் கூறினார்.

யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக இங்குள்ள மக்கள் அனைவருமே பல்வேறு இழப்புக்களை சந்தித்துள்ளனர். தற்போது பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் சொந்த இடத்திற்கு திரும்பியுள்ள இம்மக்களுக்கு காணிகள் மிகவும் முக்கியமானதாகும். எந்தப் பாகுபாடும் இன்றி இங்குள்ள மக்கள் அனைவரும் விரும்பக்கூடிய விதத்திலான தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாகும். உரியவர்கள் செய்வார்களா?



சுப்ரமணியம் முருகேசன்

ACC

Asia Cup

# ஆசிய கிண்ணத் தொடர் 2010


இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களா தேஷ் அணிகள் பங்குபற்றும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் இலங்கையில் நடைபெற்று வருகின்றன. 1984 ஆம் ஆண்டு முதல் 2 ஆண்டுகளுக்கொருமுறை ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. சில தடவைகள், போட்டிகள் குறிப்பிட்ட காலங்களில் நடைபெறவில்லை. அதனடிப்படையில் பத்தாவது தடவையாக ஆசிய கிண்ணப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து போட்டிகளும் தம்புள்ள ரங்கிரி சர்வதேச மைதானத்தில் பகலிரவு போட்டியாகவே நடைபெறுகின்றன.

இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுத் தலைவராக அரவிந்த டி சில்வா பொறுப்பேற்ற பின்னர் இடம்பெறும் தொடர் இது. இந்தத் தொடரில் அண்மைக் காலமாக சாதிக்கத் தவறி வரும் சனத் ஜயசூரியாவுக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. அஜந்த மென்டிசையும் நீக்கிவிட்டு நீண்ட நாட்களின் பின் ரங்கன ஹேரத் குழாமில் இணைக்கப்பட்டார். சங்ககார, மஹேல, முரளி, மலிங்க, டில்ஷான், உபுல்தரங்க போன்ற அனுபவ வீரர்களுடன் ஏஞ்சலோ மெத்யூஸ், சாமர கப்புகெதர போன்ற இளம் வீரர்களையும் இணைத்து களமிறங்கி பங்குபற்றிய போட்டிகளில் சிறப்பான வெற்றிகளைப் பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறிய முதல் அணி இலங்கை. இதே அணி சிறப்பாக வழி நடத்தப்பட்டால் எதிர்வரும் உலகக் கிண்ணத் தொடரில் அதிகம் சாதிப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

அண்மைக்காலமாக 20 - 20 உலகக் கிண்ணத் தொடர், சிம்பாப்வே தொடர் ஆகியவற்றில் சாதிக்கத் தவறியதால் பலவிதமான அழுத்தங்களுடன் இந்தியா களமிறங்கியது. யுவராஜ்சிங், யூசுப் பத்தான் ஆகியோர் நீக்கப்பட்ட ஐ.பில்.எல் போட்டிகளில் மும்பை இந்தியன்ஸ் சார்பாக அதிரடியாக விளையாடி அசத்திய சௌரப் திவாரிக்கு குழாமில் வாய்ப்பு வழங்கப்பட்டது.

விரேந்தர் செவாக் 2 போட்டிகளிலும் சாதிக்கத் தவறினார். மீண்டும் உபாதைக்குள்ளானதால் இறுதிப் போட்டியில் விளையாட முடியாத நிலைக்குள்ளாகினார். கௌதம் கம்பீர் மட்டுமே சிறப்பாக பிரகாசித்தார்.

பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகளை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறிய இரண்டாவது அணி இந்தியா. பாகிஸ்தான் அணியை பொறுத்தவரையில் ஒரு வருட இடைவெளியின் பின்





சொகைப் அக்தாருக்கு அணியில் வாய்ப்பு வழங்கப் பட, வந்த வேகத்தில் இலங்கைக்கெதிரான போட்டி யில் 3 விக்கெட்டை வீழ்த்தினார். ஆனால் இந்தியா வுக்கெதிரான போட்டியில் சாதிக்கத் தவறினார். பாக் - கிரிக்கெட் சபையால் தடைசெய்யப்பட்டு பின் ஓரிரு மாதங்களிலே தடை நீக்கப்பட, அணிக் குள் வந்த சொகைப் மலிக் பெரிதாக சாதிக்க வில்லை. அக்மல் சகோதரர்கள் வழமை போல் துடுப்பாட்டத்தில் சாதித்தனர். அணித் தலைவரான ஷாகித் அப்ரிடி இலங்கைக்கெதிரான போட்டியில் அதிரடியாக சதமடித்தார். இவரது ஆட்டமிழப்பின் பின்னரே அந்தப் போட்டியில் இலங்கை வெற்றி பெற்றது.

இந்தியாவுக்கெதிரான போட்டியில் அதிகம் சாதிக்கத் தவறிய அப்ரிடி, பங்களாதேஷ் அணிக் கெதிராக தனது பழைய அதிரடியைக் காட்டினார். 20 - 20 போட்டிகளைப் போல் அதிரடியாக 60 பந்து களில் 4 சிக்சர்கள், 17 பவுண்டரிகள் அடங்கலாக 124 ஓட்டங்களைக் குவித்தார். இது அப்ரிடியின் 6வது சதம். அது மட்டுமன்றி ஒருநாள் சர்வதேச போட்டி யொன்றில் அவரால் பெறப்பட்ட அதிக பட்ச ஓட்டங்களுமாகும். இதைவிட ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டில் அதிக சிக்சர்களை அடித்திருந்த சனத்தின் (270 சிக்சர்கள்) சாத னையை முறியடித்து புதிய உலக சாதனையையும் படைத்தார்.


இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணி 7 விக் கட்டுக்களையிழந்து 385 ஓட்டங்களைக் குவித்தது. இந்த ஓட்ட எண்ணிக்கை தம்புள்ள ரங்கிரி மைதானத்தில் ஒரு அணியால் குவிக்கப் பட்ட அதிகபட்ச ஓட்டங்களாகும். அதை விட 2 அணிகளும் மொத்த மாக 631 ஓட்டங் களைக் குவித்தன. இதுவும் இந்த மைதானத் தில் பெறப்பட்ட மற்றுமொரு சாதனை.

பங்களாதேஷ் அணி தான் பங்குபற்றிய 3 போட்டிகளிலும் தோல்வியைச் சந்தித் தது. இருந்தாலும் தமீம், இக்பால், ஜுனைட் சித்திக் போன்ற வீரர்கள் துடுப்பாட்டத்தில் அதிரடியாய் சாதித்தனர். இன் னும் துடுப்பாட்டத்தில் மேலும் சில வீரர்கள் தமது திறமையை நிரூபித்திருந்தால் எதிரணிக்கு சவாலாக திகழ்ந்திருக்கலாம்.

ஆசிய கிண்ணத் தொடரிலிருந்து பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகள் வெளியேற இலங்கை இந்திய அணிகள் இறுதிப்போட்டிக்கு தயாரா கின்றன. சொந்த நாட்டில் போட்டிகள் நடை பெறுவதால் இலங்கையணி இறுதிப்போட்டியில் வெற்றி பெற்று 'ஆசிய சாம்பியன்' என்ற பட்டத்தை தக்க வைத்துக்கொள்ளும் என்பதே எதிர்பார்ப்பு

குறிப்பு:- இக்கட்டுரை 21.06.2010 நடைபெற்ற போட்டிவரை பெறப்பட்ட முடிவுகளை மையமாக வைத்தே எழுதப்பட்டது.

சீ.கே. மயூரன்





மொழிவாணன்

# காற்றாய் வருவேன் 4

# பழகிவந்தோம் சில காலம்

ஹப்புத்தளையில் இருந்து கொழும்புக்கு வந்த புகையிரதம்,
கொழும்பு கோட்டை ஸ்டேஷன் மூன்றாவது மேடையில் வந்து நின்றபோது,
காலை மணி 7.30தாக இருந்தது.
பயணிகள் எல்லோரும் இறங்கிச் சென்றார்கள்.
எல்லோரும் சென்ற பின் புகையிரத நிலையத்தைச் சேர்ந்த,
சேவகன் ஒருவன் புகையிரதத்தில் ஏறி,
ஒவ்வொரு பெட்டியாக சோதனை செய்தபடியே வந்தான்.
அப்படியே வந்தவன்,
இறுதியாக,
முதலாம் வகுப்பு பெட்டிக்குள் ஏறினான்.
முதலாவது பெட்டியைப் பார்த்துவிட்டு
இரண்டாவது பெட்டிக்குள் ஏறினான்.
உள்ளே ஏறியதும் அவனது விழிகள் வியப்பால் விரிந்தன.
அந்தப் பெட்டிக்குள் இருந்த ஓர் ஆசனத்தில்,
ஒரு பெண் மயங்கிக் கிடந்தாள்.
வியப்புடன் அவள் அருகில் சென்ற சேவகன்
"மெடம்.. மெடம்.. எழுந்திருங்கள். கொழும்பு வந்துவிட்டது"
என்று மெல்லத் தட்டினான்.
ஆனால்,
அவள் எழுந்திருக்கவில்லை.
அவள் இறந்துவிட்டாளா? பரபரப்படைந்த அவன்,
அங்கிருந்து விரைந்து ஓடி,
உயர் அதிகாரிகளுக்கு அறிவித்தான்.
எல்லோரும் ஓடிவந்து பார்த்தார்கள்.
அவள் இறக்கவில்லை. மயங்கிக் கிடந்தாள்.
உடனே அவளை மருத்துவமனைக்கு அனுப்பிய ஸ்டேஷன் மாஸ்டர்,
அவளுடைய பெட்டிகள் இரண்டையும் பொலிஸில் ஒப்படைத்தார்.
இதே நேரம்,
கொழும்பு பொலிஸ் தலைமை அலுவலகத்திற்கு
தகவல் ஒன்று கொடுக்கப்பட்டிருந்தது.
அதில்,
நடந்திருந்த சம்பவம் ஒரு கொலையாகவும் இருக்கலாம்.
என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.
விபத்தில் இறந்திருப்பது,
ஹப்புத்தளையில் இருக்கும் பிரபலமான கிளப் ஒன்றின்
மனேஜரான மனோகரன் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.
அத்தோடு,
அவர் தனது காருடன் 150 அடி அதள பாதாளத்தில்
விழுந்து காரும் நொருங்கப்பட்ட நிலையில்
இறந்துவிட்டார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.
ஆனாலும்,
இது கொலையாக இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்படுவதற்கு,
ஒரு காரணமும் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.
அது,
நள்ளிரவில் கிளப்பிற்கு வந்த, அடையாளம் தெரியாத
ஒரு கன்னிப்பெண் மனோகரனை அழைத்துச் சென்றுள்ளாள்.
இதுவரையில் அந்தப் பெண்ணுக்கு என்ன நடந்ததென்று தெரியவில்லை.
அவள் மாயமாய் மறைந்துள்ளாள்.
விபத்தில் சம்பந்தப்பட்ட பெண்,
ஹப்புத்தளையில் இருந்து மாயமாய் மறைந்துள்ள அதே நேரம்,
ஹப்புத்தளையில் இருந்து கொழும்புக்கு வந்த

புகையிரதத்தில்
ஒரு பெண் மயக்கமுற்ற நிலையில் இருந்திருக்கிறாள்.
பொலிஸாருக்கு இது பெரும் புதிராகவே இருந்தது.
அவளுக்கு மயக்கம் தெரியும் வரையில் எந்தவித
உண்மைகளையும்,
கண்டுபிடிக்க முடியாத நிலையில் இருந்த
பொலிஸார்,
அந்தப் பெண்ணின் பயணப் பொதிகளைச் சோதனை
செய்த போது,
அவள் முகவரி கிடைத்தது.
அதை வைத்து விசாரணைகளை ஆரம்பித்த
பொலிஸார்,
கொழும்பில் இருக்கும் பிரபலமான கம்பனி ஒன்றில்
கடமையாற்றும் அந்தப் பெண் சீதா,
கொழும்பிலேயே தங்கியிருக்கும் ஒரு பெண் என்றும்,
தெரிய வந்தது.
இந்தத் தேடுதலின் போது,
சீதாவின் காதலன் என்று சொல்லிக்கொண்ட,
கமல் என்பவனும் சாட்சியமளித்தான்.
ஹப்புத்தளை நகரவாசிகளுக்கு மனோகரனின்
மரணம்,
சோகத்தைத்தான் கொடுத்தது.
அந்தப் பகுதி மக்களோடு அவன் மிகவும்
அன்பாகத்தான் பழகி வந்தான்.
அதேநேரம்,
அவனுடைய உயிர் நண்பர்களான ராஜா, மோகன்,
குமார் மூவருக்கும்
அவனுடைய இழப்பு பெரும் வேதனையைக்
கொடுத்தது.
உண்மையில் அவன் இறந்துவிட்டான் என்பதை,
இன்னமும் அவர்களால் நம்ப முடியாமல்தான்
இருந்தது.

மனோகரனின் பிணத்தைக் கட்டிப் பிடித்துக்கொண்டு
மூவரும் அழுதார்கள்.
அந்தக் காட்சியைப் பார்த்தவர்களால்
கண் கலங்காமல் இருக்க முடியவில்லை.
அன்று மனோகரனின் இறுதி சடங்கில்
கலந்துகொள்வதற்காக,
மயானத்திற்கு வந்த அவனுடைய நண்பர்களும்
உறவினர்களும்,
சவ அடக்கத்தின் பிறகு,
அவர்களின் இல்லங்களை நோக்கிச் சென்றார்கள்.
மனோகரனின் நெருங்கிய நண்பர்களான ராஜாவும்,
குமாரும் அன்றிரவு,
மனோகரனின் வீட்டிலேயே இருப்பதற்கு
முடிவுசெய்ய,
மோகன் மட்டும்,
இரவு எட்டு மணியளவில் தனது வீட்டுக்குப்
போவதற்காக,
அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு,
கால் நடையாகவே வீட்டிற்குச் சென்றான்.
ஹப்புத்தளையில் இருந்து சுமார் 1 1/2 மைல்களுக்கு
அப்பால்,
புபுளுகம என்ற கிராமத்தில் அவன் வீடு இருந்தது.

டவுனில் இருந்து சுமார் 1 1/2 மைல்
செல்லும்வரையில்தான்
சன நடமாட்டம் அதிகமாக இருக்கும்.
அதன் பிறகு,
மனிதர்களே இல்லாத ஒரு தீவு போலத்தான்
அந்தப் பகுதி காட்சியளிக்கும்.
புதியவர்கள் யாராவது அந்தப் பாழடைந்த பகுதியில்
சென்றால்,
அச்ச மிகுதியால் ஆடிப் போவார்கள்.
ஆனால்,
மோகனுக்கு இது பழகிப்போன ஒரு பகுதி.
தினமும் பாழடைந்த இந்தப் பகுதியால் அவன்
நடந்து செல்வதால்,
எந்த நேரத்தில் போனாலும்,
அவனுக்கு எந்தவிதமான பயமும் ஏற்படுவதில்லை.
இன்றும் அப்படித்தான்.
எந்தவிதமான பயமும் இல்லாமல் அவன்
நடந்துகொண்டிருந்தான்.
பாதி தூரம் வந்திருப்பான்.
அப்போது,
அந்தப் பாதை வழியாக கார் ஒன்று விரைந்து வரும்
ஓசை கேட்டது.
காரின் வெளிச்சம் அந்தப் பகுதிக்கு கொஞ்சம்,



வெளிச்சத்தைக் கொடுத்தது.
கார் போவதற்கு வழிவிட்டு கொஞ்சம் ஒதுங்கி நின்றான் மோகன்.
ஆனால்,
வந்த கார் அவனைத் தாண்டிப் போகவில்லை.
அவன் அருகில் வந்ததும் நின்றது.
கொஞ்சம் வியப்படைந்த மோகன் மெல்லத் திரும்பிப் பார்த்தான்.
தலையில் ஒரு மப்ளரைக் கட்டியபடியே ஒரு பெண் அமர்ந்திருந்தாள்.
அவனைப் பார்த்து மெல்லச் சிரித்தபடியே
"மிஸ்டர் மோகன் என்று நினைக்கிறேன்" என்றாள்.
"ஆமாம்!"
தன்னைப் பெயர் சொல்லி அழைக்கும் அந்தப் பெண் யார் என்று தெரியாமல்,
அவனும் புன்னகையுடன் சொன்னான்.
"உங்களுக்கு என்னைத் தெரியாது என்று நினைக்கிறேன்.
நான் மனோகரனுக்கு அக்கா வேண்டும்.
நீங்கள் தனியே நடந்து போவதாக மாமி என்னிடம் சொன்னார்கள்.
உங்களைச் சந்தித்தால்,
வீட்டருகில் போய் இறக்கி விடச் சொன்னார்கள்"
"ஓ.. அப்படியா. ரொம்ப தாங்ஸ்" என்று வாயெல்லாம் பல்லாக
காரின் பின் கதவைத் திறந்துக்கொண்டு
உடனே உள்ளே ஏறினான் மோகன்.
அவன் உள்ளே ஏறி கதவைச் சாத்திக் கொண்டதும்,
கார் விரைந்து பறந்தது.
இந்த நேரத்தில் வீட்டிற்குப் போவதற்கு,
ஒரு வாகனம் கிடைத்ததையிட்டு மோகன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான்.
அதனால் மௌனமாக போகாமல்,
அந்தப் பெண்ணுடன் ஏதாவது பேசவேண்டும் என்று முடிவு செய்தான்.
"மெடம் நீங்கள் மனோகரனின் அக்கா என்று சொன்னீர்கள்.
கூடப்பிறந்த அக்காவா?" மெதுவாக பேச்சை ஆரம்பித்தான்.
"இல்லை.. சின்னம்மா பெரியம்மா உறவுதான்"
பின்னால் பார்க்காமலேயே அவள் பதில் சொன்னாள்.
"ஆனாலும் மையவீட்டில் நான் உங்களைப் பார்த்த ஞாபகம் இல்லையே?"
ஒருவித சந்தேகத்துடன் கேட்டான் மோகன்.

" ஹி.. ஹி.. ஹி..."
அவன் சொன்னதைக் கேட்டுவிட்டு ஒரு மாதிரியாகச் சிரித்தாள்.
"ஏன்... ஏன் மெடம் சிரிக்கிறீர்கள்?" அவன் ஒருவித நாணத்துடன் கேட்டான்.
" ஏன் மிஸ்டர் மோகன்.. உங்களுக்கு என்னைத் தெரியாதா?
நன்றாகப் பாருங்கள்!"
என்று சொல்லியபடியே தலையில் இருந்த மப்ளரைக் கழற்றிவிட்டு,
மெல்லத் திரும்பினாள் அந்தப் பெண்.
அவள் முகத்தைப் பார்த்ததும்,
"ஹா!"
என்று தன்னையறியாமலேயே அதிர்ந்தான் மோகன்.
" என்ன இப்போது நினைவிற்கு வருகிறதா?"
என்று மீண்டும் கேட்டாள் அவள்

**மர்மம் தொடரும்...**



# இருபது ஆண்டுகளுக்கு பிறகு உங்கள் தோற்றம் காட்டும் இணையத்தளம்

திரைப்பட நட்சத்திரங்கள் மற்றும் கிரிக்கெட் வீரர்கள் வயதான காலத்தில் எப்படி இருப்பார்கள் என்று சித்தரிக்கும் புகைப்படங்கள் இன்டெர் நெட்டிலும் ஈமெயிலிலும் உலா வருவதை நீங்கள் பார்த்திருக்கலாம்.

இந்த படங்களை பார்க்க கொஞ்சம் சுவாரஸ் யமாகத்தான் இருக்கும்.

சரி. இதேபோல உங்கள் தோற்றத்தையும் பார்க்க முடிந்தால் எப்படி இருக்கும்? இப்படி உங்களின் வயதான புகைப்படத்தை பார்க்கும் ஆசை இருந் தால் அதற்கான இணையத்தளம் ஒன்று இருக்கிறது.

இன் டுவன்டி இயர்ஸ் என்னும் அந்த தளத்தில் 20 ஆண்டுகள் கழித்து நீங்கள் எப்படி தோற்றம் தருவீர்கள் என்று பார்த்து மகிழலாம். இதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் உங்கள் அழ கான புகைப்படத்தை இந்த தளத்தில் பதிவேற்று வது மட்டும்தான்.

முக உணர்வு தொழில்நுட்பமான பேசியல் ரெக கனைஷேசன் என்று சொல்லப்படும் உத்தியை பயன்படுத்தி இந்தத் தளம் செயல்படுகிறது.

20 ஆண்டுகளா அல்லது 30 ஆண்டுகளா என்பதை தேர்வு செய்து கொள்ளலாம். குடிப்பழக்கம் அல்லது போதை பழக்கம் உண்டா என்று சொல்லக் கேட்கிறது இந்தத் தளம். அதற்கு முன் ஆணா பெண்ணா என்று சொல்லிவிட வேண்டும்.

முயன்று பாருங்கள்
http://www.in20years.com/

# பெருமதி மிக்க கருவி.

**அன்பழகன்**

புதிய ஒரு கம்பியூட்டரை வாங்கி விட்டால் அதை மிகவும் பாதுகாப்புடன் பராமரிப்பது அவசியம். ஒரு திரைப்படத்தை தத்ரூபமாகப் படம் பிடிக்கக் கூடிய கமராவை அதைவிட அவதானமாகப் பாவிக்க வேண்டியது அவசியம். உலகத்தையே படம் பிடித்துக் கொண்டிருக்கிற செய்மதியை அதைவிட பன்மடங்கு அவதானத்துடன் பராமரிக்க வேண்டியது அவசியம் என்று கூறவும் வேண்டுமோ?

ஆனால் இவையனைத்தையும்விட மிகவும் நுட்பமான கருவி ஒன்றை ஒவ்வொரு மனிதனும் தன்னுடன் வைத்திருக்கிறான். அது அவனுக்கு மட்டுமே உரித்தான சொத்து. அது தான் அவனுடைய உடல். கருவாக உருவான போது ஒரே ஒரு கலமாக இருந்த உடல் இப்போது ஏறக்குறைய 100,000,000,000,000 (ஒரு மில்லியன் கோடி) கலங்களாகப் பிரிந்து பெருகி ஒன்றுடன் ஒன்று இணைந்து சிக்கலான ஒரு இயந்திரம் போன்று தொழிற்பட்டு வருகின்றது. ஏறக்குறைய 210 வகையான கலங்கள் உடலில் உண்டு. இந்தக் கலங்களால் செய்ய முடியாத விடயங்களே இல்லை என்று சொல்லலாம்.

எமது இந்தப் பெறுமதியான உடலைக் குறித்து நாம் கொள்ளும் அபிப்பிராயம் என்ன? உடலைப் பராமரிப்பதற்கு நாம் என்ன நடவடிக்கைகளை எடுக்கிறோம்? கம்பியூட்டர் ஒன்றை வாங்கும்போது கருத்திற் கொள்ளப்படாத ஒரு விடயம்தான் அதனுடைய நிறம். ஒருவருடைய கம்பியூட்டரைப் பார்த்து ஏன் இந்த நிறத்தில் வாங்கினீர்கள் என ஒருவர் குறைப் பட்டுக் கொண்டால் அவருடைய கம்பியூட்டர் அறிவு பூச்சியம் என்பது கண்கூடு. ஆனால் அதைவிடப் பன்மடங்கு பெறுமதியும் வல்லமையும் மிகுந்த மனித உடலின் நிறத்தைக் குறித்து ஒருவர் பெருமையோ அல்லது சிறுமையோ கொண்டால் அவருடைய அறிவு நிலையை எங்கே வைப்பது.

மற்றவர்களை விடுங்கள். ஒருவர் தனது சொந்த உடலின் தன்மையைக் குறித்து என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளார்? ஒருவர் தனது உடலின் தன்மை குறித்து ஆரோக்கியமான அபிப்பிராயம் கொண்டிருந்தால் மட்டுமே அதைச் சரியான முறையில் பராமரித்து உச்ச பயனை அடைய முடியும். சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்டலாம் என்பது பழமொழி.

ஒவ்வொருவருடைய உடலும் வெவ்வேறு விதமான ஆற்றல்களைக் கொண்டுள்ளது. அந்த ஆற்றலைக் கண்டுபிடித்து அவற்றை வளர்த்து அத் துறையில் மேன்மை காண வேண்டும். உடல் ஆற்றலைப் போன்றே உள ஆற்றல்களும் உண்டு. நட்பு மனப்பான்மையுடன் பழகுவதே ஒரு பேராற்றல்தான். ஆற்றல்களின் வகைகளையும் தொகையையும் கணக்கிட முடியாது. அவற்றுள் எது தன்னுடையது என்பதைக் கண்டறிந்து அதை வளர்த்துக் கொண்டால் நிறத்தையும் தோற்றத்தையும் பற்றிய சர்ச்சை அர்த்தமற்றதாகிவிடும்.

வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்கள் திறமையாகச் செயற்படுபவர்கள் ஆகியோரின் நிறத்தையும் தோற்றத்தையும் பற்றிய விமர்சனங்கள் சமூகத்தில் ஏற்படுவதில்லை. அவர்களும் அது பற்றிக் கவலை கொள்வதில்லை. பேர்ணாட் ஷோ என்ற அயர்லாந்து அறிஞரிடம் ஒரு அழகிய பெண் சென்று தன்னைத் திருமணம் செய்யச் சொல்லி கேட்டாளாம். பேர்ணாட் ஷோ அழகான தோற்றம் கொண்டவரல்லர். எனினும் அவர் அந்தப் பெண்ணைப் பார்த்து ஏன் என்னைத் திருமணம் செய்ய விரும்புகிறாய் என்று கேட்டார். அதற்கு அவள் எமக்குப் பிறக்கும் குழந்தை உங்கள் அறிவுடனும் எனது அழகுடனும் பிறந்து ஒரு உன்னதமான இடத்தைப் பெறும் என்று கூறினாள். அதற்கு பேர்ணாட் ஷோ நீ சொல்வது சரிதான் ஆனால் நீ நினைப்பதற்கு மாறாக உனது அறிவும் எனது அழகும் சேர்ந்த பிள்ளை பிறந்துவிட்டால் கதியென்ன? என்று வேடிக்கையாகக் கேட்டாராம். தனது தோற்றத்தைக் குறித்து அவர் சந்தோஷமான உணர்வு கொண்டவராக இருந்தமை அவருடைய புகழுக்கு ஒரு காரணம்.

நிறத்தையும் தோற்றத்தையும் மாற்றுவதிலும் அது பற்றிக் கவலைப்படுவதிலும் செலவிடும் நேரத்தினதும் பணத்தினதும் பத்திலொரு பங்கை ஆற்றல்களை வளர்ப்பதில் செலவு செய்தால் அது சந்தோஷத்தைத் தருவதற்கான நீண்ட கால முதலீடு. நாம் முதலீடு செய்யத் தயாரா?





எம். சந்திரசேகரன்

# புறக்கணிக்கப்படும் மலையக மாணவர்கள்



பாதிக்கப்பட்ட மாணவி செல்வி

'எம் புள்ள கொளசிப் டெஸ்ட் எழுதி பாஸ் பண்ணி ரெண்டு வருஷமாச்சி. ஆனா அரசாங் கத்திலயிருந்து கொடுக்கிற எந்தவொரு கொடுப் பனவும் இதுவரைக்கும் கெடைக்கலிங்க...' இது மலை யகத்தில் தோட்டப்புறமொன்றில் வசிக்கும் தாயொருவரின் உள்ளக்குமுறல்.

வருடாவருடம் நாட்டின் அனைத்து பாகங்களிலும் தரம் ஐந்து மாணவர்களுக்காக நடத்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சையின் முக்கியத்துவம் குறித்து புதிதாக ஒன்றும் விளக்கத் தேவையில்லை. ஆனால் இப்பரீட் சையில் மலையக மாணவர்களின் நிலைமைகள் குறித்தே அதிகம் ஆராய வேண்டியுள்ளது. ஏனென் றால் பல மட்டங்களில் பின்தள்ளப்பட்ட நிலையில் கல்வியை மேற்கொள்ளும் இம்மாணவர்கள் சிறு வயதில் பெரியதொரு தேசியமட்டப் பரீட்சையில் பங்குபற்றி அதில் தோற்றினாலும் அல்லது தோல்வி யடைந்தாலும் அவர்கள் ஒவ்வொருவரின் பின்புலமும் நிச்சயமாக ஆராயப்படவேண்டியதே.

அது வட்டவளையைச் சேர்ந்த கரோலினா தோட் டம். அங்குள்ள மக்கள் தேயிலைத் தொழிலையே பிரதானமாக மேற்கொள்கின்றனர். அத்தோட்டத்தில் தான் தனது கணவன் மற்றும் இரண்டு பெண் பிள்ளைக ளுடன் வசித்து வருகிறார் அந்தத் தாய் ஜானகியம் மாள். இவருடைய கணவன் வையாபுரி. முன்பு கரோலினா தோட்டத்தில் தொழிலாளியாகப் பணி புரிந்தவர். காலப்போக்கில் அவருக்கேற்பட்ட நெஞ்சு வருத்தத்தின் காரணமாக தொழிலை இடை நிறுத்திவிட்டு கடந்த பத்துவருட காலமாக புறநகரங் களில் கூலித்தொழில் செய்து வருகிறார். பிள்ளைகள் முதலாமவள் கலாதேவி. வட்டவளை த.ம.வி. இல் தரம் பத்தில் கல்வி பயின்று வருகிறாள். இரண்டா மவள் செல்வி, ஹைலன்ஸ் மத்திய கல்லூரியில் தரம் ஏழில் கல்வி பயில்கிறாள். இவள் கடந்த 2008ம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்திருந்தும் இந்த இரண்டுவருட காலப் பகுதியில் இவருக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் எந்தவொரு புலமைப்பரிசில் கொடுப்பனவோ இது வரையிலும் கிடைக்கப்பெறவில்லையென மன வேதனையுடன் தெரிவித்தார்.

'என்னோட கணவர் மிஞ்சிமிஞ்சிப் போனா மாசத்துக்கு ஒரு ஐயாயிரம் ரூபா சம்பாதிப்பாரு. எனக்கும் ஏற்கனவே இளைப்பு நோய் இருக்கிறதுனால என்னாலயும் அவ்வளவா வேல செய்ய முடியாது. கூடினா மாசம் ஒரு இரண்டாயிரத்தைநூறு ரூபா சம்பா திப்பேன். என் மூத்த பொண்ணும் கொளசிப்புல பெயிலாகிட்டா. அதுனால அங்கயிங்க கடன்பட்டு ரெண்டாவது பொண்ண ரொம்பவும் கஷ்டப்பட்டு படிக்க வச்சேன். அது மாதிரியே 2008 கொள சிப் டெஸ்ட்டுல செல்வி பாஸ் பண் ணுனா. நாங்கயெல் லாம் ரொம்ப சந்தோ ஷப்பட்டோம். அப்போ அவளுக்கு மாசம் மாசம் ஒரு தொகை அரசாங்கத் தால் கொடுப்பனவு வழங்கப்படும்னு

## ஒரு தாயின் உள்ளக் குமுறல்




தாய் ஜானகியம்மாள்

சொன்னாங்க. ஆனா இப்போ ரெண்டு வருஷமாச்சி. அவளுக்குனு சொல்லி எந்தவொரு கொடுப்பனவுமே இதுவரைக்கும் அரசாங்கத்திலயிருந்து கெடைக்கல. நானும் இது விஷயமா எத்தனையே அதிகாரிங்ககிட்ட சொல்லிப்பார்த்தேன். ஆனா இதுவரைக்கும் எந்தவொரு பயனுமேயில்லை. இப்பக்கூட அவளோட படிப்பு செலவ நாங்க கடன்பட்டுத்தான் செஞ்சிக்கிட்டிருக்கோம். அது பரவாயில்ல. இன்னைக்கு நாங்க புள்ளய கஷ்டப்பட்டு படிக்கவச்சா நாளைக்கு அது எங்களுக்கு பயன் கொடுக்கும். ஆனா இவளோட காலத்துல டெஸ்ட் எழுதி பாஸ் பண்ணுன நெறைய புள்ளைங்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படுறதா கேள்விப்படுகிறோம். ஏன் ஏம் புள்ளைக்கி மட்டும் அதெல்லாம் கெடைக்க மாட்டேங்குதுனு தெரியல' என்று கண்களில் நீர் சொரிய வேதனையுடன் கூறினார் ஜானகிஅம்மாள்.

செல்வி கல்விபயின்ற பாடசாலையானது தரம் ஐந்து வரையிலான வகுப்புக்களை மாத்திரம் கொண்ட, பல மட்டங்களில் பின்தள்ளப்பட்ட ஒரு தோட்டப்புறப் பாடசாலையாகும். அங்கு இதுவரை காலமாக கல்விபயின்ற மாணவர்களில் 1994ம் ஆண்டு ஒரு மாணவன் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியதன் பிறகு, கடந்த பதின்மூன்று வருடங்களுக்குப் பிறகு இம்மாணவி சித்தியெய்தியுள்ளார். கல்வியறிவற்ற பெற்றோரைக் கொண்ட இவர், அந்த தோட்டத்திலேயே புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய முதல் மாணவியென்பது குறிப்பிடத்தக்கது. அவ்வாண்டு 136 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் 44 வது இடத்தைப் பிடித்திருக்கும் இவருக்கு இதுவரைகாலமாக அரசாங்க புலமைப் பரிசில் கொடுப்பனவுகள் வழங்கப்படாமலிருப்பது ஏன்?

கல்வி என்பது எல்லோருக்கும் பொதுவானது. ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசமின்றி எல்லோருக்கும் வழங்கப்படவேண்டிய ஒன்று. குறிப்பாக மலையகப் பிரதேசங்களில், அதிலும் இந்த தோட்ட தொழிலாளிகளின் பிள்ளைகள் கல்வி கற்பதில் பொருளாதார ரீதியாக பல்வேறு இன்னல்களை எதிர்நோக்குகின்றனர். அவர்களுக்கு இந்த புலமைப்பரிசில் பெரும் உதவியாக இருக்கின்றது. இருந்தும் அது அவர்களுக்கு உரிய நேரத்தில் வழங்கப்படாதபோது அதில் எவ்வித பிரயோசனமும் இல்லை. இம்மாணவி சித்தியடைந்து இரண்டு வருடமாகியும் இன்னும் புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. மலையக மாணவர்களின் கல்வி விடயங்களில் அக்கறை செலுத்தவேண்டிய மத்திய மாகாணசபை கல்வி அமைச்சு இந்த மாணவியின் விடயத்தில் பாராமுகமாக இருப்பது ஏனோ●



குடும்பத்தினருடன் செல்வி

நம் நாட்டில் ஒலி, ஒளிபரப்புத் துறையில் சிறந்து விளங்கிய, விளங்குகின்ற அறிவிப்பாளர்கள், மற்றும் இயல், இசை, நாடகக் கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் புகைப்படங்களையும் 'இருக்கிறம்' சேகரிக்கின்றது. இன்று எத்தனையோ கலைஞர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்கள் பற்றியும் அவர்களது கலை ஈடுபாடு பற்றிய தகவல்களையும் தபாலிலோ அல்லது மின்னஞ்சலூடாகவோ எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்பவேண்டிய முகவரி

'இருக்கிறம்'
3, டொரிங்டன் அவனியூ,
கொழும்பு 07

மின்னஞ்சல் - irukiram@gmail.com

# நாட்டார் பாடலில் உவமைக் குறிகள்

மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீத்

ஏட்டுக் கல்வி இல்லாத நாட்டு மக்களிடையே எழுதாக்கவிகளாக தொன்றுதொட்டு வழங்கிவரும் பாடல்கள் நாட்டுப்பாடல்கள் எனப்படும். இவை நாட்டார் பாடல்கள், கிராமிய இலக்கியம், ஏட்டில் எழுதா இலக்கியம், நாடோடிப் பாடல்கள், கிராமியப் பாடல்கள், பாமரர் பாடல்கள், மக்கள் கவிதைகள், வாய்மொழி இலக்கியம் போன்ற பெயர்களாலும் அழைக்கப்படுவதுண்டு.

இப்படிப்பட்ட பாடல்கள் எல்லா மொழிகளிலும் உள்ளன. இதேபோல தமிழ் மொழியிலும் இவற்றுக்குக் குறைவே கிடையாது. தமிழ் மொழியில் ஏட்டு மொழி இலக்கியம் எவ்வாறு வளமுடையதாகக் காணப்படுகின்றதோ அதேபோலத்தான் ஏடறியா இலக்கியமும் நல்ல வளமுடையதாக உள்ளன. தமிழர்களுடைய வாழ்வே பிறப்பு முதல் இறப்பு வரையும் பாடல்களால் பின்னிப்பிணைந்துள்ளது இதற்குக் காரணம் போலும். உதாரணமாக குழந்தை பிறக்கும்போது மருத்துவச்சி வாழ்த்துப் பாடுகின்றாள். பின்பு அன்னையானவள் தாலாட்டுப் பாடுகின்றாள். பின்னர் பிள்ளை சிறுவனாக வளர்ந்து தோழர்களோடு விளையாடும்போது விளையாட்டுப் பாடல்களையும், வேடிக்கைப் பாடல்களையும் பாடி மகிழ்கின்றான். காளைப் பருவத்தில் காதல்பாக்களை இசைக்கின்றான். மற்றவர்களோடு சேர்ந்து தொழில் செய்யும்போது தொழிற்பாடல்களைப் பாடி அலுப்பைப் போக்குகிறான். இறை வழிபாட்டிலும் சமூகக் கொண்டாட்டங்களிலும் கலந்துகொள்ளும்



போது பாட அவன் தவறுவதில்லை. பின்பு இறக்கும் போது ஒப்பாரிப் பாடலாகவே அமைகிறது.

இவ்வாறு பாடல் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளதால், எமது நாட்டில் அதிலும் தமிழ் பேசும் மக்களிடையே நாட்டுப் பாடலுக்குக் குறைவே கிடையாது எனலாம்.

இவ்வாறு எமது நாட்டில் நிரம்பிக் கிடக்கின்ற இந்த நாட்டார் பாடல்கள் இயற்கையோடு இரண்டறக் கலந்துவிட்ட நிலையில் பாடப்படுவதால் இப் பாடல்களில் இயற்கை வர்ணனைக்கும், இயற்கையோடு இயைந்த உவமைக் குறிகளுக்கும் குறைவே இல்லை எனலாம். உதாரணமாக ஒரு பிரிவுத்துயரை மனம் எழுந்த பாங்கில், சொல்கின்ற முறை மிக நளினமாக இருப்பதைக் கீழே உள்ள பாடல் எமக்கு நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

"பொன் அவரை பூத்து
பூவோடு சாய்ந்தது போல்
உங்கள் நினைவால் - மச்சான்
உறக்கமில்லை கண்களுக்கு

என்ற இப்பாடலில் "பொன் அவரை பூத்து பூவோடு சாய்ந்ததுபோல்" என்ற உவமானக் குறிகள் இயற்கையோடு ஒன்றித்துக் கலைத்துவம் பெற்று நிற்பதை நாம் அவதானிக்க முடிகின்றது.

பூத்த பொன் அவரை ஏதோ ஒரு காரணத்தால் சாய்ந்து விடுகிறது. சாய்ந்தாலும் இன்னும் பூக்கள் உதிரவில்லை. அதேபோல அவள் கண்களுக்கும் உறக்கமில்லை. மரம் சாய்ந்துவிட்டது. அதே போல அவளும் படுத்துக் கிடக்கிறாள். மரம் சாய்ந்தாலும், பூக்கள் இன்னும் அப்படியே இருக்கின்றன. அவை பிரகாசமாகக் காட்சி தருகின்றன. அதேபோல அவள் சாய்ந்து கிடக்கின்றாள். ஆனால் அவள் கண்களோ இன்னும் மூடிக்கொள்ளவில்லை - உறக்கம் கொள்ளவில்லை. பிரிவு அதற்குக் காரணம் போலும். இதே போன்று இன்னுமொரு பாடல்...

ஆழிக் கடலில்
அலை எழும்பி வாறதுபோல்
நேரத்திற்கு நேரம் - மச்சான்
உங்க நினைவு வந்து போகிறது.

ஆழிக்கடலில் அலை எழும்புகிறது. அதேபோல அவள் உள்ளக்கடலில் அவன் உருவம் நினைவாய் வந்து போகிறது. ஆழிக் கடலில் அலை என்றுமே ஓய்ந்து போவதில்லை. அதேபோல உன் நினைவும் என் உள்ளத்தில் என்றுமே ஓய்ந்து போகாது என்பதை ஆழிக் கடலை உவமைக் குறியாக்கி அவள்

எண்ணத்தை அவனுக்கு எவ்வளவு அழகாக, ஆழமாக, அவதானமாக எடுத்துக் காட்டி விட்டாள் என்பதை எண்ணும்போது இன்னும் இப்படியான பாடல்கள் இல்லையா என்று எண்ணத் தோன்றுகிறது அல்லவா?

இதோ இன்னுமொரு பாடல். இது பிரிவோடு சம்மந்தப்பட்டதல்ல. இப் பாடல் அழகோடு சம்மந்தப்பட்டது. அவன் அழகு அவளை ஆட்கொண்டு விட்டது. அதனால் எழுந்தது மனத்தின் அலைகள், அதிலே உவமைக்குறிகள்.

வேலிக்குமேலாலே
வெள்ள உடம்பு தெரிஞ்ச
செப்பம்கோடைக்குப் பூத்த
கொடி மல்லிகை பூப்
போலிரிக்கி.

வேலிக்கு மேலாலே அவனுடைய வெள்ளை வெளேரென்ற அந்த உடம்பு தெரிந்த அழகை மல்லிகைப் பூவிற்கு ஒப்பிடுகின்றாள். அதுவும் கோடைக்குப் பூத்த கொடி மல்லிகைப் பூ.

மலர்களிலெல்லாம் மிக அழகான மலர் மல்லிகை.

"மாதங்களில் அவள் மார்கழி
மலர்களிலே அவள்
மல்லிகை"

என்ற வேறு ஒரு பாடலும் ஞாபகம் வருகின்றது. அத்தோடு சுகந்தவாசனையுடையதும் மல்லிகைதான். கோடையில் பூக்கின்ற மலருக்கு வாசனை அதிகம். அதனால்தான் போலும் கோடையில் பூத்த கொடி மல்லிகை என்றாள். மேலும் இப்பாடலில் உள்ள வேலி தெரிஞ்ச, செப்பம், இரிக்கி என்ற சொற்களை வைத்தே பெரியதொரு ஆய்வை நடத்தலாம் போல் தோணுகின்றது.





சிறுகதை

# வேர்பாய்ந்த

பரந்தன், முல்லைத்தீவு வீதி இடம்பெயர்ந்து ஓடுபவர்களால் நிறைந்து இருந்தது. கண் கூசியபடி எழும் சூரியக் கதிர்கள் அன்றைய தினத்தை மழையின்றிய தினமாகப் பிரகடனம் செய்தன. வீதிக்கு வருவதும், வாகனத்தைக் கண்டதும் இறங்கி நடப்பதுமாக அந்த வயோதிபரைப் பார்க்க முடிந்தது. கையில் ஒரு தூக்குப்பை வைத்திருந்தார். ஒருசில துணிமணிகள் அதற்குள் இருக்கும் என நினைக்கிறேன். நடக்கும்போது கையோடு இணைபிரியாமல் ஆடுகின்ற கைப்பையில் உடுப்புக்கள் மட்டும்தான் இருக்கிறது என்பதைப் பறைசாற்றியது. காலின் செருப்பு மட்டும் பாதங்களைப் பாதுகாத்துக் கொண்டிருந்தது. வயது கூடிய தோற்றம். ஆனாலும் கூனலில்லாமல் அவரைப் பாதுகாத்தது தேகம். பின்னால் நடந்து கொண்டிருக்கும் என்னைக்கூட துணைக்கு அழைக்காமல் நடந்து செல்லும் அவரது துணிவு கொஞ்சம் பிரமிக்கத்தான் செய்தது. ஒரு உழவு இயந்திரத்தின் இழுவைப் பெட்டியில் சிகரம் மாதிரி மக்கள் நிறைந்து கடந்து செல்வதை பிரமித்தபடி பார்த்தவாறு நின்றார் அவர்.

நெல்லு மூடைகள், உழவுக்கான இயந்திரப் பகுதிகள் நிறைந்து இருக்க, அதன் மேலே இருந்தவர்களும் வாகனமும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்ததே என்பது சொல்லாமலே தெரிந்தது. இழுவைப் பெட்டியின் பின்பகுதியில் இருக்கும் அந்தச் சிறுவன் தனது செல்லப் பிராணியான அந்த நாயை மட்டும் அதன் கயிற்றைப் பிடித்தபடி இருந்தான். வாகனத்துக்குப் பின்னாலேயே பொடிநடையில் நாயும் நடந்து கொண்டிருந்தது. எங்கே போகிறோம் என்று தெரியாத சில வீட்டு நாய்களும் அந்த நாயைப் பார்த்ததும் அதன் பின்னாலே தாமும் நடக்கவென நினைத்து ஓடி வந்தன.

அநாதரவாக தன் எசமானர்களைப் பிரிந்துவிட்ட அல்லது இழந்துவிட்ட பொழுது அவைகளும் ஏதிலிகளாக இருப்பதைப் பார்த்து ஒரு பெருமூச்சு நீண்டு அடிவயிற்றில் இருந்து அவருக்கு வந்திருக்க வேண்டும். கண்களில் காதோரம் வழியாக சூடாய்க் கொட்டிய கண்ணீரைத் துடைத்துக் கொண்டார் அவர். 'பின்னால் சென்று கொண்டிருக்கும் அந்த நாய்களைப் போலவா நானும்..' அவர் பெருமூச்சு அதைத்தான் சொல்லிற்றுப் போலும். நின்று நிலைத்து கொஞ்சம் புத்துணர்ச்சியோடு மீண்டும் வேகமாக நடக்கத் தொடங்கினார் அவர். துவிச்சக்கர வண்டியில் போவோரும் வீதியில் நடப்போருமாக விடுகின்ற சுவாசம் வெப்பக் காற்றாக மாறியிருப்பதை உணர்ந்தார் அவர். பின்னால் திரும்பிக் குரல் கொடுத்தார்.

'தம்பி.. தருமபுரம் எத்தனை மைற்கற்கள் இன்னும் இருக்கும்..?'

'ஏனையா..? இன்னும் நான்கு மைல் இருக்கும்' என உரைத்தேன். அந்தநேரம் பார்த்து இன்னொரு உழவு இயந்திரம் இழுவைப் பெட்டியுடன் வந்து நின்றது. அதில் இரண்டு இளைஞர்கள் இருந்தார்கள். 'தர்மபுரம் வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெயர்ந்தோர் தங்கியிருக்கிறார்கள். அவர்களோடு வீதியோரம் நடப்பவர்களையும் கொண்டு செல்ல உதவி செய்கிறோம்.. நீங்களும் வரலாம்..' என்றார்கள் இளைஞர்கள்.

'நீங்கள் யார்..?' என்றார் பெரியவர்.

'நாங்கள் தொண்டர் சபையில் வேலை செய்கிறோம்.. இடம்பெயர்ந்தவர்களுக்கு உடனடி உதவிகளைச் செய்யும்படி வந்த உத்தரவுக்கமைய வேலைகளைச் செய்கின்றோம்.. ஐயா..' என்றான் இளைஞரில் ஒருவன். எந்தவித உணர்ச்சியுமற்று நின்ற பெரியவர் இழுவைப் பெட்டியில் ஏறினார். அவரைத் தொடர்ந்து நானும் ஏறினேன். பெரியவரின் கோபப் புயலை இல்லைச் சோகப் பிடியை உடைத்தெறிய எண்ணிய நான் 'ஏனையா உங்கள் குடும்பம் இங்கே இல்லையா..?' என்றேன். கண்களில் உதிரும் நீரை ஒரு விரல் துடைக்க.. ஒருசில நிமிடங்களைக் கையிலெடுத்தார் பெரியவர்.

'உங்களின் துன்பதைக் கொஞ்சம் உடைத்து விட்டிருக்கிறேன் போலிருக்கிறது..' என்றேன் நான்.

'இல்லை..' என்ற பெரியவர் 'நீ எங்கிருந்து வருகிறாய்..' என்றபடி தொடர்ந்தார்.

'ஐயா திருக்கேதீஸ்வரப் பகுதியில் ஒரு கடையில் வேலைசெய்தேன் நான்.. இராணுவம் வந்ததைத் தொடர்ந்து ஆறாவது இடமாக இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறேன்..'

'அப்படியானால் என்னைப் போல என்று.. சொல்லு' என்று சொன்னார் பெரியவர்.

பெரியவரின் துயரத்தை உடைத்துச் சுயத்தைக் கிளறிவிட்ட துடிப்பு என்னுள் பெருகியது. 'எங்கிருந்து வருகிறீர்கள் ஐயா..' என கொஞ்சம் உருக்கமாகக் கேட்டேன். 'உனக்கு யாழ்ப்பாண இடப்பெயர்வு தெரிந்திருக்குமென நினைக்கிறேன்.. பார்க்கிற சாடைக்கு அப்பொழுது நீ ஒரு ஒன்பது வயதுக்கும் குறைவாக



# விழுதுகள்

இருந்திருப்பாய் என நினைக்கிறேன்..' என்றார் பெரியவர்.

பெரியவரின் பூர்வீகம் தெரிந்துகொள்ளுகிற உந்தல் என்னுள் உடைத்து எழுந்தது.

'அன்றைக்கு அடிபட்டவன் தொடர்புகள் அற்றுத் துண்டிக்கப்பட்டிருக்கிறேன்..' என்றார் பெரியவர்.

'கொஞ்சம் ஞாபகம் இருக்கிறது ஐயா.. பாம்புகள் நெளியும் நீர்நிலைகளின் ஊடே மக்கள் தலையில் முடிச்சும், சிறியவர்களைக் கையில் கோர்த்தபடியும் நடந்து கைதடி நீரேரியைக் கடந்து சாவகச்சேரி நோக்கி வந்தது எனக்கு ஞாபகம் இருக்கிறது..'என்றபோது கொஞ்சம் உற்றுப் பார்த்தார் பெரியவர்.

'உன் காந்தப் பார்வையை எங்கோ கண்டமாதிரி இருக்கிறது..' என்றார் பெரியவர். அவரின் குடும்பத்து உறவை அறிந்து கொள்ள அவரது இந்தப் பதில் என் வேகத்தை அதிகரித்தது.

'உங்கள் குடும்பம் எங்கே.. என்ன ஆனார்கள் பெரியவரே..' என்றேன்.

'நான் இப்பொழுது வன்னேரிக்குளத்தில் தனியேதான் ஒரு மாட்டுமாலில் பல வருடங்களாக இருந்தேன்.. இலுப்பைக் கடவை.. நாச்சிக்குடா.. வன்னேரி.. அக்கராயன் குளம் எங்கும் அறுவான் வந்து குண்டு போடத் தொடங்கியதும் வெளிக்கிட்டனான் தான். இன்னும் ஓடிக் கொண்டிருக்கிறேன்..' என்றார்.

'நீங்கள் இருந்த வீட்டுக்காரர்..'

'அவர்கள் புறப்பட முன் நான் வெளிக்கிட்டு விட்டேன். அங்கே எல்லாம் குண்டு போட்டு பல வீடுகள் சிதறிவிட்டதென அறிந்தேன்.. நாச்சிக்குடா, வன்னேரி, அக்கராயன் குளம் எல்லாம் பிடித்துவிட்டதாக அரசு அறிவிப்பு வந்ததாக ஒரு செய்தி இணையத்தில் கிடப்பதாக ஒரு தம்பி முறிகண்டியில் சொன்னவன்.. இப்பொழுது கேள்விப்பட்டன் இன்னும் சண்டை அங்கே நடப்பதாக.. நான் இருந்த வீட்டுக்காரரும் வெளிக்கிட்டுத்தான் இருப்பார்.. இடிவிழுந்தான் எறியும் குண்டுகளில்.. யார்தான் அங்கு இருக்க முடியும் என்றார்..' அவர்.

'அப்படியானால் உங்கள் சொந்தக் குடும்பம் எங்கே..'

'யாழ்ப்பாண இடப்பெயர்வு சொன்னேன் தானே.. இலட்சக் கணக்கான மக்கள் கால்மேல் கால் நெரிக்க நடந்து.. ஒருவர்மேல் ஒருவர் விழுந்து.. அல்லோலகல்லோலப் பட்டு நடந்து வருகையில் எனது மகளும் பேரப்பிள்ளைகளும் என்னைக் கைவிட்டு விட்டார்கள்..'

'அப்படியென்றால்..'

'காலில் மிதிபட்டு நடக்க இயலாமல் வழிமாறி பின்னர் கிளாலிக்கடல் ஊடாக கிளிநொச்சி வந்த போதும், தமிழீழ காவற்துறையில் பதிந்தபோதும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை.. தனிமையாக வாழ்ந்து இப்பொழுது கரைதெரியா ஓடம் போலே வாழ்ந்து கொண்டு இருக்கிறேன்.. பின்னர் சிலரின் செய்தியின்படி மகளும் மருமகனும் திருச்சியில் ஒரு அகதிமுகாமில் இருப்பதாகக் கேள்விப் படுகின்றேன்..'

'உங்கள் சொந்த இடம் எது ஐயா?'

'அளவெட்டி.. என்பெயர் கந்தப்பு.. கந்தர் கந்தர் எனச் சொல்வார்கள்..'

'உங்கள் மகளின்பெயர் கமலம் தானே..'

'ஆமாம் தம்பி கமலம் என்மகள். அவளைத் தெரியுமா உனக்கு..'

'நான்தான் உங்கள் பேரன்.. மாறன் தாத்தா.. இலட்சக்கணக்கான மக்களின் இடம்பெயர்வில் அம்மா, அப்பா அனைவரையும் தொடர்பின்றி நடந்தனான். திருக்கேதீஸ்வரத்துக்குச் சென்றேன்... உங்கள் முகத்தைக் கூட இப்பொழுது என்னால் அடையாளம் காண முடியவில்லை... பெயர் மட்டும்தான் காதில் ஒலித்த வண்ணமிருந்தது.. தாத்தா..'

'விடுபட்டுப் போனவர்கள் எடுபட்டுப் போகவில்லை பார்த்தாயா.. காந்தம் என்பார்களே அது சொந்தத்திற்கும் உண்டு பேரா..' அவர் சொல்லி முடிப்பதற்குள்..

'பெரியவர்..' என்று ஏககாலத்தில் அந்த இளைஞர்கள் கூப்பிட்டார்கள்.

'என்ன பெரியவரே இந்தப் போர் உங்களை என்ன மாதிரியெல்லாம் அலைக்கிறது என்ற வேதனை உங்களிடம் தெரிகிறது.. என்ன செய்வது...?'

'இல்லையில்லை.. சுதந்திரம் என்பது சுமையில் இருந்து வரும் ஒரு பிரசவம் தம்பி..'

'தாத்தா..' ஆரத் தழுவிக் கொண்டேன். இறுகப் பற்றியபடி என்னை அணைத்துக் கொண்டிருந்தார் தாத்தா..

'வேர் பாய்ந்த விழுதுகள்' என்ற அந்த இளைஞர்களின் குரல் எங்கள் காதுகளில் விழுந்து கொண்டேயிருந்தது..

**இராசலிங்கன்**

# வாசகர் கருத்து!

15-06-2010 வெளிவந்த இருக்கிறம் பார்த்தேன். நன்றாக இருக்கின்றது. பதிப்பகத்தார் சிறப்பாகவுள்ளது. மற்றும் நேரடி ரிப்போர்ட், சிறுகதை, இலக்கியம் என தொடங்கும் எல்லா ஆக்கங்களும் என்னைக் கவர்ந்துள்ளன. மேலும் சில பக்கங்களை அதிகரித்தால் சிறப்பாக இருக்குமென நினைக்கின்றேன்.

எஸ். நீரஜா, தெஹிவளை

இருக்கிறமின் அபிமான வாசகன் நான். 56 ஆவது இதழில் பிரசுரிக்கப்பட்ட அவருக்கு பாஸ் கிடைத்துவிட்டது என்ற சிறுகதை என்னை வெகுவாக கவர்ந்துள்ளது. பேய்க்கதை சூப்பர். அதற்குத் தக, ஒற்றுமைப்பட வேண்டிய நேரத்தில், இலக்கியம், சட்டம், உளவியல் கட்டுரை என அனைத்து ஆக்கங்களும் நன்றாக இருக்கின்றன. ஆனால் உரிய நேரத்துக்கு இருக்கிறமை பெற்றுக் கொள்வதற்கு வழிசெய்யுமாறு தாழ்மையுடன் கேட்கின்றேன்.

வி. தங்கராஜன், வத்தளை

மிக நீண்ட காலமாக நான் இருக்கிறம் வாசகன். புதிய மாற்றங்களுடன் புத்தகங்கள் வெளிவந்திருப்பது மிக்க மகிழ்ச்சி. எப்படியாவது எல்லோரையும் வாசிக்கத் தூண்டிவிடும் உங்களது முயற்சி வரவேற்கத்தக்கது. எல்லா ஆக்கங்களும் நன்றாக இருக்கின்றன. மருத்துவம், அரசியல், இலக்கியம் ஒரு கலக்கு கலக்குகிறது. இன்னும் முயலுங்கள். எல்லோர் வாயிலும் இருக்கிறம் பற்றிப்பேசவேண்டும் என்பதே எனது ஆசை.

வே. கமலேஸ்வரி, தலவாக்கலை

அண்மைக்காலங்களிலிருந்து இருக்கிறமோடு கூட இருக்கும் வாசகன் நான். இருக்கிறம் சஞ்சிகையானது பல மாற்றங்களுடன் புதுப்பொலிவாக வெளிவருவது கண்டு உண்மையிலேயே மகிழ்ச்சியடைகின்றேன். அத்துடன் கடந்த இதழில் பதிப்பகத்தார் பகுதியில் தெட்டத் தெளிவாக பல விடயங்களை வெளிப் படுத்தியிருந்தீர்கள். அது ஓர் வரவேற்கத்தக்க விடயமாக இருந்தது. இவ்வாறு எமது உணர்வுகளுக்கு உருக் கொடுத்து இருக்கிறமின் பணி வெற்றிப் பாதையில் தொடர என் வாழ்த்துக்கள்.


அ. றெஜிநோல்ட், மட்டக்குளி

இருக்கிறம் சஞ்சிகையின் அண்மைக்கால வாசகன் நான். இதில் வரும் சட்டம் பேசுகிறது, பதிப்பகத்தார் போன்றவை மிகவும் பயனுள்ளவை. மேலும் அறிவியல், இலக்கியம் போன்ற பகுதிகள் இணைக்கப்படுமாயின் மிகவும் நன்றாக இருக்கும். இருக்கிறம் இப்புதிய வளர்ச்சியுடன் தமிழரின் இருப்பிற்கு பணியாற்ற வாழ்த்துகின்றேன்.

பா. யூட், கொட்டாஞ்சேனை

சென்ற இருக்கிறம் பார்த்தேன். அட்டைப்படம் சூப்பர். பார்த்ததுமே வாங்கிவிட்டேன். வழமையைவிட சற்று வித்தியாசமாக இருந்தது. ஒவ்வொரு ஆக்கமும் ஒவ்வொரு ரகம். இளம் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்து கொடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. மேலும் வளர வாழ்த்துக்கள்.

கா. ஜோதீஸ்வரன், யாழ்ப்பாணம்




**வாசகர்களே! இருக்கிறம் பற்றிய உங்கள் விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் தபாலட்டை மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். 'வாசகர் கருத்து' பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கின்றோம்.**

முகவரி- இருக்கிறம்,
3, டொரிங்டன் அவனியூ,
கொழும்பு - 07
மின்னஞ்சல் - irukiram@gmail.com

Photo & Video

# Sri Sugandan's STUDIO




289-1/1, GALLE ROAD,
COLOMBO-6
SRI LANKA.
Tel- 077 7309638, 011 2507265
Email- srisuganthans@yahoo.com

For Video Filming & Photography
Digital Video Filming & Editing
Album Makers (Karizma)
VHS to DVD

# விநியோகஸ்தர்கள் தேவை

இலங்கையிலிருந்து மாதமிருமுறை வெளிவந்து கொண்டிருக்கும் ஜனரஞ்சக பொழுதுபோக்கு சஞ்சிகையான 'இருக்கிறம்' தற்பொழுது நாடுமுழுதும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கென வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளை உள்ளிட்ட பிரதேசங்களிலிருந்து 'இருக்கிறம்' சஞ்சிகைக்கான விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர். இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நாடு முழுவதும் சஞ்சிகையை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்பனை செய்யமுடியும். விநியோகஸ்தர்கள் தங்களது சுயவிபரங்களை கீழுள்ள எமது முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். மின்னஞ்சல் மூலமாகவும் உங்களது சுயவிபரங்களை அனுப்பி வைக்கலாம்.

முகாமையாளர்,
விளம்பர சந்தைப்படுத்தல் பிரிவு,
இருக்கிறம்,
03, டொரிங்டன் அவனியூ,
கொழும்பு 7
தொலைபேசி - 011 - 3150836, 011 - 2555529
மின்னஞ்சல் - irukiram@gmail.com

Jeya Offset Printers, No. 29 St`Sebastian Street, Colombo 12. Tel: 0112 478444